7

உலக வரலாறு



தமிழ்நாட்டுப்
பாட நூல் நிறுவனம்

உலக
வரலாறு

ஏழாம் வகுப்பு

தீண்டாமை ஒரு பாவச் செயல்
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்
தீண்டாமை மனிதத்தன்மையற்ற செயல்

தமிழ்நாட்டுப்
பாட நூல் நிறுவனம்
சென்னை

© தமிழ்நாட்டு அரசு

முதல் பதிப்பு—1982

ஆசிரியர்கள் :

திரு. வி. து. சீனிவாசன்
தலைமையாசிரியர்,
வைணவர் மேல் நிலைப்பள்ளி,
சென்னை.

திரு. தன. இராமச்சந்திரன்
தலைமையாசிரியர்,
இராசா தேசிங்கு அரசு
மேல் நிலைப்பள்ளி,
செஞ்சி, தென் ஆற்காடு மாவட்டம்.

விலை: 2–30

மேலாய்வாளர்கள் :

பேரா. எம். வி. சுப்பிரமணியம்
ஸ்ரீபுரம், திருநெல்வேலி சந்திப்பு.

திரு. தி. க. இராஜகோபாலன்
தலைமையாசிரியர்,
அரசு மேல் நிலைப்பள்ளி,
பாடலூர், திருச்சி மாவட்டம்.

இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய 60 ஜி. எஸ். எம். தாளில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :
ரத்னா ஆஃப்செட் பிரிண்டர்ஸ், சென்னை-600014

பொருளடக்கம்

		பக்கம்
1.	ஆற்றுச் சமவெளி நாகரிகங்கள் ...	1
2.	பண்டைய இந்தியா ...	17
3.	கிரேக்கர்களும் ரோமானியரும் உலக நாகரிகத்திற்கு அளித்த அழியாப் பரிசுகள்	25
4.	கிறிஸ்தவ சமயத்தின் தோற்றமும் வளர்ச்சியும்	34
5.	இஸ்லாம்—தோற்றமும் வளர்ச்சியும் ...	39
6.	இடைக்கால ஐரோப்பா ...	44
7.	இடைக்கால இந்தியா ...	52
8.	ஐரோப்பாவில் நவீன காலத்தொடக்கம் ...	66
9.	கி.பி 16, 17ஆம் நூற்றாண்டுகளில் ஆசியா ...	79
10.	கி. பி. 17, 18ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் நல்லாட்சி புரிந்த வல்லாட்சியாளர்கள்	92
11.	புரட்சியுகம் கி. பி. 18ஆம் நூற்றாண்டு ...	104
12.	ஐரோப்பிய நாடுகளில் தேசிய இயக்கம் (கி. பி. 19ஆம் நூற்றாண்டு) ...	118
13.	18, 19ஆம் நூற்றாண்டுகளில் நடைபெற்ற தொழிற் புரட்சியும் விவசாயப் புரட்சியும் ...	125
14.	20ஆம் நூற்றாண்டின் உலகம் ...	136

கல்வி என்பது யாது? மக்களுக்கு எது தெரியவில்லையோ அதனைக் கற்பிப்பதுதான் கல்வி என்பது தவறானது. மக்கள் சரியாக நடந்து கொள்வதில்லை என்பதால் சரியாக நடந்துகொள்ளக் கற்பிப்பதே கல்வியாகும். எழுத்துகளின் படிவங்களையும் எண்களின் தந்திரங் களையும் இளைஞர்களுக்குக் கற்பிப்பதுதான் கல்வி என்பதன்று. மாறாக, அவர்களின் உடலையும் உள்ளத் தையும் முழுமையாகச் செயற்படுத்துவதும் ஒரு மன்னனைப் போலத் தன்னடக்கத்துடன் வைத்துக் கொள்வதும்தான் கல்வி ஆகும்.

—ஜான் ரஸ்கின்

1. ஆற்றுச் சமவெளி நாகரிகங்கள்

முன்னுரை

எச். ஜி. வெல்ஸ் என்ற அறிஞர் கூறியபடி, என்று மனிதன் ஒரே இடத்தில் பயிர்த்தொழிலை இடைவிடாது நடத்திக் குடியிருந்து ஒரு நகரிலோ அல்லது நகரைச் சார்ந்த இடத்திலோ ஒரு நிலையான ஆட்சிக்குட்பட்டு வாழ்ந்தானோ, அந்த நிலையையே நாகரிகம் என்று கூறுகிறோம்.

உழவின் விளைவே நாகரிகம். உழவுத் தொழிலே மனிதனை ஓர் இடத்தில் நிலையாக வாழச் செய்தது. இதுவே மனிதனை வற்றாத ஆற்று வெளிச் சமவெளி களில் வாழச் செய்தது. இவ்விடங்களில் அதிகக் கஷ்டம் இல்லாமல் மனிதன் தனது தேவைக்கான பொருள்களைத் தேடிக் கொண்டான். அதனால், அவனுக்கு ஓய்வு நேரம் கிடைத்தது; ஓய்வு கிடைத்த மனிதன் தன் ஆற்றலையும் சிந்தனையையும் இயற் கையைத் தன்வயப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுத் தினான். எனவே, முதன்முதல் நாகரிகங்கள் ஆற்றுச் சமவெளிகளில் தோன்றியதில் வியப்பென்ன?

உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் தந்து உற்பத்திப் பொருள்களை ஓரிடமிருந்து வேறிடம் எடுத்துச் செல்ல இயற்கை அமைத்த பாதையாயும் பயன்பட்ட ஆறுகள் பண்டைப் பழம் பெரும் நாகரிகங் களின் பிறப்பிடமாகவும் அமைந்ததில் வியப்பென்ன?

இவ்வாறு முதன்முதலில் மனிதன் நிலைத்து வாழ ஆரம்பித்த இடங்கள் **எகிப்து** (நைல் நதிச் சமவெளி)

மெசபடோமியா (டைகரிஸ் நதிக்கும் யூப்ரடிஸ் நதிக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி), சிந்துச் சமவெளி, மற்றும் ஹோயாங்ஹோ அல்லது மஞ்சள் ஆற்றுச் சமவெளி ஆகியவை. நீர் வளமும் நில வளமும் பொருந்திய



படம் 1. ஆற்றுச் சமவெளி நாகரிகங்கள்

இச்சமவெளிகளில் மக்கள் உணவுக்காக உழைக்கும் காலத்தைக் குறைத்துக் இட்டிய ஓய்வினைச் சூழ் நிலையை எளிதாக்கவும் வளமாக்கவும் பயன்படுத்தினர்.

எனவேதான் வரலாற்று ஆசிரியர்கள் இப்பகுதிகளை **நாகரிகத்தின் தொட்டில்கள்** என வழங்குகின்றனர். இனி அடுத்து வரும் பகுதிகளில் இச்சமவெளிகளில் விளங்கிய நாகரிகங்களின் குறிப்பிடத்தக்க பகுதிகளை நாம் காண்போம்.

(அ) நைல் ஆற்று நாகரிகம்
(அல்லது)
எகிப்திய நாகரிகம்

1. நைல் ஆற்றின் நன்கொடை

ஹெராடொட்ஸ் என்ற கிரேக்க வரலாற்றுப் பேரா சிரியர் எகிப்து நாட்டை **நைல் ஆற்றின் நன்கொடை** என்று கூறுகிறார். கொடுத்துள்ள படத்தைக் கண்ணுற் றாலே உங்களுக்கு அவர் கூறுவது உண்மை என அறிய முடியும். நைல் நதி மட்டும் அங்குப் பாய்ந்து அந்நிலப் பகுதியை வளப்படுத்தாவிடின் மணலும் மணற்குன்று களும் நிறைந்த பாலைவனத்தைத் தவிர அப்பகுதியில் வேறொன்றையும் காண முடியாது. அங்கு மக்கள் இனமே வாழ்ந்திருக்க முடியாது. பாலை நிலத்தைப் பெருநிலமாக்கும் நைல் ஆற்றை எகிப்தியர்கள் தங்களை வாழவைத்த தெய்வமாகக் கருதினர்.

2. அரசியல்

கிறிஸ்து பிறப்பதற்கு 4,000 ஆண்டுகளுக்கு முன்னரே எகிப்தில் ஒரு சிறந்த நாகரிகம் இருந்தது. எகிப்தை ஆண்ட மன்னர்கள் **பாரோக்கள்** என்று அழைக்கப் பட்டனர். **பாரோ** என்ற சொல்லிற்குப் **பெரிய வீடு** என்று பொருள். நாளடைவில் இச்சொல் **பேரரசன்** என்று பொருள்படும்படி வழங்கலாயிற்று. எகிப்து மக்கள் பாரோக்களைக் கடவுளின் வழித்தோன்றலாகக் கருதி

னார்கள். தங்களை மேம்பட்டவர்களாகக் கருதிய பாரோக்கள் தங்கள் பரம்பரை மாசுபடக்கூடாது, தங்கள் குடும்பத்தை விட்டு அரசுரிமை வெளிச் செல்லக்



படம் 2 நைல் ஆற்றுச் சமவெளி நாகரிகம்

கூடாது எனக் கருதியதால் திருமணங்களைத் தங்கள் குடும்பத்திற்குள்ளேயே செய்துகொண்டனர்.

3. சமயமும் மக்கள் வாழ்க்கையும்

பெரும்பாலான மக்கள் அமைதியாக வாழ்க்கையை நடத்தி வந்தனர். ஓய்வு நேரத்தைக் கலை, களியாட்டங்களில் செலுத்தினர். சரித்திர உணர்வுடன், காலத்தின் தன்மையையும் உணர்ந்திருந்த எகிப்தியர்கள் தங்கள் எண்ணங்களையும் செயல்களையும் கலைக் கோபுரங்களாகவும், வண்ண ஓவியங்களாகவும், கல் வெட்டுகளாகவும் வடித்தனர். உலகிற்கு எண்ணங்களைப் பண்பட்ட எழுத்து வடிவில் அமைக்க முதன்முதல் வழிகாட்டியவர்கள் எகிப்தியர்களே. 'சாவுக்குப் பின் என்ன?' என்ற தத்துவக் கேள்விகளைத் தொடுத்து, அரசியல் முறை அமைத்து, நிலையான ஒரு நாகரிகத்தைப் படைத்த பெருமை எகிப்தியர்களையே சாரும். கப்பல் கட்டுதல், உலோகத் தொழில், தச்சுத் தொழில், கல்வி முறை, வாணிகம், வானநூல், கணிதம், மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளில் முதல் சுவடுகளை ஏற்படுத்தியவர்கள் எகிப்தியர்களே என்றால் மிகையாகாது.

4. எழுத்தும் நூலும்

எகிப்தியர்கள் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தவும் தங்கள் சிந்தனைகளையும் அனுபவங்களையும் அழியாமல் பாதுகாக்கவும் முதன்முதலில் எழுத்துகளைக் கண்டறிந்தனர். இவர்கள் எழுத்து சித்திர வடிவமைப்பைக் கொண்டது. ஒலியை அடிப்படையாகக் கொண்டதன்று. இவ்வெழுத்துகளை **ஹிரோகிளிபிக்ஸ்** என்று கூறுவார்கள்.

ஆங்கிலத்தில் **பேப்பர்** என்று கூறப்படும் சொல் **பேபரஸ்** என்ற பெயரில் இருந்து பிறந்ததாகும். உலகிலேயே முதன்முதலில் எகிப்தியர்கள் பேபரஸ் நாணல் தண்டிலிருந்து தாள்களைச் செய்து அவற்றில் எழுதியும்

படித்தும் வந்தனர். அவர்கள் தாள்களை நூல்வடிவாக்காமல் தாள்களை உருளையில் சுற்றி வைப்பார்கள். எனவே, இவைகளைப் **புத்தகச் சுருள்கள்** என்று சொல்வது பொருத்தமாகும்.

5. சிற்ப, கட்டடக் கலை—பிரமிடுகள்—ஸ்பிங்க்ஸ்

இறப்புடன் வாழ்வு முடிந்து விடுவதில்லை என்று எகிப்தியர்கள் நம்பினார்கள். உயிர் உடலை மீண்டும் நாடும்; சமாதிகள் ஆவிகளின் நிரந்தர உறைவிடங்கள் என்று நம்பிய எகிப்தியர்கள் உடலைத் தைலப்பதமிட்டு அழியாவண்ணம் பாதுகாத்தனர். இவ்வாறு பதமிடப் பட்ட உடல்களை **மம்மிகள்** என்றழைப்பர்.

படம் 3. பிரமிடு-ஸ்பிங்ஸ்

அவரவர் நிலைக்கேற்ப சமாதிகள் சிறியதும் பெரியதுமாய் அமைக்கப்பட்டன. கடவுளின் வழித் தோன்றல் என்று கருதிய பாரோக்களின் சமாதிகள்

அவர்கள் பெருமையினை என்றென்றும் உலகிற்குப் பறை சாற்றும் வண்ணத்தில் வானைத் தொடும் அளவில் பிரும்மாண்டமாகக் கட்டப்பட்டன. இத்தகைய கற்கோபுரங்களைப் **பிரமிடுகள்** என்று எகிப்தியர்கள் அழைத்தனர். அவற்றுள் **கியாப்ஸ்** என்ற பாரோவால் கட்டப்பட்ட பிரமிடே மிகப் பெரிது. 147 மீட்டர் உயரமும், அடியில் நாற்புரமும் 229 மீட்டர் பக்கங்களையும் கொண்ட இந்த பிரும்மாண்டமான பிரமிடைக் கட்ட இருபது ஆண்டுகள் ஆயிற்றாம். இதைக் கட்ட ஒரு லட்சம் ஆட்கள் 20 ஆண்டுகள் வேலை செய்ததாகக் கூறப்படுகிறது. எனவே, இதனைப் பண்டைய ஏழு உலக விந்தைகளில் ஒன்றாகக் கருதியதில் வியப்பில்லை.

எகிப்தின் சிற்பக்கலைத் திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டு மனித முகமும் சிங்க உடலும் கொண்ட ஒரே கல்லினால் செதுக்கப்பட்ட **ஸ்பிங்ஸ்** ஆகும்.

கட்டடக்கலை, சிற்பக்கலை, கால்வாய்கள் வெட்டுதல் போன்றவைகளை உலகிற்கு முதன்முதலாகக் காட்டிய பெருமை எகிப்தியர்களுக்கே உரித்தாகும்.

(ஆ) மெசபடோமிய நாகரிகம்–சுமேரிய நாகரிகம்

1. வளமிகு பிறைநிலம்

மேற்கு ஆசியாவின் வரைபடத்தை நோக்கினால் யூப்ரடிஸ், டைகரிஸ் என்னும் இரண்டு ஆறுகள் தனித் தனியே தோன்றி, பின் இவை இரண்டும் ஒன்று சேர்ந்து பாரசீக வளைகுடாவில் கலப்பதைப் பார்க்கலாம். இவ்விரு ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதியை **மெசபடோமியா** என்று கிரேக்கர்கள் அழைத்தார்கள். கிரேக்க மொழியில் இதன் பொருள் 'இரண்டு ஆறுகளுக்கு

இடைப்பட்ட சமவெளி' என்பதாகும். இச்சமவெளியில் பழங்காலத்தில் வாழ்ந்த சுமேரியர்கள் ஒரு சிறந்த நாகரிகத்தை வளர்த்தனர்.



படம் 4. யூப்ரடிஸ், டைகரிஸ் ஆற்றுச் சமவெளி நாகரிகம்

2. சுமேரிய நாகரிகத்தின் முக்கிய அம்சங்கள்

முதன்முதல் கருத்து வடிவான எழுத்துமுறையை உலகுக்கு அளித்த பெருமை சுமேரியர்களையே சாரும். ஈரமான களிமண் பலகைகளின்மீது கூரிய கருவிகொண்டு 'ஆப்பு' வடிவமான எழுத்துகளை உருது மொழிபோல்

வல இடமாக எழுதிப் பின்னர் அவற்றைச் சுட்டு நிலை யான ஏடுகளாக அமைத்தனர். இவ்வெழுத்து முறையைக் **கியூனிபார்ம்** என்று அழைக்கிறோம். இதன் பொருள் 'ஆப்பு வடிவமான' என்பதாகும். கியூனிபார்ம் எழுத்து முறையைத் தவிர மற்ற சிறப்பான சுமேரிய நாகரிக அம்சங்கள் பின் வருமாறு: (1) சுழலும் சக்கரத்தைக் கண்டறிந்து அதனைப் பல் வேறு துறைகளிலும் பயன் படுத்தியது. (2) வணிகப் பத்திரங்களை அமைத்தது. (3) செம்மைப்படுத்தப்பட்ட எழுத்துமுறையையும் அதன் மூலம் நூல் நிலையங்களையும் ஏற்படுத்தியது. (4) காலத்தை 60 நொடிகளாகப் பிரித்தது.

படம் 5. கியூனிபார்ம் எழுத்துகள்

3. பாபிலோனியப் பேரரசு – ஹமுராபி – சட்டத் தொகுப்பு

இடைவிடாப் படையெடுப்புகளால் சுமேரிய நாகரிகம் நிலைகுலைந்த பிறகு 'அமோரைட்' இனத்தவர் அவ்விடத்தில் பாபிலோனியப் பேரரசை அமைத்தனர். அமோரைட்டுகள் சுமேரிய நாகரிகத்தையே பின்பற்றினர். 'அமோரைட்' அரசர்களில் தலை சிறந்தவர் **ஹமுராபி** என்பவர். இவர் கி.மு. 2100ஆம் ஆண்டு ஆட்சி புரிந்ததாகச் சொல்லப்படுகிறது. பாபிலோனியாவைத் தலைநகராகக் கொண்டு சீரும் சிறப்புமாக ஆண்ட இவரின் பெருமையை இன்றும் நாம் நினைவில் கொள்வதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. இது அவர்

மக்களின் நல்வாழ்விற்காகத் தொகுத்த சட்ட திட்டங்களே. 'ஹமுராபியின் ஆணைகளின் தொகுப்பு' என்று வழங்கும் இத் தொகுப்பு பாபிலோனிய நகரில் அவர் உருவச் சிலையின்கீழ் கல்லில் செதுக்கப்பட்டது. 'பல்லுக்குப் பல்,' 'கண்ணுக்குக் கண்' என்ற அடிப் படையில் அமைக்கப்பட்ட இச்சட்டத் தொகுப்பு விலைகள், ஊதியங்கள், வணிகமுறைகள், வாழ்க்கை நெறிகள், உரிமைகள், கடமைகள் போன்றவைகளின் நெறிமுறைகளை விளக்குகின்றன.

அமோரைட்டுகளின் அழிவிற்குப் பின் போர் களையே வாழ்க்கை நெறியாகக் கொண்ட ஆசிரியர்கள் மெசபடோமியாவைக் கைப்பற்றினர். சுமேரிய நாகரிகம் மறைந்தது.

(இ) சிந்து வெளி நாகரிகம்

1. தோற்றம்

ஏறத்தாழ 5000 ஆண்டுகட்கு முன்னர் சிந்து சமவெளியில் ஒரு சிறந்த நாகரிகம் தோன்றி வட இந்தியாவின் மேற்குப் பகுதி முழுவதும் பரவியிருந்தது. இதன் பெருமை தொல் பொருள் ஆராய்ச்சியாளர்களால் கி.பி. 1922 ஆம் ஆண்டு அவர்கள் **ஹரப்பா, மொகஞ் சதாரோ** என்ற இருவிடங்களில் நடத்திய ஆராய்ச்சிகளின் விளைவாக நமக்குத் தெரியவந்தது. இந் நாகரிகம் கி.மு. 3250 முதல் கி.மு. 2750 வரை இருந்ததாக வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

இந்நாகரிகத்தைச் சார்ந்த மக்கள் எவ்வினத்தைச் சார்ந்தவர்கள் என்பதில் வரலாற்று ஆசிரியர்களி டையே கருத்து வேற்றுமை நிலவி வருகிறது. எனினும், இவர்கள் ஆரியர்களின் வருகைக்கு முன்னரே வாழ்ந் தவர்கள் என்பதில் ஐயமில்லை.

2. நகர அமைப்பு

இந்நாகரிகம் நகர அமைப்பைச் சார்ந்தது. இன்றைய நகரங்களும் வியக்கும் வகையில் திட்டமிட்டுக் கட்டப் பட்ட நகரங்களில் இவர்கள் வாழ்ந்தனர். அந்நகரின்



படம் 6. சிந்து சமவெளி நாகரிகம்

பாதைகள் நேர்ாகவும் சீராகவும் அமைக்கப்பட்டன. குறுக்குப் பாதைகள் செங்கோணத்தில் ஒன்றை ஒன்று வெட்டிக் கொண்டன. மொகஞ்சதாரோவின் பாதைகள் அகலமாக இருந்தன. வீடுகள் சுட்ட செங்கற்களால் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு வீடும் தனக்கென ஒரு குடிநீர்க் கிணறும் குளியலறையும் கொண்டிருந்தது. கழிநீர்க் குழாய்கள் மூடப்பட்டு பாதைக்கடியே ஓடும் பொதுக் கழிநீர்க் கால்வாய்களோடு இணைக்கப்பட்டி ருந்தன. மொகஞ்சதாரோவில் பொதுவான குளம்

ஒன்றும் அதனைச் சுற்றிலும் குளியல் அறைகளும் இருந்தன. ஹரப்பாவில் ஒரு பொதுத் தானியக் கிடங்கு அமைக்கப்பட்டிருந்தது.

3. சமுதாயம்

நகர்வாழ் மக்களாயிருந்த போதிலும் சிந்துவெளி நாகரிக மக்கள் உழவுத் தொழிலையே சிறப்பாகப் பின்பற்றி வந்தனர். ஆடு, மாடு, யானை, ஒட்டகம் போன்ற பிராணிகளை வளர்த்தனர். குதிரைகள் அங்கு கிடையாது. அழகுமிகுந்த அணிகலன்களையும் மண் பாண்டங்களையும் செய்வதில் கைதேர்ந்தவர்களாய் விளங்கினர். கோதுமை, பார்லி முதலியவற்றைப் பயிரிட்டனர். பருத்தி, கம்பள ஆடைகள் நெய்து அவற்றிற்கு வண்ணமூட்டி அணிந்தனர். செம்பு, பித்தளையாலான கருவிகளைப் பயன்படுத்தினர். இவர்கள் இரும்பின் பயனைக் கண்டறிந்ததில்லை. மத குருக்களும் அரசு அலுவலர்களும் சமுதாயத்தில் சிறப்பிடத்தை வகித்தனர். பெரிய அரண்மனைகள் ஹரப்பா, மொகஞ்சதாரோவில் காணாமையினால் அரசுமுறை இல்லாமல் இருந்திருக்கக்கூடும்.

சோழியாடல், சதுரங்கம், நாட்டியம் போன்றவை சிந்து மக்களின் பொழுதுபோக்காயிருந்தன.

4. சமயம்

சிந்து வெளி மக்கள் பெண் தெய்வம் ஒன்றிற்குச் சிறப்பிடத்தை அளித்திருப்பதாக அறியப்படுகிறது. மிருகங்கள் வணங்கும் யோகநிலையில் உள்ள ஒரு தெய்வத்தின் சிற்பம், இவர்கள் சிவனை வணங்கியிருக்கலாம் என நம்புவதற்கு இடம் தருகிறது. இறந்தவர்களைத் தாழிகளில் அடக்கம் செய்யும் வழக்கம் அவர்களிடமிருந்தது.

(ஈ) மஞ்சள் ஆற்றுச் சமவெளி நாகரிகம்

முன்னுரை

பரப்பிலும் மக்கள் தொகையிலும் பரந்து விரிந்து விளங்கும் சீனா பண்டைய நாடுகளில் தனிப் பெரும் சிறப்பினைக் கொண்டது. தெற்கே இமயமலையையும் கிழக்கே பசிபிக் பெருங்கடலையும் இயற்கை அரண்களாகக் கொண்ட இந்நாடு தனக்கென தனித்த நாகரிகத்தை வளர்த்துக் கொண்டது. வெளி உலகோடு மிகக் குறைந்த தொடர்பைக் கொண்டதால் இதன் பெருமை பல ஆண்டுகளாக உலகிற்குத் தெரியாமல் இருந்தது. ஏனைய பிற நாகரிகங்களைப்போலவே இந்நாட்டிலும் ஆற்றங்கரைகளிலேயே நாகரிகங்கள் தோன்றின. எனினும், குறிப்பாக மஞ்சள் நிறமுள்ள வண்டல் மண்ணை அடித்துவந்து பரப்பித் தன் கரைகளைச் செழிப்பாக்கும் மஞ்சள் ஆறான **ஹோயாங்ஹோ** ஆற்றங்கரையில்தான் இந் நாகரிகம் முதலில் தோன்றியது.

1. சமயம்

இயற்கைச் சக்திகளையும் பல தெய்வங்களையும் சீனர்கள் போற்றி வந்தனர். நாளடைவில் பல மெய்யறிவாளர்கள் தோன்றி வாழ்க்கை முறைகளைச் செம்மைப் படுத்தினர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் **கன்பூசியஸ், லாவோட்ஸ்** என்பவர்கள் ஆவர். இதில் 'கன்பூசியஸ்' அரசின் நெறிமுறைகளையும் சமுதாயத் தொடர்புகளையும் சீரிய முறையில் செம்மைப்படுத்தி, அவரின் கொள்கைகள் இன்றளவும் சீனர்களின் வாழ்க்கை முறையில் பிரிக்க முடியா ஒரு வழிமுறையாக ஆக்கி அமைத்தார்.

2. அரசியலமைப்பு

அரசர்கள் இறைவனின் வழித்தோன்றல்களாகக் கருதப்பட்டனர். அரசு அலுவலர்கள், பொதுத் தேர்வுகளின் மூலம் பொறுக்கப்பட்டனர். இவர்களை **மண்டாரின்** என்று அழைத்தனர்.

3. உலக நாகரிகத்திற்குச் சீனர்கள் ஆற்றிய தொண்டு

பட்டு வளர்க்கும் கலையைக் கற்று, பட்டுத் துணி களையே பாரெங்கும் பரப்பிய பெருமை சீனர்களையே



படம் 7. சீனப் பெருஞ் சுவர்

சாரும். இன்று நாம் எழுத உபயோகிக்கும் தாள்களைக் கண்டறிந்த பெருமை சீனர்களையே சாரும். அச்சுத் தொழிலை முதன்முதல் கண்டறிந்தவர்களும் இவர் களே. உலகெங்கும் விரும்பிப் பருகும் தேனீரை நமக்குத்

தந்தவர்களும் இவர்களே. மெருகேறிய மண் கோப்பைகள், வெடிமருந்து, திசைகாட்டும் கருவி, மாவரைக்கும் எந்திரம் போன்றவை இவர்கள் உலகிற்கு அளித்த அழியாப் பரிசுகள். வட திசையிலிருந்து பகைவர்கள் தங்களைத் தாக்காவண்ணம் **ஷிஹ்வாய்டி** என்ற சீன அரசன் கி. மு. 228-ல் ஏறத்தாழ 2880 கி.மீ. நீளமும், 6 மீ. அகலமும், 6மீ. உயரமும் உள்ள **சீனப் பெருஞ்சுவரை** எழுப்பினார். இது உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

வினாக்கள்

I. கோடிட்ட இடங்களை நிரப்புக.

(அ) பாரோ என்பவர் எகிப்து நாட்டின் ———— ஆவார்.

(ஆ) ஸ்பிங்ஸ் என்பது ———— தலையையும் ———— உடலையும் கொண்டது.

(இ) சிந்து வெளி நாகரிகம் ———— இலிருந்து ———— வரை சிறப்புற்றிருந்தது.

(ஈ) சீன அரசியல் அதிகாரிகளை ——— என்றழைத்தனர்.

II. குறுகிய விடை எழுதுக.

1. ஏன் ஆற்றுச் சமவெளிகளில் நாகரிகங்கள் தோன்றின ?
2. எகிப்தை ஏன் 'நைல் நதியின் கொடை' எனக் கூறுகிறோம் ?
3. பிரமிடுகள், ஸ்பிங்ஸ் இவைகளைப்பற்றி நீ அறிவது என்ன ?
4. 'மெசபடோமியா' என்ற சொல்லுக்குப் பொருளென்ன ?
5. சுமேரியர்கள் உலகிற்கு அளித்த பரிசுகள் யாவை ?
6. சீனதத்துவ ஞானிகளைப்பற்றி நீ அறிவதென்ன ?
7. உலக நாகரிகத்திற்கு சீனர்கள் ஆற்றிய தொண்டுகள் யாவை ?

III. சிறு குறிப்பு வரைக.

1. மம்மி 2. ஹிரோகிளிபிக்ஸ் 3. ஹமுராபி.
4. ஆப்பு எழுத்துகள்.

IV. விரிவான விடை எழுதுக.

1. சுமேரிய நாகரிகத்தின் சிறப்பியல்புகளைத் தொகுத்து எழுதுக.
2. சிந்துவெளி நாகரிகத்தைப்பற்றி விவரிக்கவும்.

பயிற்சி

1. உலகப் படத்தில் ஆற்றுச் சமவெளி நாகரிகங்களைக் குறிக்கவும்.
2. பொருட்காட்சி சாலைக்குச் சென்று பண்டைய நாகரிகங்களின் பெருமைகளைக் காண்க.

2. பண்டைய இந்தியா

(அ) ஆரியர்கள்

முன்னுரை

சிந்து சமவெளி நாகரிகத்திற்குப் பின்னர் நமது நாட்டில் சிறப்புற்று விளங்கிய நாகரிகம் ஆரிய நாகரிகம் ஆகும். ஆரியர்கள் ஏறத்தாழ கி.மு. 2000ஆம் ஆண்டில் இந்தியாவில் குடியேறியதாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் வருமுன் இந்தியாவில் இருந்த திராவிடர்கள் ஒரு சிறந்த நாகரிகத்தை வளர்த்து வந்தனர். இரண்டு நாகரிகங்களும் இணைந்து இந்திய நாகரிகமாகத் திகழ்ந்தது. ஆரிய நாகரிகத்தின் முக்கிய அம்சங்களை இப்பாடத்தில் படிப்போம்.

1. ஆரியர் குடியேற்றம்

சிந்து சமவெளி நாகரிகம் முற்றுப் பெறும்போது (கி.மு. 2000) ஆரியர்கள் வடமேற்குக் கணவாய் வழியாக இந்தியாவினுள் நுழைந்தனர் என்று கருதப்படுகிறது. அவர்களின் பழமைக் குடியிருப்பில் வரலாற்று ஆசிரியர்கள் கருத்து வேற்றுமை கொண்டிருந்தாலும் பெரும்பாலானோர் அவர்கள் மத்திய ஆசியாவி லிருந்தே புதிய குடியிருப்புகளை நாடிச் சென்றிருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். அதில் ஒரு பிரிவினர் இந்தியாவில் புகலிடம் தேடி வந்தனர். விரைவில் ஆரியர்கள் **சப்த சிந்து** எனக் கூறப்படும் பஞ்சாப் பகுதி யில் தங்கள் குடியிருப்புகளை நிறுவினர். நாளடைவில் அவர்கள் கங்கைச் சமவெளியிலும் பரவினர். ஆரியர்கள் 'குடியேறிய பகுதி' **ஆரியவர்த்தம்** என்றழைக்கப் பட்டது.

2. சமயம், சமுதாயம்

சிந்து சமவெளி மக்களைப்போல் ஆரியர்கள் நகர

வாழ்க்கையை விரும்பவில்லை. கிராமங்களில் அவர்கள் வாழ்ந்தனர். ஆடுமாடுகள் மேய்ப்பதில் அவர்களுக்கு ஈடுபாடு அதிகம். பேசும் மொழி வடமொழி (சமஸ்கிருதம்). அவர்களின் சமயக் கோட்பாடுகளைக் கூறும் முதல் நூல்களை **வேதங்கள்** என்று அவர்கள் அழைத்தனர். இவற்றில் மிகவும் பழமையானது **ரிக்** வேதமாகும். பின்னர் **யசுர், சாம, அதர்வண** வேதங்கள் தோன்றின. இவர்கள் இயற்கைச் சக்திகளை இறையாகத் தொழுதனர். குடும்பத்தின் தலைவன் தந்தையே. குடும்பங்கள் கூடிவாழ்ந்தன. பெண்கள் மதிக்கப்பட்டனர். விருந்துண்ணல், தேரோட்டம், சூதாட்டம் போன்றவைகளில் தங்கள் ஓய்வு நேரங்களைச் செலவிட்டனர். நெல்லும் கோதுமையும், பாலும், தயிறும், மாமிச உணவும் இவர்களின் முக்கிய உணவுகளாகும். இவர்கள் ஆடுமாடு மேய்த்தும் பயிர்த் தொழில் செய்தும் தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். இவர்களுக்கு நெசவுத் தொழிலும் நன்கு தெரியும். சண்டைக்குரிய கத்தி, ஈட்டி முதலிய ஆயுதங்களைச் செய்யவும், பயிர்த் தொழிலுக்குத் தேவையான கருவிகளைச் செய்யவும், போக்குவரவுக்குரிய வண்டி, தோணி முதலியவைகள் செய்யவும் ஆன தொழில்களில் பலர் ஈடுபட்டனர்.

நாளடைவில் நாட்டின் மக்கள்தொகை பெருகிற்று. எல்லைகள் பிரிவுற்றன. ஒவ்வொரு குடும்பத்தினரும் பல்வேறு தொழில்களைச் செய்ய வேண்டியிருந்தது. ஆதலால், ஆரியர்கள் தங்களுக்குள் சில தொழில் பிரிவுகளை ஏற்படுத்திக் கொண்டனர். நாளடைவில் இப் பிரிவுகள் பிறப்பை அடிப்படையாகக் கொண்டன. இவ்விதமாகச் சாதிகள் தோன்றின.

3. ஆட்சிமுறை

முடியாட்சி முறையை இவர்கள் பின்பற்றினர். அரசனை **ராஜன்** என்றழைத்தனர். அரசனுக்கு அறிவுரை கூற **சபா, சமிதி** என்று இரு குழுக்கள் இருந்தன. ஆட்சியின்

எல்லைகள் விரிய விரிய சபா, சமிதிகள் தங்கள் செல்வாக்கை இழந்தன.

4. இலக்கியம்

வேதகாலத்திற்குப் பிறகு இரண்டு மாபெரும் இலக்கியங்கள் உருவாக்கப்பட்டன. இவைகள் **வால்மீகி** எழுதிய **இராமாயணமும், வியாசர்** எழுதிய **மகாபாரதமும்** ஆகும். இவைகளை இதிகாசங்கள் அல்லது வீர காவியங்கள் என்றழைக்கிறோம். இவ்வைகள் அக்காலத்திய மக்களின் வாழ்க்கையமைப்பை நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன.

(ஆ) சமண, புத்த சமயங்கள்

முன்னுரை

இந்தியாவில் குடியேறிய ஆரியர்கள் வேள்விகளும், சடங்குகளும், மிருகங்களைப் பலியிடுதலும் தங்கள் நல்வாழ்விற்குத் துணைபுரியும் என்று நம்பலாயினர். இத்தகைய யாகங்களை அரசர்களும் பொருள் படைத்தோரும் மட்டுமே செய்தற்கூடுமல்லவா? வடமொழி சமயச்சடங்கு மொழியாக மக்கள் பேசும் மொழியிலிருந்து வேறுபட்டது. எனவே, சடங்குகளின் பொருள்கள் மதிப்பிழந்தன. இத்தகைய சூழலில் இந்நிலையை மாற்றியமைக்க இருபெரும் சமயப் பெரியார்கள் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தோன்றினர். இவர்களின் சீரிய கொள்கைகள், நடத்தைகள் இந்திய சமய சிந்தனையில் பெரும் புரட்சியைத் தோற்றுவித்தன. கருத்து வாதங்களைத் தவிர்த்து வேறு வன்முறைகள் புகுத்தப்படாமல் தோன்றிய இம்மாற்றங்கள் இந்நாட்டின் பெருமையை என்றென்றும் நிலைநாட்டுவதாகும்.

1. மகாவீரரும், சமண மதமும்

வைசாலி அரசப் பரம்பரையில் பிறந்த வர்த்த

மானர் என்ற பெயர் கொண்ட இப்பெரியார் தமது இருபத்தெட்டாம் வயதிலேயே இல்வாழ்க்கையை விடுத்துப் பன்னிரண்டு ஆண்டுகள் மெய்யறிவு பெறும் பொருட்டுக் கடும் சாதனை புரிந்தார். இவரின் பற்றற்ற, பயமற்ற நிலை கண்ட மக்கள் இவரை **ஜீனர்** (வெற்றி கண்டவர்) என்று அழைத்தனர். கொல்லாமை, பிற உயிர்களுக்குத் துன்பமிழையாமை, கருணை இவைகளை அடிப்படையாகக் கொண்டு மெய்யறிவு பெறத் தம் கோட்பாடுகளைத் **திரிரத்தன** (மும்மணிகள்) என்ற சொல்லால் ஈந்தார். ஐம்புலன்களை வென்ற இப்பெரியாரை **மகாவீரர்** என்று மக்கள் அழைக்கலாயினர். மகாவீரர் தம்மை இச்சமண மதத்தைத் தோற்றுவித்தவராகக் கருதவில்லை. தனக்கு முன் வாழ்ந்த இருபத்து மூன்று **தீர்த்தங்கரர்களின்** வழியினையே தான் பின்பற்றுவதாகக் கூறினார்.

பேச்சு மொழியில் எளிதில் புரியும் சமயக் கொள்கைகளைக் கொண்ட சமண மதம் இந்திய மண்ணில் விரைவில் பரவலாயிற்று. சமணப் பேரறிஞர்களின் தொண்டு சமயத்தோடு மட்டுமன்றி அவ்வப்பகுதிகளின் மொழிகளை வளர்த்தலிலும் உதவிற்று. தமிழகத்திலும் சமண சமயம் **கூன் பாண்டியன், மகேந்திரவர்ம பல்லவன்** போன்ற மன்னர்கள் காலத்தில் பரவிற்று. **சந்திர குப்த மௌரியரும்** சமண சமயத்தைச் சார்ந்தவரே. இவர் தமது கடைசி நாள்களைச் சிரவணபெலகோலாவில் கழித்தார் எனக் கூறப்படுகிறது. இன்று ராஜஸ்தானத்திலும், குஜராத்திலுமே சமண சமயத்தினர் காணப்படுகின்றனர். இச்சமயம் நிலைத்து வேரூன்றாமைக்கு இதன் சில கடினமான கொள்கைகளும் பேரரசர்களின் ஆதரவின்மையுமே காரணங்களாகக் கூறப்படுகின்றன.

II. புத்தரும் பௌத்த மதமும்

1. வாழ்க்கை

இமயமலையின் அடிவாரத்தில் சாக்கிய நாட்டின்

சிற்றரசராகிய சுத்தோதனருக்கும் மாயாதேவிக்கும் மைந்தராகப் பிறந்தார் சித்தார்த்தர். இவரை அவரின் குடும்பப் பெயராகிய **கௌதமர்** என்ற பெயரிலும் அழைத்தனர். சோதிடர் கூறிய கூற்றிற்கு அஞ்சித் தம் மகன் எங்கே துறவி ஆகிவிடுகிறானோ என்று பயந்த சுத்தோதனர் அவரைத் துன்பம் தீண்டா இன்பச் சூழலில் வளர்த்தார். மதிநுட்பமும் திறமையும் கொண்ட சித்தார்த்தர் **யசோதரை** என்ற இளவரசியை மணந்தார். இவருக்கு **இராகுலன்** என்ற ஆண் மகவும் பிறந்தது. மெல்லமெல்ல சுக வாழ்க்கை சலிப்புறலாயிற்று. இந்நிலையில் பிணி, மூப்பு, மரணம் போன்ற இயற்கை நிகழ்ச்சிகள் இவர் பார்வைக்கு வந்தன. துன்பம் வாழ்க்கையின் ஒரு பெரும் பகுதி எனக் கண்ட சித்தார்த்தர் இப்பிடிப்பிலிருந்து மனித இனத்தை மீட்க வழியொன்று காண ஒரு நாள் நள்ளிரவில் தன் அன்பு மனைவியையும் மகனையும் விட்டுப் பிரிந்து மெய்யறிவு தேடிச் சென்றார். கடும் சாதனைகளும் மெய்வருத்தம் தரும் நோன்புகளும் பூண்டு மெய் நெறி காண விழைந்தார். முடிவில் தான் கைக்கொண்ட வழிகள் சரியானவை அல்ல எனத் தெரிந்து **கயா** என்ற ஊரில் போதி மரத்தினடியில் அமர்ந்து மெய்யறிவு பெறும்வரையில் இவ்விடத்தை விட்டகலேன் என்ற உறுதி பூண்டார். இதன் விளைவாக இவர் தேடிய வினாக்களுக்கு விடை கண்டார்.

2. போதித்த உண்மைகள்

அவர் கண்டறிந்தது : *(1)* துன்பம் இயற்கை. **(2)** துன்பத்தைப் போக்க வழி உண்டு. **(3)** ஆசையே துன்பத்தின் அடிப்படை. **(4)** விடுதலை பெற எண் வகை வழிகளைப் பின்பற்ற வேண்டும். அவ்வெண் வகை வழிகளாவன பின்வருமாறு:

தூய எண்ணம், தூய செயல், தூய சொல், தூய பிழைப்பு, தூய முயற்சி, மெய்யறிவு, தூய மனம், தூய நம்பிக்கை என்பனவாகும்.

3. புத்த மதம் பரவுதல்

மக்கள் பேசும் பாலி மொழியில் தம் நற்கருத்துகளை கௌதம புத்தர் கூறியது மக்கள் மனத்தில் எளிதில் பதிந்தது. மேலும் தம் கருத்துகளை நாடெங்கிலும் பரப்பத் தேர்ந்தெடுக்கப்பட்ட சீடர்கள் அடங்கிய பௌத்த சங்கத்தை இவர் நிறுவினார். இவர்களின் தீவிர முயற்சிகளின் விளைவாக பௌத்த சமயம் நாடெங்கிலும் பரவலாயிற்று. பின்னர் **அசோகர், கனிஷ்கர்** போன்ற பேரரசர்கள் இச்சமயத்தைத் தழுவி இதனைப் பரப்புதல் தங்கள் கடமை எனக் கொண்டதன் விளைவாக இச் சமயம் நம் நாட்டில் மட்டுமன்றி ஆசியாக் கண்டத்தில் ஏனைய பகுதிகளிலும் பரவலாயிற்று. **பாகியான், யுவான் சுவாங்** போன்ற சீனப் பயணிகள் நம் நாட்டிற்கு வந்து புத்தத்தலங்களைத் தரிசித்தும், புத்த புனித நூல்களைத் திரட்டியும் தம் நாட்டிற்கு எடுத்துச் சென்றனர்.

4. மறைவுக்குக் காரணங்கள்

இவ்வாறு உலகில் இன்றும் நிலவி வரும் பெரும் சமயங்களில் ஒன்றாகத் திகழும் பௌத்த மதம் இந்தியாவில் நிலையாமல் மறைந்தது விந்தையே. இதற்குக் காரணங்கள் பின்வருமாறு :

(1) கி.பி. முதல் நூற்றாண்டில் கனிஷ்கர் காலத்தில் புத்த சமயத்தில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. புதிய புத்த சமயத்தில் புத்தர் கடவுளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அவருக்குத் திருவிழாக்கள் நடத்தப்பட்டன. கோயில்கள் கட்டப்பட்டு புத்தர் உருவச் சிலைகளை மக்கள் வணங்கினர். இந்தப் புதிய புத்த சமயம் **மகாயானம்** என்றழைக்கப்பட்டது. பழைய மதம் **ஹீனயானம்** என்ற பெயர் பெற்றது. மகாயானத்திற்கும் இந்து மதத்திற்கும் அதிக வித்தியாசம் இல்லாதபடியால், புத்த மதம் தனது செல்வாக்கை இழந்தது. சிறப்புக் கொள்கைகளான

கொல்லாமை, துன்பமிழையாமை போன்றவைகளை இந்துமதம் ஏற்றுக்கொண்ட பிறகு இதன் புகழ் மங்கியது.

(2) அசோகர், கனிஷ்கர், ஹர்ஷர் ஆகிய மன்னர்களுக்குப்பிறகு இச்சமயம் பேரரசர்களின் ஆதரவை இழந்தது.

(3) இந்து சமயக் குரவர்களும், நாயன்மார்களும், ஆழ்வார்களும் தங்கள் இடைவிடா முயற்சியால் இந்து மதத்தை மீண்டும் உயிர்ப்பித்தனர். இதன் விளைவால் புத்த மதம் நமது நாட்டில் வீழ்ச்சியடைந்தது.

வினாக்கள்

I. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1 ஆரியர்கள் வட இந்தியாவில் குடியேறிய பகுதிக்கு——— என்று பெயர்.

2. வேதங்கள் ————,————,————,———— என நால்வகைப்படும்.

3. ஆரிய மன்னருக்கு ஆலோசனைக் கூற ————————. இருந்தன.

4. வேத கால இலக்கியங்கள் ————————,————————

5. சமணக் கொள்கைகள் ————,————,———— என்பவையாகும்.

6. ஜினர் என்ற சொல்லுக்கு ———————— என்று பொருள்.

7. சமண சமயத்தைப் பின்பற்றிய மன்னர்கள் ———— ————,————.

8. புத்த மதத்தைப் பரப்பிய அரசர்கள் ————,———— ஆவர்.

9. அசோகர் காலத்துப் புத்த மதம் ———— புதிய புத்த மதம் ———— ஆகும்.

I. **குறுகிய விடை எழுதுக.**

1. ஆரியர்களின் பூர்வீக இருப்பிடம் யாது?
2. மகாவீரரைப்பற்றி இரண்டொரு வரிகள் எழுதுக?
3. சித்தார்த்தர் மனைவி, மகன் பெயர் என்ன?
4. விடுதலை அடைய புத்தர் வகுத்த எண்வகை வழி யாது?

II. **விரிவான விடை எழுதுக.**

1. ஆரியர்களின் சமயம், சமுதாயம் இவற்றினைப்பற்றி, எழுதுக.
2. புத்தரும் பௌத்தமும்—விவரிக்கவும்.

பயிற்சி

1. கொடுக்கப்பட்ட வரைபடத்தில் சிந்து நதி, பஞ்சாப், ராஜஸ்தான், குஜராத், கயா, முதலிய இடங்களைக் குறித்துப் பழகவும்.
2. புத்தரின் வாழ்க்கை வரலாறு, மணிமேகலையின் கதை இவைகளைப் படி.

3. கிரேக்கர்களும் ரோமானியரும் உலக நாகரிகத்திற்கு அளித்த அழியாப் பரிசுகள்

முன்னுரை

ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் கிறிஸ்து பிறப்பதற்கு 4000 ஆண்டுகளுக்கு முன்னரே சிறந்த நாகரிகங்கள் ஆற்றுச் சமவெளிகளில் தோன்றின. ஆனால், ஐரோப்பாவில் கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னர்தான் கிரீஸ் நாட்டிலும், அதற்குப் பின்னர் இத்தாலி நாட்டிலுள்ள ரோமாபுரியிலும் சிறந்த நாகரிகங்கள் தோன்றி வளர்ச்சியடைந்தன. இன்றைய ஐரோப்பிய நாகரிகம் கிரேக்க, ரோமானிய நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டது. கிரேக்கர்களும் ரோமானியர்களும் உலக நாகரிகத்திற்கு ஆற்றிய தொண்டினை இப் பாடத்தில் படிப்போம்.

(அ) கிரேக்கர்கள்

1. தோற்றம்

மத்திய ஆசியாவிலிருந்து புகலிடம் தேடி என்று இந்திய மண்ணில் ஆரியர்கள் அடி வைத்தார்களோ ஏறக்குறைய அதே காலத்தில் அவர்களில் ஒரு பிரிவினர் கிரேக்க மண்ணிலும் காலடி வைத்தனர். நாளடைவில் அவர்கள் என்றும் அழியாப் புகழ் பெற்ற ஒரு நாகரிகத்தை அமைத்தார்கள். பண்டித நேருவின் கூற்றின்படி இன்றைய ஐரோப்பிய நாகரிகம் கிரேக்கப் பரம்பரையில் தோன்றிய ஒரு குழந்தையே என்றால் மிகையாகாது.



படம் 8. பண்டைய கிரேக்க நகர அரசுகள்

2. அரசியல்

மலைகளால் பிரிவுற்ற சமவெளிகளில் சிறுசிறு கிராமங்களில் குடியேறிய கிரேக்கர்கள் நாளடைவில் பல நகர அரசுகளை அமைத்தனர். ஒவ்வொரு நகர அரசும் தன்னாட்சியும் தனிப் பண்புகளும் கொண்டு அமைந்தன. நாம் இன்று நாட்டுப்பற்று கொண்டுள்ளதுபோல் கிரேக்கர்கள் அளவிலா நகரப் பற்றுக் கொண்டிருந்தனர். இப்படித் தோன்றிய நகர அரசுகளில் மிகவும் முக்கியமானவை **ஏதென்ஸ், ஸ்பார்ட்டா, கொரிந்து, தீப்ஸ்** என்பனவாகும்.

இந்நகர அரசுகளில் பல்வேறு அரசு முறைகள் பரிசீலிக்கப்பட்டன. முதன்முதலில் மன்னர்களின் ஆட்சி அமைக்கப்பட்டது. பின்னர் அவ்வாட்சி ஒடுக்கப்பட்டு பிரபுக்கள் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. இப்பிரபுக்களின் உட்பூசல்களைப் பயன்படுத்திச் சில பலம் பொருந்திய தனி மனிதர்கள், சர்வாதிகார ஆட்சிகளை ஏற்படுத்தினர். இவர்களில் பலர் நல்லாட்சியிலும் நாட்டு முன்னேற்றத்திலும் அக்கறைக் கொண்டிருந்தாலும் தனி மனிதனின் சுதந்திரத்தை உயிரினும் மேலாக ஓம்பிய கிரேக்கர்கள் இவ்வாட்சி முறையினையும் ஒழித்து மக்களாட்சியை அமைத்தனர். எனவே, இவ்வாறு பலதரப்பட்ட அரசியல் அமைப்பு முறைகளை ஆராய்ந்த கிரேக்க நாட்டை **அரசியலமைப்பு ஆய்வுக் கூடம்** என்று வரலாற்று ஆசிரியர்கள் சிறப்பித்ததில் வியப்பொன்றுமில்லை. இவ்வாறு கிரேக்கச் சோதனையின் விளைவாக விளைந்த மக்களாட்சி முறையை உலகில் பல நாடுகள் பின்பற்றி வருகின்றன.

ஒவ்வொரு குடிமகனும் நாட்டின் நலத்தில், ஆட்சி முறையில் பங்குபெற வேண்டும். மேலும் நாடு மக்களுக்குத்தான் என்ற கிரேக்க சிந்தனைகள் இன்றும் போற்றப்படுகின்றன. ஏதென்ஸ் நகரில் **பெரிக்கிளிஸ்** என்ற தலைவர் இருந்தபோது மக்களாட்சி சிறப்பாக நடை

பெற்றது. அவ்வாட்சியில் ஒவ்வொரு குடிமகனுக்கும் பங்கு இருந்தது. ஆட்சியில் பங்கு பெற்ற குடிமகனுக்கு ஊதியம் வழங்கப்பட்டது. மக்களாட்சி முறைக்கு ஏதென்ஸ் நகர ஆட்சி எடுத்துக்காட்டாக விளங்கியது.

3. தத்துவம்

மனிதனின் சிந்தனையை ஏன், எதற்காக என்ற வினாக்களுக்கு விடை தேடும் முயற்சியில் தெளிவாக நடத்திய பெருமை கிரேக்க தத்துவ ஞானிகளையே சாரும். 'சிந்தித்துச் செயல்படு', 'உன்னையே நீ அறி' என்று குரல் எழுப்பிய **சாக்ரடீஸை** விஷமிட்டுக் கிரேக்கர்கள் கொன்றாலும், அவர் இட்ட வித்துகள் அவர் வழி வந்த **பிளேட்டோ, அரிஸ்டாட்டில்** போன்ற தத்துவ மேதைகளால் வளர்க்கப்பட்டு இன்றைய ஐரோப்பியத் தத்துவங்களாகத் தோற்றமளிக்கின்றன. இங்கே குறிப்பிடவேண்டிய ஒன்று, அரிஸ்டாட்டிலின் மாணவரான மகா அலெக்ஸாந்தரால்தான் கிரேக்க நாகரிகம் உலகின் பல்வேறு இடங்களுக்கும் பரவியது.

படம் 9. சாக்ரடீஸ்

4. இலக்கியமும் அறிவியலும்

உலக இலக்கியத்திற்கு கிரேக்கர்கள் அரும்பணியாற்றி உள்ளனர். நமது 'இராமாயணம்', 'மகாபாரதம்' போன்ற வீர காவியங்களை 'ஹோமர்' என்ற பெரும் புலவர் அளித்துள்ளார். அவை 'இலியட்', 'ஒடிஸி'

என்ற வீரகாவியங்களாகும். வரலாற்றை வழிமுறைகளோடு முதன்முதலில் தொகுத்த **ஹெரோடொட்டஸ்ஸினை** 'வரலாற்றின் தந்தை' என்று உலகம் போற்றுகிறது. நாடகவிலக்கியம் தோன்றக் காரணமே கிரேக்க நாடக ஆசிரியர்களின் அரும் முயற்சியேயாகும். அவர்களில் சிறந்தவர்கள் **யூரிபிடஸ், சோபோக்ளிஸ், ஈஸ்கைலஸ்** போன்றவர்களாவர். முதன்முதலில் திறந்த வெளி நாடக அரங்குகள் அமைத்து அதன் மூலம் இலக்கியச் சுவைகளையும் அரசியல் கருத்துகளையும் பொது மக்களுக்குப் பரப்பிய பெருமை இவர்களையே சாரும்.

அறிவியலிலும் வியக்கத்தக்க சாதனைகள் புரிந்த பெருமை இவர்களைச் சாரும். நவீன மருத்துவத்திற்கு அடிகோலிய **ஹிபாக்ரடஸ்,** பொறியியல், இயற்பியல் மேதை **ஆர்க்கிமிடிஸ்,** கணித மேதைகள் **பிதாகரஸ், யூக்ரிட்** போன்றவர்கள் இங்கே தோன்றினர்.

5. கட்டடக் கலை, சிற்பக் கலை

சிற்பத்திலும் கட்டடக்கலையிலும் தங்களுக்கு நிகர் தாங்களே என்று பிறர் வியக்குமளவு பல சாதனைகள் புரிந்தனர். சிறந்த சிற்ப மேதை **பீடியாஸ்,** அதீனாவிற்காகக் கட்டிய கோவில் கலைப் பெருமைக்கு ஓர் எடுத்துக் காட்டு.

6. ஒலிம்பிக் பந்தயம்

அறிவழகை மட்டுமன்றி உடலழகையும் கிரேக்கர் விரும்பினர். நான்கு வருடங்களுக்கு ஒரு முறை தங்கள் விளையாட்டுத் திறனைப் புலப்படுத்த ஒலிம்பஸ் என்னுமிடத்தில் கூடி போட்டிகள் நடத்தி வந்தனர். இதன் அடிப்படையாக எழுந்ததே இன்று நாம் காணும் **ஒலிம்பிக் பந்தயங்கள்.**

(ஆ) ரோமானியர்கள்

1. அரசியல்

கிரேக்கர்களைப்போல ரோமானியர்களும் ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள். ஏழு மலைகளின் சூழலில் அமைக்கப்பட்ட **ரோம்** நகரத்தை மையமாகக் கொண்டு இவ்வரசு படிப்படியாக முன்னேறி இத்தாலி, ஸ்பெயின், கிரீஸ், பிரிட்டன் போன்ற நாடுகளைத் தன்வயப்படுத்தியது. ரோமப் பேரரசு விரிவடைவதற்கு உறுதுணையாக இருந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் **ஜூலியஸ் சீசர், அகஸ்டஸ் சீசர்** போன்றவர்களாவர்.

கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை ரோமப் பேரரசு ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா ஆகிய மூன்று நாடுகளிலும் பரவியிருந்தது.

கிரேக்கர்களைப்போல் நாகரிகத்தின் பல பிரிவுகளுக்கு இவர்கள் புதிதாக எத்தொண்டும் செய்யாதிருந்தாலும் கிரேக்க நாகரிகத்தை ஏற்றுக் கொண்டு அதனைப் பரப்பி வந்தனர். ஆனால், சட்ட ஒழுங்கை உலகிற்குக் காட்டிய பெருமை இவர்களையே சாரும். இன்றைய சட்ட முறையில் பல ரோமாபுரியிலிருந்து பிறந்தவைகளே. இது மட்டுமன்றி ஆட்சி முறைகளைச் சீர்படுத்தி ஒரு பேரரசு எவ்வாறு தன் பரந்த எல்லைகளைத் தன் கட்டிற்குக் கொண்டுவருதல் வேண்டும் என்ற விதி முறைகளை நடைமுறையில் காட்டிய சிறப்பும் இவர்களையே சாரும்.

2. இலக்கியம்

இவர்களால் பயன்படுத்தப்பட்ட எழுத்து முறையையே ஐரோப்பாவில் பல நாடுகள் இன்றும் பயன்படுத்துகின்றன. ரோமானியர்களின் மொழியான



படம் 10. ரோமப் பேரரசு

லத்தின் மொழி மேலைய நாடுகளில் அறிவியல் இலக்கிய மொழியாகப் பல நூற்றாண்டுகள் வழங்கி வந்தது.

ஒவிட்டும், வெர்ஜில்லும் இவர்களில் தலைசிறந்த கவிஞர்கள். செனகாவும், பேரரசர் மார்கஸ் அரிலியஸ் என்பவரும் தலைசிறந்த சிந்தனையாளர்கள்.

3. கட்டடக் கலை

கிரேக்கர்களைப்போல் அழகினை வெளிப்படுத்தவும் கோயில்கள் எழுப்பவும் ரோமானியர்கள் தங்கள் கலைத் திறனைப் பயன்படுத்தவில்லை. அதற்குப் பதிலாகப் பொது மாளிகைகள், விளையாட்டு அரங்கங்கள், நெடும் பாதைகள், பாலங்கள் ஆகியவற்றைக் கட்டுவதில் தங்கள் திறனைப் பயன்படுத்தினர். வளைவுகளைக் கட்டடங்களில் பயன்படுத்தும் முறையைத் தொடக்கிவைத்தவர்களும் இவர்களேயாவர்.

அறிவியல் துறையில் கிரேக்கர்களைப்போல் சிறப்புறாவிட்டாலும் கிரேக்கர்களின் அறிவியல் செல்வங்களைப் பேணிக்காத்துச் சீர்படுத்தி நமக்களித்தவர்கள் இவர்களே.

இன்றைய நாள்காட்டி முறையை உலகுக்களித்த பெருமையும் இவர்களையே சாரும். ஜூலை, ஆகஸ்டு, என்ற மாதங்கள் இவர்களின் பேரரசர்களான ஜூலியஸ் சீசர். அகஸ்டஸ் சீசரைக் குறிப்பனவே.

வினாக்கள்

I. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. நகர அரசுகளுள் மிகவும் குறிப்பிடத்தக்கவை ————, ———— ஆகும்.
2. 'அரசியலமைப்பு ஆய்வுக் கூடம்' என்று பெருமையுடன் கூறப்படும் நாடு ———— ஆகும்.

3. கிரேக்க வீர காவியங்கள் ———, ——— ஆகும். அவைகளை இயற்றியவர் ——— .

4. கிரேக்கச் சிற்பிகளில் தலை சிறந்தவர் ——— ஆவார்.

5. சிறந்த கிரேக்க தத்துவ மேதைகள் ———, ——— ——— ஆவார்கள்.

6. ரோமானியர்களின் மொழி ——— ஆகும்.

II. **குறுகிய விடை எழுதுக.**

1. கிரேக்கப் பேரறிஞர்கள் சிலரின் பெயர்களைக் குறிப்பிடுக.

2. 'வரலாற்றின் தந்தை' என்று புகழப்படும் கிரேக்க மேதை யார்?

3. தலைசிறந்த ரோமானியச் சிந்தனையாளர்கள் யாவர்?

III. **சிறு குறிப்பு வரைக.**

1. ஒலிம்பிக் பந்தயம்.

2. ஏதென்ஸின் பெருமை.

IV. **விரிவாக விடை எழுதுக.**

1. கிரேக்கர் உலகிற்குச் செய்த நற்பணிகள் யாவை?

2. ரோமானியர் அரசியல், ஆட்சி மொழி, இலக்கியம் பற்றிக் கட்டுரை வரைக.

பயிற்சி

1. கிரீஸ் நாட்டுப் படத்தில் பழங்கால நகர அரசுகளைக் குறிப்பிடவும்.

2. ரோமப் பேரரசை விளக்கும் ஒரு படம் வரைக.

4. கிறிஸ்தவ சமயத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

முன்னுரை

உலக சமயங்களில் கிறிஸ்தவ சமயம் ஒன்றாகும். இச் சமயம் ஆசியாவில் தோன்றி, ஐரோப்பாவில் வளர்ந்து, பின்னர் உலக சமயமாயிற்று. ஆசியாவில் தோன்றிய இந்த மதத்தைப் பின்பற்றுகிறவர்களுள் பெரும்பாலோர் ஐரோப்பா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியாக் கண்டங்களில் இன்று வாழ்கின்றனர்.

1. இயேசுவின் வாழ்க்கை

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் மேற்கு ஆசியாவிலுள்ள பாலஸ்தீன நாட்டிலுள்ள ஜெருசலேத்திற்கு அருகாமையிலுள்ள பெத்லேகம் என்ற இடத்தில் யூதக் குடியில் **இயேசு கிறிஸ்து** பிறந்தார். இந்நன்னாளைக் கிறிஸ்துமஸ் நாள் எனக் கொண்டாடுகிறோம். இவரது அன்னையின் பெயர் **மேரி**. தந்தையின் பெயர் **ஜோசப்.** அன்னை மேரிக்கு இயேசு கடவுள் அருளால் பிறந்தார் என்றும், அவர் கடவுளின் மகன் என்றும் கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். கூரிய அறிவும் சீரிய நன்னடத்தையும் பெற்ற இயேசுவின் இளமை வாழ்க்கை நாசரத் என்ற ஊரில் அமைந்தது. ஆன்ம விழிப்பும் பிறர்பால் கொண்ட உள்ளன்பும், மக்களை எவ்வாறு சீர்திருத்தி இறை பணியில் ஈடுபடுத்துவது என்ற சிந்தனையில் இவரை ஆழ்த்தியது.

இவருக்கு முப்பது ஆண்டுகள் நிறைவுற்றபோது **ஜான்** என்ற மெய் ஞானியிடம் ஞானக் குளியலைப் பெற்றார். அன்று அப்பெரியார் இவரை நோக்கி, ‘முன்

னோர் கூறிய நல்காப்பான் நீயே; மக்களை அறவழி நடத்திச் செல்' என அறிவுரை பகன்றார். நாற்பது நாள் தனிமையில் கழித்துப் பின்னர் தம் அனுபவ நெறி களை மக்களுக்கு எடுத்தியம்ப ஆரம்பித்தார். இயேசு கிறிஸ்து, இம்மண்ணுலகில் விண்ணுலகை நிறுவ இச்சை கொண்டு, ஆண்டவனின் கட்டளை இதுவே என எண்ணித் தன் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் தம் கருத்துகளைப் பரப்பலானார்.

2. இயேசுவின் போதனைகள்

'ஒருவனே தேவன். மக்கள் தொண்டு இறைபணி. பிறர்பால் நாம் கொள்ளும் கருணையே ஞானத் திறவு கோல். தவறுதல் மனித இயற்கை, தன் தவற்றை எண்ணி மனம் வருந்துதல் அறம்; தன் தவற்றை எண்ணி வருந்து பவனை மன்னித்து அவனை நல்வழிப்படுத்தல் நம் கடன். இறைவன் முன் எளியோர் வலியோர், ஏழை பணக்காரன் அனைவரும் ஒன்றே. பணிவும் தொண்டுமே இறைவனை அடைய வழி. செல்வத்தின் பெருமை பிறர்க் குதவி செய்வதே' என்று இவ்வாறெல்லாம் பாலஸ்தீன மக்களிடம் அறிவுரை கூறினார் இயேசு. இவரின் பேச்சும் பார்வையும் பிணிகளைப் போக்குவதாக மக்கள் நம்பினர்.

தங்களை இறைவனின் 'செல்லப் பிள்ளைகள்' என்று கருதிவந்த யூதர்கள் பலருக்கு இறைவன் பொது என்ற இயேசுவின் கூற்று எரிச்சலை மூட்டியது. சடங்குகள் வீண்; செல்வம் வீடுபேறு தராது என்ற கொள்கைகள் மதகுருக்களுக்கும் செல்வந்தர்களுக்கும் ஆத்திரம் மூட்டியது. தங்கள் செல்வாக்கைச் சரியவைக்க இயேசு செய்யும் சதி என இவர்கள் நம்பினர். இவர்கள் ஒன்று கூடி ரோமானிய அதிகாரியிடம் சென்று இயேசு ரோமப் பேரரசைக் கவிழ்க்கச் சதி செய்வதாக முறையிட் டனர். இதனை விசாரிக்க இயேசுவைக் கைது செய்யும்படி கட்டளையிட்டார் அவ்வதிகாரி.

ஆலிவ் மலையில் தம் அருமைச் சீடர்களுடன் (அபோஸ்தலர்கள்) அளவளாவிக் கொண்டிருந்த இயேசுவை அவர்களுள் ஒருவர் காட்டிக் கொடுக்க காவலர்கள் அவரைக் கைது செய்தனர். விசாரணையில் அவர் குற்றமற்றவர் என்பது தெளிவாகவே, அவரை விடுதலை செய்ய எண்ணிய ரோம அதிகாரியை யூதத் தலைவர்கள் வற்புறுத்தி அவருக்கு மரண தண்டனை தர வைத்தனர். வேறு வழியின்றி அவரைச் சிலுவையில் அறைந்து கொல்லும்படி அவர் ஆணையிட்டார். மார்ச் மாதம் வெள்ளிக் கிழமையன்று இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். இயேசுவின் சீரிய பண்பை விளக்க மரண வேதனையிலும் அவர் கூறிய கடைசிச் சொற்களே எடுத்துக்காட்டாகும்: "தந்தையே, இவர்களை மன்னித்துவிடு, இவர்கள் தாங்கள் என்ன தவற்றைச் செய்கிறோம் என்பதை அறியாதவர்கள்" என்று அவர் ஆண்டவன்பால் விடுத்த விண்ணப்பம் அவரின் பெருமையை உலகம் உள்ளவரை பறைசாற்றும்.

சிலுவையில் மரித்த இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்று கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். கிறிஸ்துவின் போதனைகள் **விவிலிய** நூலில் அடங்கியுள்ளன. எனவே, விவிலிய நூல் கிறிஸ்தவர்களின் வேத புத்தகமாகும்.

3. சமயம் பரவுதல்

இயேசுவைச் சிலுவையில் அறைந்த பிறகு அவரின் சீடர்கள் மனமொடிந்துபோனார்கள். விவிலியம் கூறிய நல்காப்போன் மரிப்பது எங்ஙனம்? என்ற ஐயம் அவர்கள் உள்ளங்களில் எழுந்தது. ஆனால், விரைவில் அவர்கள் இயேசு புனித உடலோடு தங்களுடன் உலவிவருவதாக நம்பினர். இவ்வனுபவம் அவர்களுக்குப் புத்துணர்ச்சியைத் தந்தது. இவ்வுணர்ச்சியே அவர்களை இயேசுவின் கொள்கைகளைப் பரப்பத் தூண்டியது. **புனித பீட்டர்,**

புனித தாமஸ் போன்றவர்கள் இவரின் கொள்கைகளைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டனர். கி. பி. முதலாம் நூற்றாண்டில் புனித தாமஸ் இந்தியாவில் வடமேற்குப் பகுதிக்கு வந்தார். பின்னர் அவர் கேரள நாட்டிற்கு வந்து கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பினார்.

இவ்வாறு கிறிஸ்தவ மதத்தைப் பரப்பியதில் மிகவும் முதன்மையானவர் **புனித பால்** ஆவார். முதலில் கிறிஸ்தவ சமயத்தின் கோட்பாடுகளுக்கு எதிரியாக இருந்த இவர் மனம் மாறி இயேசுவின் கொள்கைகளைப் பரப்ப அயராது பாடுபட்டார். இயேசுவின் கோட்பாடுகள் உலகத்தோரின் பொதுச் சொத்து. கிறிஸ்தவ சமயம் உலகச் சமயம் என்ற கொள்கை கொண்ட பால் இதற்காகக் கடும் முயற்சியில் ஈடுபட்டார். ரோமப் பேரரசு முழுவதும் இவர் முயற்சியால் இச் சமயம் பரவலாயிற்று, இதனைக் கண்டு அஞ்சிய ரோமப் பேரரசர் நீரோ இவரைச் சிலுவையில் அறைந்து கொன்றார் என்று கூறப்படுகிறது. கிறிஸ்தவர்களை நீரோ போன்ற ரோமப் பேரரசர்கள் கொடுமைப்படுத்தினர். அப்படியிருந்தும் கிறிஸ்தவ ச ம ய த் தை மேலும் மேலும் மக்கள் ஏற்றுக் கொண்டனர். **கான்ஸ்டான்டைன்** என்ற பேரரசர் இச் சமயத்தை ஏற்றுக்கொண்டதால் இச் சமயம் மேலும் முன்னேறியது. அவருக்குப்பின் வந்த **தியடோசியஸ்** என்ற பேரரசர் கிறிஸ்தவ சமயத்தை மேலும் அரசாங்கச் சமயமாக்கினார். இதன் பின்னர் அச்சமின்றி இச் சமயம் ரோமப் பேரரசு முழுவதும் பரவியது.

வினாக்கள்

I. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கிறிஸ்துவின் தாயின் பெயர் ————, தந்தையின் பெயர் ————.
2. ———— என்ற ரோமப் பேரரசர் கிறிஸ்தவ சமயத்தை அரசாங்கச் சமயமாக ஏற்றுக் கொண்டார்.

3. கிறிஸ்தவ சமயம் பெருமளவில் பரவக் காரணமாக இருந்த கிறிஸ்தவ சமயப் பெரியார் ———— ஆவார்.

4. கிறிஸ்தவர்களின் மறை நூல் ———— எனப்படும்.

II. குறுகிய விடை எழுதுக.

1. ஏசுநாதர் எங்கே பிறந்தார் ?

2. இயேசுவின் சீடர்களுள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.

3. புனித பால் யாரால் கொல்லப்பட்டார் ?

4. தென்னிந்தியாவிற்கு வந்து கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பிய இயேசுவின் சீடரைப் பற்றிக் கூறுக.

III. சிறு குறிப்பு வரைக.

புனித பால், கான்ஸ்டான்டைன், அபோஸ்தலர்கள்.

IV. விரிவான விடை எழுதுக.

ஏசுவின் போதனைகளைத் தொகுத்து எழுதுக.

பயிற்சி

1. மாதாகோவிலுக்குச் சென்று அங்கு நடக்கும் போதனைகளைப்பற்றிக் குறிப்பெழுதுக.

2. பைபிள் நூலைப் படிக்கவும்.

5. இஸ்லாம்—தோற்றமும் வளர்ச்சியும்

முன்னுரை

கிறிஸ்தவ சமயம் தோன்றி அறுநூறு ஆண்டு களுக்குப் பிறகு அரேபிய மண்ணில் ஒரு புதிய சமயம் போதிக்கப்பட்டது. அக்காலத்தில் அரேபியாவில் வாழ்ந்த மக்கள் உருவ வழிபாடு செய்து வந்தனர். பல கடவுளர்களையும் பல்வேறுபட்ட கொள்கைகளையும் கொண்ட அம்மக்கள் ஒற்றுமையின்றி ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுடைய முக்கிய நகரமாக **மெக்கா** விளங்கியது. இத்தகைய சூழலில் அரேபியர்களை ஒற்றுமைப்படுத்த, நல்வழிப்படுத்த, ஒரு பெருந்தகை தோன்றினார். அவரின் பெயர் **முஹம்மது நபி.** அவர் போதித்த சமயத்தை **இஸ்லாம்** என்றழைக் கிறோம்.

I. முஹம்மது நபியின் வாழ்க்கை

கி. பி. 570 ஆம் ஆண்டு மெக்கா நகரத்தில் முஹம்மது பிறந்தார். அவர் பிறப்பதற்குச் சற்று முன்னரே அவருடைய தந்தை காலமாகிவிட்டார். அவர் குழந்தை யாய் இருக்கும்போது அவரின் தாயாரும் இறந்து விட்டார். அவரை அவரின் பெரியப்பா வளர்த்துவந்தார். அவரின் வியாபாரத்திற்கு உதவியாக முஹம்மது பல இடங்களுக்குத் துணை போனார். இப்பயணம் அவருக்குத் தம் நாட்டின் நிலையைத் தெள்ளென எடுத்துக் காட்டி யது. முஹம்மதுவின் நேர்மையைக் கண்டு **கதிஜா** என்ற ஒரு பணக்கார விதவை தம்முடைய வியாபாரத்தை நடத்தும்படிக் கேட்டுக் கொண்டார். அவர் அந்தப் பணியைச் செவ்வனே நேர்மையாகச் செய்தார். அதனால் அவரை அவர் மணந்து கொண்டார். உலக வாழ்வில் முஹம்மது ஈடுபட்டிருந்தபோதிலும், தமது மக்களை

எவ்வாறு நல்வழியில் திருப்புவது என்று சிந்தித்துக் கொண்டே இருந்தார். தம்மைக் கடவுளின் தூதர் என்று கருதிய முஹம்மது, ஆண்டவனின் போதனையை மக்களுக்கு எடுத்துக் கூற விரும்பினார். **ஹீரா மலையில்** பல நாள்கள் கடுந்தவம் புரிந்தார். ஒரு நாள் ரம்ஜான் மாதத்தில் தேவதூதர் **ஜீப்ரீல்** அவர்முன் தோன்றி அவருக்குச் சில வாக்குகள் அருளித் தந்தார். அவற்றைத் தம்முடைய மனைவியிடம் கூறினார். அவர் அதை ஏற்றுக் கொண்டார். அவர்தான் முதல் முஸ்லிம். முஹம்மது 'கடவுள் ஒருவரே, அவரை அல்லா என்றழைக்கிறோம். உருவ வழிபாடு செய்யக்கூடாது. கடவுள் முன்னிலையில் அனைவரும் சமம். சமயத்தின் அடிப்படை ஏழைகளுக்கு உதவுதல் ஆகும். வட்டி வாங்குதல், மது அருந்துதல் ஆகியன தீய செயல்களாகும்' என்று வலியுறுத்தினார்.

மெக்கா நகர மக்கள் நபிகளின் கொள்கைகளை ஏற்கவில்லை. சிலர் அவரை ஒழித்துக் கட்டவும் முயற்சி செய்தனர். அதனால் அவர் மெக்காவிலிருந்து வெளியேறி கி. பி. 622-ல் மெதினா நகரில் குடியேற நேர்ந்தது. இந் நிகழ்ச்சிக்கு **ஹிஜ்ரத்** என்று பெயர். இந்நாளில் கி. பி. 622-ல் இருந்துதான் இஸ்லாமிய காலக் கணிப்பு முறை தொடங்குகின்றது.

ஆனால், சிறிது காலத்தில் மக்கள் மனம் மாறியது. ஏராளமான பேர்கள் அவரின் கொள்கைகளைப் பின் பற்றினர். முஹம்மது மெக்காவைக் கைப்பற்றினார். கி. பி. 632-ல் அவர் இறப்பதற்கு முன் அரேபியா நாடு முழுவதும் இஸ்லாமை ஏற்றுக்கொண்டது.

II. இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள்

நபிகள் நாயகம் தம் கருத்துகளை ஒன்றுசேர்த்துத் தரவில்லை. கடவுள் தமக்கு அருளித் தந்த திருவாக்கு களை அப்போதைக்கப்போது தமது சீடர்களிடம் கூறி

னார். அவரின் சீடர்கள் அவரின் மறைவிற்குப் பின் அவ்வாக்குகளை ஒன்றுசேர்த்து வெளியிட்டனர். அப் புனித நூலுக்கு **திருக்குர்ஆன்** என்று பெயரிட்டனர்.

இஸ்லாத்தின் முக்கிய கொள்கைகள் பின்வருமாறு:

1. ஒன்றே கடவுள். முஹம்மது நபியே அவரின் தூதர்.
2. உருவ வழிபாடு கூடாது.
3. கடவுளின் கூற்றுகள் திருக்குர்ஆனில் உள்ளன. அதனை மறுத்தல் கூடாது.
4. இறப்பிற்குப் பின் மறுவாழ்வு உண்டு. கடைசி நியாயத் தீர்ப்பு நாளில் அவரவர் தீய, நல்லொழுக்கங்களுக்கு ஏற்ப கடவுள் தீர்ப்பு வழங்குவார்.
5. கடவுள் முன்னிலையில் அனைவரும் சமம். எனவே, அனைவரும் சகோதரர்களே.
6. நபிகள் ஐந்து கடமைகளை ஒவ்வொரு முஸ்லிமும் செய்ய வலியுறுத்தினர். அவையாவன: கடவுளின் புகழ்பாடுதல்—ஐந்துமுறை இறைவனைத் தொழுதல்—ஈதல்—ரம்ஜான் நோன்பிருத்தல்—ஒரு முறையாவது வசதி இருந்தால் மெக்கா பயணம் செய்தல்.

III. இஸ்லாமிய சமயத்தின் வளர்ச்சி

எளிய கொள்கைகளை உடைய இஸ்லாம் விரைவில் அரேபியா, ஈரான், ஈராக், எகிப்து, ஆப்கானிஸ்தான், மலேசியா, இந்தோனேசியா, இந்தியா போன்ற நாடுகளில் பரவிற்று. நபியின் மறைவிற்குப் பின் அரசியல், மதத் தலைவர்களாக வந்த **கலீபாக்களால்** இஸ்லாமிய சமயம் உலகெங்கிலும் பரப்பப்பட்டது. அவர்களுள் முக்கியமானவர்கள் **அபுபேக்கர், ஓமர், உத்மான்** ஆவர்.



படம் 11. கி. பி. 750-இல் முஸ்லிம் பேரரசு.

ஐரோப்பாவில் ஸ்பெயின் நாட்டிலும் இச்சமயம் பரவியது. வாணிகத்திற்காக இந்தியா வந்த அரேபியர்களால் இஸ்லாம் இந்தியாவில் வேரூன்றியது. பின்னர் சிந்துவை வென்ற அரேபியராலும், டில்லியை ஆண்ட சுல்தான்களாலும் மொகலாயர்களாலும் இந்தியாவில் இஸ்லாம் பரவியது.

இன்று இஸ்லாம் உலக சமயங்களுள் ஒன்றாக விளங்குகிறது.

வினாக்கள்

I. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இஸ்லாமின் மறை நூல்————என்பதாகும்.
2. கி.பி. 622-ல் முஹம்மது நபி————விலிருந்து————விற்குச் சென்றார். இந்த நிகழ்ச்சிக்கு————என்று பெயர்.
3. முஹம்மது————வழிபாட்டை வெறுத்தார்.
4. நபிநாயகத்திற்குப் பின் வந்த இஸ்லாமிய சமயத் தலைவர்களை————என்றழைத்தனர்.

II. குறுகிய விடை எழுதுக.

1. நபிநாயகத்தின் இளமைப் பருவத்தை விவரிக்கவும்.
2. 'ஹிஜ்ரத்' என்றால் என்ன?

III. விரிவாக விடை எழுதுக.

1. இஸ்லாத்தின் முக்கிய கொள்கைகள் யாவை ?
2. இஸ்லாம் எவ்வாறு உலக சமயமாகப் பரவியது ?

பயிற்சி

1. இஸ்லாமியப் பேரரசை விளக்க ஒருபடம் வரைக. அதில் மெக்கா, மெதினா, பாக்தாத் இவைகளைக் குறிக்கவும்.
2. அருகாமையில் உள்ள மசூதிக்குச் சென்று பார்க்கவும்.

6. இடைக்கால ஐரோப்பா

(அ) நிலப்பண்ணை உரிமை முறை

முன்னுரை

கி. பி. 11ஆவது நூற்றாண்டிலிருந்து 16 ஆவது நூற்றாண்டு வரையுள்ள காலம் **இடைக் காலம்** *எனப்படுகிறது.*

உரோமப் பேரரசின் வீழ்ச்சியின் விளைவாகக் கி.பி. 500ஆம் ஆண்டு முதல் கி.பி. 1100ஆம் ஆண்டுவரை ஐரோப்பாவில் குழப்பநிலை நிலவி வந்தது. உயிருக்கும் பொருளுக்கும் பாதுகாப்பு இன்றி மக்கள் தவித்து வந்தனர். உட் பூசல்களும் படையெடுப்புகளும், அமைதியின்மையை ஏற்படுத்தின. சிறு விவசாயிகளும் கைத் தொழிலாளர்களும் தங்கள் அருகாமையில் உள்ள செல்வாக்கும் பலமும் பொருந்திய பெரிய நிலச் சுவான்தாரர்களிடம் பாதுகாப்பைக் கோரினர். இதன் விளைவாக அச்செல்வாக்குடையவர்கள் 'பண்ணைச் சீமான்களாக' (Feudal Lords) *மாறினார்கள். இம்முறையினை* **நிலப்பண்ணை முறை** *என்றழைக்கிறோம்.*

I. நிலப்பண்ணை முறை

இம்முறையின்படி பண்ணையாளர் விவசாயிகளுக்கு உழுநிலங்களையும் பாதுகாப்பினையும், அதற்கீடாக அப்பிரபுக்களின் நிலத்தை உழுதும் போர்க் காலத்தில் அவருக்கு உறுதுணையாக இருப்பதாகவும் இருசாராரும் ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டனர்.

நிலப்பண்ணை முறை இடைக்கால ஐரோப்பாவின் சமூக அரசியல் அமைப்பிற்கு அடிப்படையாக இருந்தது.

நிலப்பண்ணைமுறை சமூகம் படிப்படியான உரிமைகளைக் கொண்ட திட்டமாக அமைந்தது. இதன் மேல் தளத்தில் அரசர் அனைத்து உரிமைகளையும் கொண்டவராக விளங்கினார். எல்லா நிலங்களும் அரசனுக்கே உரியதாகக் கருதப்பட்டது. அரசர் தன் நிலத்தின் பெரும் பங்கைப் பிரபுக்களுக்குப் பங்கிட்டுத் தந்தார். அதற்கு



படம் 12. நிலப்பண்ணை முறை

1. அரசர் 2. பிரபுக்கள் 3. பெரிய நிலச்சுவான்தார்கள் 4. நைட்டுகள் 5. பண்ணையாட்கள்

ஈடாகப் பிரபுக்கள், அரசனுக்குப் பலவிதங்களிலும் சேவை செய்யக் கடமைப்பட்டவர்களானார்கள். இவ்விதம் படிப்படியே உரிமைகளும் கடமைகளும் பிரிக்கப்பட்டன. கீழ் நிலையில் தொழிலாளர்களும் விவசாயிகளும் இருந்தனர். இப்படி வாழ்ந்த ஒவ்வொரு சிறு குடியிருப்புக்கும் **மேனார்** என்று பெயர். நிலப்

பண்ணை உரிமை பெற்ற பிரபுக்கள் தம் பகுதியில் அமைதியை நிலைநாட்டியும், சட்டங்கள் இயற்றியும், நீதி வழங்கியும் ஆட்சி செலுத்தினர்.

பிரபுக்கள் தங்களுக்குப் போர் சேவை செய்ய ஒப்புதல் அளித்தவர்களை நைட் என்றழைத்தனர். இந்த



படம் 13. மேனார் குடியிருப்பு

1. மேனார் மாளிகை 2. பண்ணையாட்களின் குடிசைகள்
3. வயல் 4. நிலம் 5. வயல்

நைட்டுகள் 'வலிமையற்றவர்களையும், பெண்களையும், கோயில்களையும் தங்கள் உயிரினைக் கொடுத்தாவது காப்போம்', என்று உறுதி மொழி கொடுத்தார்கள்.

II. விளைவுகள்

இம்முறையினால் நன்மைகளும் தீமைகளும் ஏற்பட்டன. அவை:

1. இடைக்கால ஐரோப்பாவில் ஓர் இறுகிய சமுதாயம் உண்டானது. அவரவர் பிறப்பிற்கேற்ப அவரவர் வர்க்கம் நிச்சயிக்கப்பட்டது. ஒவ்வொருவரும் அவரவர் பிரிவின் கட்டுப்பாடுகளுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் அவசியமாயிற்று.

2. அமைதிகுன்றிய காலத்தில் அமைதியை நிலவச் செய்ய இம்முறை துணைபுரிந்தது.

3. அரசர் மனம்போனபடி ஆட்சி செலுத்துவதைப் பிரபுக்கள் கட்டுப்படுத்த இம்முறை உதவியது.

4. பிரபுக்களின் உட்பூசல் நாளடைவில் நிலையான ஆட்சி ஏற்படுவதற்குத் தடங்கலாகவிருந்தது. மக்கள் அரசனுக்கு நேரடியாகக் கீழ்ப்பணியத் தேவையின்மையால் தேசிய உணர்ச்சி குன்றியது.

(ஆ) புனித ரோமானியப் பேரரசு

ரோமானியப் பேரரசு அழிந்து, ஐரோப்பாவில் இடைவிடாப் பூசல்களாலும் படையெடுப்புகளாலும் குழப்பநிலை ஏற்பட்டிருந்த காலத்தில் கிறிஸ்தவ சமய குருக்கள் மக்களைக் காத்து புகலிடம் தந்தும் ஓர் இணைப்புச் சக்தியாகவும் நிலவி வந்தனர். எனவே, நிலப் பண்ணை உரிமை முறை போலவே இடைக்கால ஐரோப்பாவின் சமுதாய அமைப்பில் சர்ச்சுகளும் **போப்பாண்டவரும்** முக்கியப் பங்கினை வகித்தனர். சில மன்னர்கள் போப்பின் கையை வலிமைப்படுத்தி ஐரோப்பாவில் அமைதி நிலவப் பெரிதும் உதவினர். இவர்களை ஐரோப்

பாவின் பேரரசர்களாகப் போப்பாண்டவர் நியமித்தார் இவ்வாறு திருச்சபையைக் காக்க அமைத்த பேரரசு **புனிதப் பேரரசு** என்றும் ரோமானியப் பேரரசுபோல் பரவியிருந்ததால் **புனித ரோமானியப் பேரரசு** என்றும் அழைக்கப்பட்டது.

இப்பேரரசில் ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி, பொஹிமியா, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, பர்கண்டி ஆகியவை அடங்கியிருந்தன.



படம் 14. புனித ரோமானியப் பேரரசு

இப்பேரரசு கி. பி. 800ஆம் ஆண்டு முதல் கி. பி. 1806ஆம் ஆண்டு வரை நீடித்தது. போப்பின் எதிரிகளை முறியடித்துத் திருச்சபையைக் காத்த பிராங்கு மன்னர் **மகா சார்லஸ்** அல்லது **சார்லமேன்** முதல் பேரரசர் ஆவார். பின்னர் ஜெர்மனியைச் சார்ந்த **மகா ஆட்டோ** கி. பி. 962–ல் புனித ரோமானியப் பேரரசராக நியமிக்கப் பட்டார். நாளடைவில் இப்பேரரசின் செல்வாக்கு நலிந்து வெறும் பெயரளவில் மட்டுமே வழங்கி வந்தது.

(இ) சிலுவைப் போர்கள்

I. காரணம்

ஏசு நாதர் வாழ்ந்து மறைந்த பாலஸ்தீனத்திலுள்ள **ஜெருசலம்** கிறிஸ்தவர்களின் புனித இடமாக விளங்கி வந்தது. எவ்வாறு இஸ்லாமியர்களுக்கு மெக்கா செல்வது தங்கள் வாழ்க்கையில் ஒரு புனிதச் செயலோ அவ்வாறே கிறிஸ்தவர்களுக்கும் ஜெருசலம் செல்வது ஒரு புனிதச் செயலாகவிருந்தது. ஜெருசலம் அரேபியர்களின் கைவசமான பிறகும் கிறிஸ்தவர்கள் அங்கே செல்வதற்கு அவர்கள் தடையாக இருக்கவில்லை. ஆனால், ஜெருசலத்தைத் துருக்கியர்கள் கைப்பற்றியபின் அங்கே செல்லும் கிறிஸ்தவ யாத்திரிகர்கள் துன்பப்படுத்தப்பட்டனர். ஜெருசலத்தை மீண்டும் தங்கள் கைவசம் கொணர வேண்டும் என்ற உந்தல் ஐரோப்பா முழுவதும் பரவியது. இதன் விளைவாகப் பலதரப்பட்ட கிறிஸ்தவ இனத்தினர் ஒன்றுகூடிப் பல போர்களை நடத்தினர். இவ்வாறு நிகழ்ந்த போர்களைச் **சிலுவைப் போர்கள்** என்றழைக்கிறோம். இப்போர்களில் அரசன் முதல் ஆண்டி வரை, ஏன், சிறுவர்கள்கூடக் கலந்து கொண்டனர்.

II. போக்கு

முதல் சிலுவைப் போரில் கிறிஸ்தவர்கள் ஜெருசலத்தைக் கைப்பற்றிய போதிலும் அவர்களால் அப்புனித இடத்தை நீண்டநாள் கைவசம் வைத்திருக்க முடியவில்லை. இதனை மீண்டும் தன் வசப்படுத்திய இஸ்லாமியப் பேரரசன் **சாலடினிடம்** கிறிஸ்தவர்கள் தோல்வியினைக் கண்டனர். எனினும், முடிவில் சாலடினிடம் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் விளைவாகக் கிறிஸ்தவர்கள் ஜெருசலம் செல்லும் உரிமையைப் பெற்றனர். மொத்தத்தில் சிலுவைப் போர்களில் கிறிஸ்தவர்கள் தோல்வியடைந்தனர். முஸ்லிம்களின்

ஆதிக்கம் பாலஸ்தீனத்தில் இருபதாவது நூற்றாண்டு வரை இருந்தது.

III. விளைவுகள்

1. சிலுவைப் போர்கள் கிறிஸ்தவர்களுக்கு வெற்றியைத் தேடித் தராவிடினும் அவர்களை அரேபிய நாகரிகத்தோடு தொடர்புபடுத்தியது. இதன் விளைவாக இடைக்கால ஐரோப்பாவின் இருண்ட நிலை மறைந்து, புதிய ஐரோப்பா தோன்றக் காரணமாக சிலுவைப் போர்கள் அமைந்தன.

2. பல பிரபுக்கள் மடிந்தமையாலும் போர்ச் செலவிற்காகக் கடன்பட்டமையாலும் நிலப்பண்ணைத் திட்ட முறை நலிந்து பலம் பொருந்திய முடியாட்சிகள் தோன்ற சிலுவைப் போர்கள் காரணமாக அமைந்தன.

3. இப்போர்கள் ஆசிய நாடுகளுடன் வியாபாரத் தொடர்புகளை ஏற்படுத்தின. இதன் விளைவாகப் பண்டமாற்று முறை மறைந்து நாணயச் செலாவணி முறையும் வாணிகமும் நிலை பெற்றன.

4. இஸ்லாமின் பரவல் ஐரோப்பாவில் தடுத்து நிறுத்தப்பட்டது. மேற்கே தடுக்கப்பட்ட இஸ்லாம் கிழக்கே பரவ இப்போர்கள் காரணமாக அமைந்தன.

5. ஐரோப்பியர்களுக்குப் புத்துணர்ச்சியூட்டிப் புதிய முயற்சிகள் மேற்கொள்ளவும் புதிய கடல் பயணங்களில் ஈடுபடவும் வழிவகுத்தன.

வினாக்கள்

I. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. புனித ரோமானியப் பேரரசர்கள்———,———ஆவர்.
2. பிரபுக்கள் தங்களுக்குப் போர்ச் சேவை செய்ய ஒப்புதல் அளித்தவர்களை————என்றழைத்தனர்.

3. ஏசுநாதர் வாழ்ந்து மறைந்த————கிறிஸ்தவர்களின் புனித இடமாகக் கருதப்பட்டது.

II. குறுகிய விடை எழுதுக.

1. நிலப்பண்ணை முறை என்றால் என்ன? இம்முறை தோன்றக் காரணம் என்ன?
2. 'புனித ரோமானியப் பேரரசு' என்று ஏன் அழைக்கப் பட்டது?
3. சிலுவைப் போர்கள் தோன்றியதேன்?

III. விரிவான விடை எழுதுக.

1. நிலப்பண்ணை உரிமை முறையின் விளைவுகளைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.
2. சிலுவைப் போர்களால் நிகழ்ந்த விளைவுகள் யாவை?

பயிற்சி

1. புனித ரோமானியப் பேரரசின் படத்தை வரைக.
2. வால்டர் ஸ்காட் எழுதிய 'டாலிஸ்மேன்' என்ற நூலைப் படி.

7. இடைக்கால இந்தியா

முன்னுரை

இடைக்காலத்தில் அதாவது 7ஆம் நூற்றாண்டி லிருந்து 16ஆம் நூற்றாண்டுவரை இந்தியாவில் **பல்லவர் கள், சோழப்பேரரசர்கள், பிற்காலப் பாண்டியர்கள், பாமினி விஜய நகரப் பேரரசர்கள், இராஜபுத்திரர்கள், டில்லி சுல்தான்கள்** ஆகியோர் ஆண்டுவந்தனர். டில்லி சுல்தான் களைத் தவிர மற்றவர்களைப்பற்றி இங்கு படிப்போம்.

(அ) பல்லவர்கள்

ஹர்ஷவர்த்தனர் வடக்கேயும், புலிகேசி மத்திய இந்தியாவையும் ஆண்டுவந்த காலத்தில் பல்லவர்கள் தென்னிந்தியாவில் ஆட்சி செலுத்தி வந்தனர். பல்லவர் கள் அந்நிய நாட்டு இனத்தைச் சேர்ந்தவர்கள் என சில சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஆனால், சிலர் பல்லவர்கள் அந்நியர்களல்லர், நம் நாட்டைச் சேர்ந் தவர்களே எனக் கருதுகின்றனர். முதலில் பல்லவர்கள் ஆந்திர மாநிலங்களுக்கு அரசப் பிரதிநிதிகளாக நியமிக்கப் பட்டனர். பிறகு அவர்கள் தாமாகவே அரசை அமைத்துக் கொண்டனர். அவர்கள் தென்னிந்தியாவைச் சுமார் 200ஆண்டுகள் ஆண்டு வந்தனர். அவர்கள் தலைநகரம் **காஞ்சி**. பல்லவ மன்னர்களுள் தலை சிறந்தவர்கள் **முதலாம் மகேந்திரவர்மரும் முதலாம் நரசிம்மவர்மரும்** ஆவர்.

I. முதலாம் மகேந்திரவர்மர் (கி.பி. 600 முதல் 630 வரை)

இவர் அரசரானபின் இராஜ்ஜியத்தை விரிவாக்குவ தில் ஈடுபட்டார். கிருஷ்ணா நதி வரை இவரது பேரரசு விரிவாக்கப்பட்டது. சமண சமயத்தைச் சார்ந்தவராக



படம் 15. பல்லவப் பேரரசு

இருந்த இவரை **அப்பர்** அடிகள் சைவ சமயத்தைத் தழுவச் செய்தார்.

மகேந்திரவர்மரது காலத்தில் சாளுக்கியர்கள் மிகுந்த வலிமை வாய்ந்தவர்களாக இருந்தனர். சாளுக்கிய அரசரான **இரண்டாம் புலிகேசி** ஹர்ஷவர்த்தனரது தென்னிந்தியப் படையெடுப்பைத் தடுத்து நிறுத்தினார். மகேந்திரவர்மரும் புலிகேசியும் தம் தம் இராஜ்ஜியத்தை விரிவாக்கும் முயற்சியில் இருவருக்கும் போர் மூண்டது. புலிகேசி மகேந்திரவர்மரைத் தோற்கடித்தார். மகேந்திரவர்மர் தம் குடிமக்களின் நலனில் மிக்க அக்கறை கொண்டிருந்தார். அவர் மகேந்திரவாடியிலும் மாமண்டூரிலும் பல ஏரிகள் தோண்டச் செய்தார். அவர் வடமொழியில் **மத்தவிலாஸப் பிரகடனம்** என்னும் நகைச்சுவை நூலை எழுதினார். புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள சித்தன்னவாசல் ஓவியங்கள் இவர் காலத்தவையாகும். இவருக்குச் **சித்திரகாரப்புலி**, **விசித்திர சித்தர்** என்னும் சிறப்புப் பெயர்களும் உண்டு.

குகைக் கோயில்கள் கட்டும் முறையினை முதன் முதலில் தென்னிந்தியாவுக்குக் கொண்டுவந்த பெருமை இவரையே சாரும். இந்தக் குகைக் கோயில்கள் **வல்லத்திலும் மகேந்திரவாடியிலும்** இன்றும் காணப்படுகின்றன. இசை, நாடகம், ஓவியம் முதலியவற்றின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினார். வடஇந்தியாவில் ஹர்ஷரும், தக்காணத்தில் புலிகேசியும், தென்னிந்தியாவில் மகேந்திரவர்மரும் சமகாலத்திய அரசர்களாவார்கள்.

II. நரசிம்மவர்மர் (கி. பி. 630—638)

மகேந்திரவர்மருக்குப் பின் அவரது மைந்தர் நரசிம்மவர்மர் அரசரானார். இவர் தம் தந்தையின் தோல்விக்கு ஈடுசெய்யும் வகையில் இரண்டாம் புலிகேசியைச் தோற்கடித்து, வாதாபியைத் தீக்கிரையாக்கியமையால் **வாதாபி கொண்டான்** என்னும் பெயர்

பெற்றார். இவர் சேர, சோழ, பாண்டியர் மூவரையும் வென்றார். இவர் வலிமை மிக்க கப்பற்படை வைத்திருந் தார். அதனைக்கொண்டு தம் நண்பரான **மானவர்ம னுக்கு** இலங்கை அரசுரிமையை வாங்கித் தந்தார். தம் தந்தையைப் போலவே இவரும் குகைக் கோயில்கள் கட்டுவதில் விருப்பம் கொண்டிருந்தார். இவருடைய படைப்புகள் **மாமல்லபுரத்தில்** காணப்படுகின்றன. **அர்ச்சுனன் தவமும், பஞ்சபாண்டவர் ரதங்களும்** அக் குகைக் கோயில்களிலேயே மிகச் சிறப்பும் அழகும் வாய்ந் தவை.

சீன யாத்திரிகர் **யுவான் சுவாங்** இவருடைய அரச வையைக் காண வந்திருந்தார். அவர் தம்முடைய நூலில் பல்லவர்களுடைய தலைநகரமான காஞ்சியை மிகவும் புகழ்ந்துள்ளார்.

ஒன்பதாவது நூற்றாண்டு ஆரம்பத்தில் பல்லவர் ஆட்சி வீழ்ச்சியடைந்து, சோழர்கள் தென்னிந்தியாவில் ஆதிக்கம் பெற்றனர்.

(ஆ) சோழப் பேரரசர்கள்

இடைவிடாப் போரின் காரணமாகக் காஞ்சிப் பல்லவர்களும் பாண்டியர்களும் பலம் குன்றினர். இவ் வமயம் பல்லவர்களுக்கு அடங்கிய சிற்றரசராக இருந்த **விசயாலயச் சோழர்** தஞ்சையைக் கைப்பற்றிக்கொண் டார். அவரது மகன் **ஆதித்த சோழர்** காஞ்சியையும் தொண்டை நாட்டையும் கைப்பற்றினார். அவருக்குப் பின் வந்த **பராந்தகர்** மைசூர் கங்கர்களையும், மதுரைப் பாண்டியர்களையும் வென்றார். இவர் சிதம்பரம் நடராஜப் பெருமான் கோவிலுக்குப் பொன்கூரை வேய்ந் தார் என்று கூறப்படுகிறது. இராஜ்சியத்தில் குழப்பம் ஏற்பட்டது. சிறிது காலத்திற்குப் பின் அமைதி ஏற்பட்டு **இராசராசன்** பட்டத்திற்கு வந்தார். தஞ்சாவூர் இவர்

களது தலைநகராக விளங்கியதால் இவர்கள் தஞ்சைச் சோழர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். இவர்கள் தென்னிந்தியா முழுதும் தம் ஆட்சியைப் பரப்பினர். இவர்களில் மிகச் சிறந்தவர்கள் **இராசராச சோழன், இராசேந்திர சோழன், குலோத்துங்கன்** ஆகியோர் ஆவர்.

I. **இராசராசர்** *(கி.பி. 985—1014)*

இராசராசர் பாண்டியர்களையும் சேரர்களையும் வென்றார். பின்னர் தம் படையை இலங்கைக்குக் கொண்டுசென்று இலங்கையை வென்றார். சாளுக்கியர்களை வென்று வேங்கியைக் கைப்பற்றியதோடு அந்நாட்டு இளவரசருக்குத் தம் மகளை மணம் செய்வித்தார். பின்னர், மைசூர் கங்கர்களை வென்று குடகைக் கைப்பற்றினார். இவர் காலத்தில் சைவ சமயம் தழைத்தோங்கியது. இவர் **தஞ்சைப் பெரிய கோயில்** என்னும் தஞ்சைப் **பிரகதீஸ்வரர் கோயிலைக்** கட்டினார். இவர் சிறந்த ஆட்சியாளராகவும் விளங்கினார். இவர் விவசாயிகளுக்குப் பல வசதிகள் செய்து கொடுத்தார். இவர் காலத்தில் பல கலைகள் வளர்ச்சி பெற்றன. ஒரே கல்லினால் செய்யப்பட்ட நந்தியும், ஆலயத்தில் காணப்படும் சில சிற்பங்களும் இவர் காலத்துச் சிற்பக்கலையின் சிறப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும். இவர் இசைப் புலவர்களையும், ஓவியர்களையும், பாவலர்களையும் ஆதரித்தார். இவர் காலத்தில் தேவாரப் பாடல்கள் **நம்பி ஆண்டார் நம்பியால்** தொகுக்கப்பட்டன. இராசராசருக்குப் பல சிறப்புப் பெயர்கள் உண்டு. அவை **சிவபாதசேகரன், மும்முடிச் சோழன், திருமுறைகண்ட சோழன்** என்பவை யாகும்.

II. **இராசேந்திர சோழன்** (*கி. பி. 1012—1044*)

இராசராசருடைய மகனான இராசேந்திர சோழன் தந்தையைப் போலவே சிறந்து விளங்கினார். இவர் தந்தை இறப்பதற்கு முன்னமே தந்தையின் ஆணைப்படி அரசு புரிந்தார். இவர் ஒரு சிறந்த வெற்றி வீரர். கங்கை

வரை சென்று, வங்காள அரசன் மகிபாலனையும் வென்றார். இந்த வெற்றியைக் கொண்டாடுவதற்காக இவர் **கங்கை கொண்ட சோழபுரம்** என்னும் நகரை நிர்மாணித்தார். அதனைத் தம் புதிய தலைநகராகவும் வைத்துக் கொண்டார். இவர் மலேயாமீது படையெடுத்துக் கடாரம் என்ற அந்நாட்டின் ஒரு பகுதியையும் வென்றார். கடல் கடந்த இந்த வெற்றியின் காரணமாக இவர் கடாரம் **கொண்டான்** என்ற பட்டத்தைப் பெற்றார்.

III. குலோத்துங்கன் (கி.பி. 1070—1120)

இராசேந்திரர் இறந்ததும் குழப்பம் ஏற்பட்டுப் பலர் அரசு புரிந்தனர்.

இராசராச சோழருடைய மகள், பேத்தி இருவருமே சாளுக்கியப் பரம்பரையில் மணந்துகொண்டார்கள். **இராசேந்திர சாளுக்கியர்** என்னும் **குலோத்துங்கன்** கங்கை கொண்ட சோழரது மகள்வழிப் பேரராவார். இராசேந்திர சாளுக்கியர் **குலோத்துங்கன்** என்ற பெயரில் தம்மைச் சோழப் பேரரசராகப் பிரகடனம் செய்து கொண்டார். மூன்று தலைசிறந்த குலோத்துங்கர்கள் சோழப் பேரரசை ஆண்டனர். முதலாம் குலோத்துங்கன் காலத்தில் **ஜெயம் கொண்டான்** என்னும் புலவர் வாழ்ந்தார். இவர் குலோத்துங்கனது கலிங்க வெற்றியைக் குறிக்கும் வகையில் **கலிங்கத்துப் பரணி** என்னும் பரணி நூலை இயற்றினார்.

இரண்டாம் குலோத்துங்கனது காலத்தில் **பெரிய புராணம்** என்னும் தெய்வப் புராணத்தை எழுதிய **சேக்கிழார்** வாழ்ந்தார். **மூன்றாம் குலோத்துங்கன்** காலத்தில் சோழப் பேரரசு வீழ்ச்சியடையத் தொடங்கியது.

சோழப் பேரரசர்கள் காலத்தில் தமிழ் இலக்கியம் வளர்ச்சியடைந்தது. நம்பி ஆண்டார் நம்பி தேவாரத்தைத் தொகுத்தார். ஆழ்வார்கள் பாசுரங்களை **நாத**

முனி என்பார் தொகுத்து **நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை** இயற்றினார். சோழர் காலத்தில்தான் **கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி** ஆகிய பெரும்புலவர்கள் வாழ்ந்தனர்.

(இ) பிற்காலப் பாண்டியர்கள்

மூன்றாம் குலோத்துங்கனுக்குப் பிறகு சோழப் பேரரசு வீழ்ச்சி அடைந்தது. பிற்காலப் பாண்டியர்களுள் முக்கியமானவர்கள் **ஜடாவர்ம சுந்தரபாண்டியனும் மாறவர்மன் குலசேகரனும்** ஆவர். ஜடாவர்ம சுந்தர பாண்டியர் தம் பேரரசை நெல்லூர் வரை விரிவாக்குவ தில் வெற்றி கண்டார். காஞ்சி அவரது இரண்டாவது தலைநகராக அமைந்தது. அவருக்குப் பின் வந்த மாறவர்மன் குலசேகரன் காலத்தில் வெனிஸ் நகரப் பயணி **மார்க்கோ போலோ** பாண்டிய நாட்டிற்கு வந்து, அதனைப் பற்றிச் சிறப்பாகத் தமது குறிப்பில் கூறியுள்ளார். மாறவர்மனுக்குப் பிறகு வாரிசு உரிமைப்போர் ஏற்பட்டது. அந்த சந்தப்பத்தைப் பயன் படுத்தி **மாலிக்காபூர்** மதுரைமீது படையெடுத்து, அந் நகரைக் கைப்பற்றினார். பாண்டியப் பேரரசு வீழ்ச்சி யடைந்தது.

(ஈ) பாமினி அரசும் விஜய நகரப் பேரரசும்

I. பாமினி அரசு (கி.பி. 1347-1526)

தைமூர் என்னும் தார்த்தாரி மன்னனின் வடஇந்தியப் படையெடுப்பும் டில்லி சுல்தான்களின் தவறான ஆட்சியும் தென்னிந்திய முஸ்லிம்களுக்குத் தைரியத்தைக் கொடுத்ததோடு பல உள்நாட்டுப் பூசல்களும் நாட்டில் ஏற்பட்டன. இந்தப் பூசல்களைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட **ஹாசன் கங்கு பாமினி** தம்மைத் தக்காணப் பகுதிக்கு கி.பி. 1347-ல் அரசராக முடி சூட்டிக்கொண்

டார். அதுவே **பாமினி அரசு** என்றாயிற்று. பாமினி அரசுக்குக் **குல்பர்கா** தலைநகராக விளங்கியது.

15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இப்பேரரசு வீழ்ச்சியடையும் வரை இது மிக்க வலிமையுள்ள பேரரசாக விளங்கியது. இது ஐந்து தனி அரசுகளாகப் பிரிந்து ஐந்து சுல்தான்களால் ஆட்சி செய்யப்பட்டது. விஜய நகர அரசர்களுக்கும் பாமினி சுல்தான்களுக்கு மிடையே இடைவிடாத போர் நிகழ்ந்து வந்தது.

மூன்றாம் முகம்மது ஷா பாமினி அரசர்களில் மிகச் சிறந்தவராய் விளங்கினார். முகம்மது ஷா அறிவாற்றல் மிக்க **முகம்மது கவான்** என்னும் முதலமைச்சரைப் பெற்றிருந்தார். முகம்மது கவான்மீது பொறாமை கொண்ட சிலர் அவர்மீது பொய்க்குற்றம் சாட்டி அவரைக் கொன்றனர். அவரது மறைவுக்குப் பிறகு பாமினி அரசு நலிவுற்றது. பாமினிப் பேரரசு ஐந்து தனி அரசுக்ளாகப் பிரிந்தது. அவை **பீரார், பீடார், பீஜப்பூர், கோல்கொண்டா, அஹமத் நகர்** என்பன வாகும்.

பாமினி அரசர்கள் கிணறுகளையும் கால்வாய்களையும் வெட்டினர். அவர்கள் காலத்தில் பல அழகிய கட்டடங்கள் கட்டப்பட்டன. பீஜப்பூரில் உள்ள **கோல் கும்பா** அவர்களது கட்டடக்கலையின் சிறப்பிற்கு ஓர் எடுத்துக் காட்டு. பள்ளிகளும் நூல்நிலையங்களும் ஒவ்வொரு கிராமத்திலும் அமைக்கப்பட்டன.

II. விஜய நகரப் பேரரசு (கி.பி. 1336–1565)

முஸ்லிம்களின் ஆதிக்கம் தென்னிந்தியா வரையிலும் பரவி இருந்தது. அச்சமயத்தில் விஜயநகரப் பேரரசு தோன்றி முஸ்லிம்களின் ஆதிக்கம் மேலும் வலுப் பெறாது செய்தது.



படம் 16. விஜயநகரப் பேரரசு

தோற்றம் : சங்கமர் என்னும் ஒய்சாளப் படைத் தலைவரின் வீரப் புதல்வர்கள் **ஹரிஹரர், புக்கர்** என்பவர்கள் தங்களது குரு **வித்யாரண்யரின்** வேண்டு கோளின்பேரில், துங்கபத்திரை ஆற்றின் தென்கரையில், கி. பி. 1336-ல் ஓர் ஊரை உண்டாக்கினார்கள். அதை விஜய நகரம் என்றழைத்தனர். அவர்களது முக்கிய நோக்கம் முஸ்லிம் ஆதிக்கத்தைத் தென்னிந்தியாவில் தடுத்து நிறுத்துவதேயாகும்.

விஜய நகரப் பேரரசு மிகக் குறுகிய காலத்திலேயே விரிந்தும் பலமுள்ளதாகவும் ஆனதோடு தென்னிந்தியா முழுவதும் பரவிற்று. விஜயநகரப் பேரரசின் சிறப்பியல்பு அதன் விரிந்து பரந்த நிலப்பரப்பு அன்று. அதன் வலிமையே முந்நூறு ஆண்டு காலம் அந்நியர் ஆட்சி தென்னிந்தியாவில் நுழைய முடியாமல் தடுத்துக் காத்தது. இந்து மதம் இவர்கள் காலத்தில் சிறந்து விளங்கியது. பழமையான இந்துக் கலாசாரத்தைத் தென்னிந்தியாவில் மட்டுமே பல இடங்களில் இன்றும் நாம் காணலாம். விஜய நகரப் பேரரசின் தோற்றமே இதற்குக் காரணமாகும்.

கிருஷ்ண தேவராயர் : விஜய நகர அரசர்களுள் தலைசிறந்தவர் கிருஷ்ண தேவராயர். அவர் ஒரு சிறந்த அறிவாளி. அவர் தெலுங்கு மொழியிலும் சமஸ்கிருதத் திலும் பல நூல்கள் எழுதி யுள்ளார். அவர் தெலுங்கில் **ஆமுக்த மால்யதா** என்னும் நூலை எழுதினார். சமஸ்கிருதத்தில் **உஷாபரிணயம்** என்னும் நூலை எழுதி யுள்ளார். அவர் கட்டடக் கலைக்குப் பெரிய தொண்டு செய்தார். அநேகக் கோவில்களைக் கட்டினார்; சில வற்றைப் புதுப்பிக்கவும் செய்தார்.

வீழ்ச்சி : தலைக்கோட்டைப் போர் (1565): அவருடைய மறைவுக்குப் பின்னர் தக்காணத்திலிருந்த முஸ்லிம் அரசர்கள் ஒன்றுகூடி விஜய நகரப் பேரரசை எதிர்த் தனர். கி. பி. 1565-ல் தலைக்கோட்டையில் **ராமராயர்**

தலைமையில் நடந்த போரில் விஜயநகரப் படைகளைப் பாமினி சுல்தான்கள் முறியடித்தனர். பின்னர் விஜய நகரை அழித்தனர்.

(உ) இராஜபுத்திரர்கள்

இராஜபுத்திரர்களைப்பற்றிப் பலவித கருத்துகள் நிலவுகின்றன. இந்தியாவில் சாகர்கள், குஷானர்கள், ஹூணர்கள் போன்ற அந்நிய இனத்தவர் குடியேறி இந்து மதத்தைத் தழுவி வாழ்ந்தனர் என்றும், அவர்களுள் வீரம் மிக்கவர்கள் **இராஜபுத்திரர்கள்** என்று தம்மை அழைத்துக்கொண்டனர் என்றும் கருதப்படுகிறது. மேலும், மத்திய இந்தியாவில் வாழ்ந்த பழங்குடி மக்களே இராஜபுத்திரர்கள் என்றும் சிலர் கருதுகின்றனர்.

இராஜபுத்திரர்கள் பல பிரிவுகளாகப் பிரிந்து வாழ்ந்து வந்தனர். பெரும்பாலானவை சிறு அரசுகளைப் போலவே விளங்கின. ஒவ்வொரு பிரிவும் தனித்தனியாக ஓர் அரசனால் ஆளப்பட்டு வந்தது. இராஜபுத்திரர்கள் மிக்க கடவுள் பக்தி கொண்டவர்களாக இருந்ததோடு பல இந்துக் கடவுளர்களையும் வணங்கி வந்தனர். இத்தலைவர்கள் தம் நிலத்தைத் தமக்கு இராணுவ சேவை செய்வதாக வாக்களித்த மக்கட்குப் பங்கிட்டுக் கொடுத்தனர். இது ஐரோப்பாவில் நிலவி வந்த நிலப்பண்ணை முறை போன்றதாகும்.

இராஜபுத்திரர்கள் தங்களுக்குள்ளேயே போரிட்டுக் கொள்வதோடு, தங்களைச் சுற்றி இருந்தவர்களோடும் போரிட்டனர். அவர்கள் போரை மிகவும் விரும்பினர். அவர்கள் சிறந்த வீரர்கள். சில சமயங்களில் அவர்களுடைய மகள்களும் மனைவியரும் போரில் பங்கேற்றதுண்டு கணவர் உயிர் துறந்தால் இராஜபுத்திரப் பெண்கள் தீக்குளிப்பது வழக்கம். உடன்கட்டை ஏறுதல் அவர்

களிடையே இருந்துவந்தது. இராஜபுத்திரப் பெண்கள் கற்புக்கரசிகளாக விளங்கினர். அவர்களிடையே சுயம்வர முறை இருந்தது. போரில் இறந்த வீரர்கள் சொர்க்கத்துக்குச் செல்வர் என அவர்கள் நம்பினர். அவர்களிடையே ஒற்றுமை இன்மையால் முஸ்லிம் மன்னர்கள் அவர்களை எளிதில் வென்றனர். **காஷ்மீரம், கன்னோசி, டில்லி, அஜ்மீர், மாளவம், பண்டில்கண்ட்** முதலியவை முக்கியமான இராஜபுத்திர அரசுகள் ஆகும்.

கலைகள் பலவும் இவர்கள் காலத்தில் சிறந்தோங்கின, மருத்துவம், விஞ்ஞானம், தத்துவம், நாடகம், சரித்திரம் முதலிய துறைகளில் பல புத்தகங்கள் எழுதப்பட்டன. இவர்களது காலத்தில்தான் **கல்ஹனாவின் இராஜதரங்கிணியும், தண்டியின் தசகுமார சரித்திரமும், சுபந்துவின் வாசவதத்தையும்** எழுதப்பட்டன. உரைநடை இலக்கியம் இக்காலத்தே சிறந்து விளங்கியது. **பவபூதி** பல நாடகங்களை இயற்றினார். அவற்றுள் முக்கியமானவை **மாலதி–மாதவம், உத்தம ராம சரிதம்** என்பவையாகும். **சிசுபால வதம்** என்னும் நூல் **மாகர்** என்னும் வடமொழிப் புலவரால் இயற்றப்பட்டது. மாளவ நாட்டு மன்னவரான போஜர் வடமொழிப் புலவர்களை ஆதரித்தார்.

பல அரிய கட்டடங்கள் இராஜபுத்திரர் காலத்தில் கட்டப்பட்டன. ஆகவே, கட்டடக் கலையும் வளர்ச்சியுற்றது. அவைகளுள் பல பின்னர் முஸ்லிம் படையெடுப்புகளால் தகர்க்கப்பட்டன. அயல்நாட்டு வாணிகம் பெருகியது. மேற்கே எகிப்து முதல் கிழக்கே சீனா வரை அவர்கள் வாணிகம் பரவியிருந்தது.

வினாக்கள்

I. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மகேந்திரவர்மரை சைவ சமயத்தைத் திரும்பத் தழுவும்படி செய்த நாயன்மார் ———— ஆவார்.

2. பல்லவர் காலத்துச் சிறப்பான கலைச் சின்னங்கள் ———— ல் காணப்படுகின்றன.

3. நரசிம்மவர்மரின் சிறப்புப் பெயர்கள் ————, ———— ஆகும்.

4 ———— உள்ள ஓவியங்கள், மகேந்திரவர்மரது காலத்தவையாகும்.

5. மாமல்லர் ஆட்சியில் இந்தியாவுக்கு வந்த சீன யாத்திரிகர் ———— ஆவார்

6. இராசராசர் ———— கோயிலைக் கட்டினார்.

7. இராசேந்திர சோழர் மகிபாலனை வென்றதால் ———— ———— என்ற பெயர் பூண்டு, ———— என்னும் நகரை நிர்மாணித்தார்.

8. குலோத்துங்கன் காலத்தில் பெரிய புராணம் இயற்றிய ———— வாழ்ந்தார்.

9. பிற்காலப் பாண்டியர்களில் ————, ———— முக்கியமான அரசர்கள் ஆவர்.

10. ———— காலத்தில் ———— என்ற வெனிஸ் யாத்திரிகர் தமிழ் நாட்டிற்கு வந்தார்.

11. பாமினி அரசை நிறுவியவர் ———— ஆவார்.

12. பாமினி அரசின் சிறந்த அமைச்சர் ————.

13. ————, ———— என்பவரால் துங்கபத்திரை ஆற்றின் தென்கரையில் விஜய நகரம் அமைக்கப் பட்டது.

14. விஜய நகர மன்னர்களுள் தலைசிறந்தவர் ———— ஆவார்.

15. விஜய நகரப் பேரரசு ———— ஆம் ஆண்டு நடந்த ————ப் போரில் தோல்வியடைந்ததால் வீழ்ச்சி அடைந்தது.

II. குறுகிய விடைகள் எழுதுக

1. பல்லவர்கள் யாவர்?

2. குடைவரைக் கோயில்கள் யாரால், எங்கெங்கு அமைக்கப் பட்டன?

3. மகேந்திரவர்மருக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர்கள் யாவை?

4. மகா பல்லவர்களுள் சிறந்தவர்களைக் கூறுக.
5. பல்லவர் காலத்திய கலைச் சின்னங்கள் சிலவற்றைக் கூறுக.
6. இராசராசர் கைப்பற்றிய நாடுகள் எவை?
7. கங்கை கொண்ட சோழபுரம் ஏன் அமைக்கப்பட்டது?
8. 'கடாரம் கொண்டான்' என்னும் பெயர் இராசேந்திர சோழனுக்கு ஏன் வழங்கப்பட்டது?
9. பாமினி பேரரசு எவ்வாறு உருவானது?
10. முகம்மது ஷாவின் அமைச்சர் யார்?
11. பாமினியின் ஐந்து தனி இராஜ்ஜியங்கள் எவை?
12. விஜய நகரப் பேரரசு எங்கு யாரால் அமைக்கப்பட்டது?
13. விஜய நகரத்தின் சிறந்த அரசர் யார்? அவர் எழுதிய நூல்கள் எவை?
14. இராஜபுத்திரர் யாவர்?
15. இராஜபுத்திரர் காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் யாவை?

III. **விரிவான விடை எழுதுக.**

1. கிருஷ்ணதேவராயரைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.
2. இராஜபுத்திர அரசர்களின் கலைத் தொண்டை விவரிக்கவும்.

பயிற்சி

படத்தில் குறிப்பிடுக.

(1) பல்லவப் பேரரசு. (2) பாமினிப் பேரரசு.
(3) விஜயநகரப் பேரரசு.

8. ஐரோப்பாவில் நவீன காலத் தொடக்கம்

முன்னுரை

நவீன காலம் ஐரோப்பாவில் எந்த ஆண்டில் தொடங்கியது என்பதைக் கூற இயலாது. பொதுவாக, கி. பி. 16ஆம் நூற்றாண்டில் நவீன காலம் தொடங்கியது என்பது வரலாற்று ஆசிரியர்களின் கூற்றாகும்.

நவீன காலம் தொடங்கியதை நான்கு முக்கிய நிகழ்ச்சிகள் குறிப்பிடுகின்றன. அவையாவன: 1. கல்வி மறுமலர்ச்சி, 2. சமயச் சீர்திருத்தம், 3. புதிய நாடுகள், கடல்வழிக் கண்டுபிடிப்பு, 4. தேசிய நாடுகளின் தோற்றம்.

மறுமலர்ச்சி இயக்கம்

மறுமலர்ச்சி என்பதன் பொருள் **மறுபிறப்பு** ஆகும். பண்டைய கிரேக்க நாட்டிலும், ரோமானியப் பேரரசிலும் விளங்கிய பகுத்தறிவு உணர்வை மீண்டும் பெறுவதே மறுமலர்ச்சி எனப்படும். பண்டைய கிரேக்க, ரோமானிய இலக்கியம், கலை, அறிவியல் ஆகியவற்றின் மீது கி. பி. 16ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட புத்தார்வத்தையும் மறுமலர்ச்சி எனலாம். இடைக்கால இறுதியில் மக்கள் வாழ்வில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. அவர்கள் புத்துணர்ச்சியும், புதிய சிந்தனையும், புத்தறிவும் பெற்றார்கள். அவை இலக்கியம், அறிவியல் மற்றும் நுண்கலைகள் வாயிலாக வெளிப்பட்டன. இதையே நாம் 'மறுமலர்ச்சி' என்றழைக்கிறோம்.

மறுமலர்ச்சியின் காரணங்கள்

1. இடைக்காலத்தில் புனித ரோமானியப் பேரரசும், திருச்சபையும் ஐரோப்பாவில் ஆதிக்கம் செலுத்தின.

மக்களின் வாழ்க்கை முறை, கல்வி, இலக்கியம், கலை ஆகிய அனைத்தும் திருச்சபையால் கட்டுப்படுத்தப் பட்டன. பகுத்தறிவு வளர வழியே இல்லை. சிலுவைப் போர்களின் விளைவால் மக்களின் உள்ளத்தில் தாய் மொழிப் பற்றும் தேசியப் பற்றும் ஏற்பட்டன. கிரேக்க, இலத்தீன் இலக்கியம் மற்றும் நுண்கலைகளில் ஆர்வம் மிகுந்தது.

2. பல்லாண்டுகளாக **கான்ஸ்டாண்டிநோபில்** கிரேக்க அறிஞர்களின் வாழ்விடமாக இருந்தது. கி. பி. 1453-ல் துருக்கியர் அந்நகரைக் கைப்பற்றினர். எனவே, அந்த அறிஞர்கள் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று குடியேறினர். முக்கியமாக இத்தாலி நாடு அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றது. அவர்கள் தம்முடன் எடுத்துச் சென்ற கிரேக்க இலக்கியங்கள் மறு மலர்ச்சிக்கு வித்தாக அமைந்தன. இத்தாலியே மறு மலர்ச்சியின் பிறப்பிடமாயிற்று.

3. ஜெர்மனியில் **கூட்டன்பர்க்** என்பவர் முதன் முதலில் அச்சுப் பொறியை ஐரோப்பாவில் உருவாக்கி னார். இங்கிலாந்தில் **காக்ஸ்டன்** என்பவர் அச்சுக் கூடத்தை அமைத்தார். அச்சமயத்தில் காகிதம் தயாரிக் கும் முறையும் கண்டுபிடிக்கப்பட்டது. இவற்றின் விளை வாகக் கிரேக்க அறிஞர்களின் நூல்கள் அச்சிடப்பட்டன. மக்களிடையே படிக்கும் ஆர்வம் மிகுந்து, கல்வியறிவு வளர்ந்தது.

மறுமலர்ச்சியின் கூறுகள்

1. **இலக்கியம்:** இலக்கியத்துறையில் சிறந்த மறு மலர்ச்சி ஏற்பட்டது. 15ஆம் நூற்றாண்டுக்கு முன்ன மேயே இத்தாலியில் **தாந்தே, பெட்ராார்க், பொக்காஷியோ** ஆகிய அறிஞர்கள் தோன்றி இலக்கிய மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தனர். 16ஆம் நூற்றாண்டில் இத்தாலியில் மறுமலர்ச்சி உச்சகட்டத்தில் இருக்கும்போது **மாக்கிய வெல்லி** என்னும் அறிஞர் **பிரின்ஸ்** என்னும் நூலை எழுதி

னார். இது சிறந்த அரசியல் நூல்களுள் ஒன்றாகக் கருதப் படுகிறது. இது நமது நாட்டுக் **கௌடில்யரின் 'அர்த்த சாஸ்திரம்'** போன்றது ஆகும். இங்கிலாந்தில் **சர் தாமஸ் ரோ** எழுதிய **'உடோபியா'**வும் **ஷேக்ஸ்பியர்** எழுதிய பல நாடகங்களும் மறுமலர்ச்சி இலக்கியங்களாகும்.

2. நுண்கலைகள்: இலக்கியத்தை அடுத்து நுண்கலை களும் மறுமலர்ச்சி பெற்றன. இத்தாலியில் சிறந்த ஓவியர் களும் சிற்பிகளும் கட்டடக் கலைஞர்களும் தோன்றினர். அவர்களின் கைவண்ணத்தால் இத்தாலி நாடே ஒரு கலைக்கூடமாக மாறியது. **லியனார்டோ–டா–வின்சியின் மோனாலிசா**வும் **கடைசி இரவு உணவும்** தலைசிறந்த ஓவியங்களாகும். **மைக்கேலான்ஜலோ** ஒரு சிறந்த சிற்பி யாகவும் ஓவியராகவும் விளங்கினார். அவருடைய **கடைசி தீர்ப்பு** ஓவியம் மிகவும் சிறந்த ஒன்றாகும். **ராபேல்** மற்றுமோர் மறுமலர்ச்சி ஓவியராவார். ரோம் நகரில் உள்ள **புனித பீட்டர் ஆலயம்** மறுமலர்ச்சிக் கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

3. அறிவியல்: அறிவியல் துறையிலும் மறுமலர்ச்சி உண்டாயிற்று. போலந்து நாட்டு **கோபர்னிகசும்,** இத்தாலி நாட்டு **கலிலியோவும்,** வானசாஸ்திர ஆராய்ச்சி யில் சிறந்து விளங்கினர். அவர்கள், பூமி சூரியனைச் சுற்றி வருகின்றது என்பதைக் கண்டுபிடித்தார்கள்.

சமயச் சீர்திருத்த இயக்கம்

சமயச் சீர்திருத்த இயக்கம் என்பது இருவகைப்படும். ஒன்று, ரோம் சமயத் தலைவரான போப்பின் ஆதிக் கத்தை நீக்குவதாகும். மற்றொன்று, ரோம் சமய நிறு வனத்தில் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதாகும்.

காரணங்கள்

ரோமாபுரி போப், இயேசுவின் சீடரான புனித பீட்டர் வழியில் வந்தவர் எனக் கருதப்பட்டார். எனவே, இடைக்காலத்தில் கிறிஸ்தவ ஐரோப்பிய நாடுகள்

போப்பின் சமய ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டன; திருச்சபைக்குப் பலவித காணிக்கைகளையும் செலுத்தி வந்தன. ஐரோப்பாவில் கிறிஸ்தவ சமயத்தில் ஒற்றுமை நிலவி வந்தது.

கி. பி. பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் தேசிய உணர்வு தோன்றிற்று. அரசியல் விவகாரங்களில் சமயம் தலையிடுவதை அந்நாடுகள் விரும்பாமல், போப்பின் அதிகாரத்தை எதிர்த்தன. கிறிஸ்தவ வேதநூல் (பைபிள்) பிராந்திய மொழிகளில் அச்சிடப்பட்டதால் அனைவரும் படித்தனர். மறுமலர்ச்சியின் விளைவாக மக்களிடம் பகுத்தறிவு வளர்ந்து இருந்தது. சிலர், கொள்கைகளிலும் மதச் சடங்குகளிலும் சிறிதளவு மாறுதல்களை விரும்பினர். சிலர் அதற்கு மாறுபட்ட கருத்துகளைத் தெரிவித்தனர்.

படம் 17. மார்ட்டின் லூதர்

கிறிஸ்தவ சமயச் சீர்திருத்தம் தோன்றக் காரணமாக இருந்தவர் **மார்ட்டின் லூதர்** என்பவர். இவர் ஜெர்மனியில் **விட்டன்பர்க்** பல்கலைக் கழகத்தில் சமய தத்துவப் பேராசிரியராக இருந்தவர். **பத்தாம் லியோ** போப்பாக இருந்தபோது லூதர் தம் சமயக் கருத்துகளை வெளியிட்டார். அவை ரோம சமய நிறுவனத்திற்கு விரோதமாக அமைந்திருந்தன. எனவே, லூதர் கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து விலக்கப்பட்டார். ஆனால், லூதரின் கருத்துகளுக்கு ஜெர்மனியில் சில சிற்றரசர்களும் மக்களும் ஆதரவு தந்தனர். லூதரைப் பின்பற்றியவர்கள் **பிராட்டஸ்டன்டுகள்** என்றும், மற்றவர்கள் **ரோமன் கத்தோலிக்கர்கள்** என்றும் அழைக்கப்பட்டார்கள்.

பிராட்டஸ்டன்டு மதம் பரவுதல்

ஐரோப்பாவில்: ஜெர்மனியில் தோன்றிய பிராட்டஸ்டன்டு மதம் நாளடைவில் சுவிட்ஜர்லாந்து, பிரான்ஸ், நெதர்லாந்து, ஸ்காட்லாந்து, நார்வே, ஸ்வீடன் ஆகிய நாடுகளில் பரவியது. **ஜான் கால்வின், உல்ரிச் ஸ்விங்கிலி, ஜான் நாக்ஸ்** போன்ற மதப்பெரியார்கள் இத்துறையில் அரும்பாடுபட்டனர்.

இங்கிலாந்தில்: இங்கிலாந்தை ஆண்ட **எட்டாம் ஹென்றி** முதலில் போப்பை ஆதரித்தார். லூதரின் கொள்கைகளைக் கண்டித்தார். பின்னர் தம் கருத்துகளை மாற்றிக்கொண்டார். போப்பின் சமய அதிகாரத்தை ஒரு சட்டத்தின் மூலம் அகற்றினார். தாமே இங்கிலாந்து மத நிறுவனத்தின் தலைவரானார். மேரி அரசியின் காலத்தில் கத்தோலிக்க மதம் புத்துயிர் பெற்றது. ஆனால் **எலிசபெத்** ஆட்சியின்போது பிராட்டஸ்டன்டு மதம் சில மாற்றங்களுடன் **ஆங்கிலிகன்** மதம் என்ற புதிய பெயரைப் பெற்றது.

மதச் சீர்த்திருத்த எதிர் இயக்கம்

ஐரோப்பாவில் பிராட்டஸ்டன்டு மதம் பரவியதால் கத்தோலிக்கர் கலக்கமடைந்தனர். தங்கள் மதத்திற்குப் புத்துயிர் அளிக்க விரும்பினர். கி. பி. 1545-ல் **மத ஊழியர் சங்கம்** ஒன்று **டிரென்ட்** என்னுமிடத்தில் கூட்டப்பட்டது. இச்சங்கம் மதநிறுவனத்தில் இருந்த ஊழல்களையும் குறைபாடுகளையும் ஆராய்ந்தது. அவற்றை அகற்றுவதற்குரிய வழிமுறைகளைக் கண்டது. இந்த ஏற்பாட்டையே **மதச்சீர்திருத்த எதிர் இயக்கம்** என்கிறோம்.

இச்சமயத்தில் **இக்னேஷியஸ் லயோலா** என்பவர் **இயேசு சங்கம்** ஒன்றை ஏற்படுத்தினார். இதன் உறுப்பினர்கள் தங்கள் உடல், பொருள், உயிர் அனைத்தையும் கத்தோலிக்க மதப்பணிக்கு அர்ப்பணித்தனர்.

பல நாடுகளில் பள்ளிகளையும் கல்லூரிகளையும் அமைத்துக் கத்தோலிக்க மதத்தைப் பரப்பினர்.

விளைவுகள்

ஐரோப்பாவில் பல கிறிஸ்தவ மதப்பிரிவுகள் ஏற்பட்டதால் சமய ஒற்றுமை சீர் குலைந்தது. பிராட்டஸ்டன்டு நாடுகளில் அரசர் மதத் தலைவரானார். அங்கெல்லாம் அரசரின் அதிகாரம் மேலும் அதிகரித்தது. மதத்தின் பெயரால் மக்கள் பலகாலம் துன்புறுத்தப்பட்டனர்.

படம் 18. இக்னேஷியஸ் லயோலா

புதிய நாடுகளும் கடல் வழிகளும் கண்டுபிடிக்கப்படல்

காரணங்கள்

1. பண்டைக் காலம் முதல் ஐரோப்பாவுக்கும், இந்தியா போன்ற கீழை நாடுகளுக்கும் வாணிகத் தொடர்பு இருந்து வந்தது. இவ்வாணிகம் மத்திய தரைக் கடல் வழியாகவும் நிலவழியாகவும் நடைபெற்றது. **கான்ஸ்டான்டிநோபில்** என்னும் நகரம் சிறந்த வாணிகச் சந்திப்பாக விளங்கியது. கி. பி. 1453-ல் துருக்கியர் அந்நகரைக் கைப்பற்றியதால் இந்த வாணிகப் பாதை தடைப்பட்டது.

2. இச்சமயத்தில் **மாலுமி திசையறி கருவி** கண்டு பிடிக்கப்பட்டது. இதில் உள்ள முள் எப்போதும் வடக்குத் திசையையே காட்டும். இக்கருவியின் உதவி

யால் மாலுமிகள் உலகின் எப்பாகத்திற்கும் எந்நேரத்திலும் திசையறிந்து தங்கள் கப்பல்களைச் செலுத்த முடிந்தது. அவர்கள் நெடுந்தூரக் கப்பற்பயணங்களையும் மேற்கொள்ள இயன்றது.

3. மேலும், பூமி உருண்டை வடிவமானது என்ற உண்மை வெளிப்படுத்தப்பட்டதால், மேற்குத் திசையில் பயணம் செய்தால் சீனாவையும் இந்தியாவையும் அடைய முடியும் என்ற நம்பிக்கை வளர்ந்தது. புதிய கடல் வழிகளைக் கண்டுபிடிப்பதில் போர்ச்சுகல், ஸ்பெயின் நாட்டு மன்னர்கள் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டார்கள்.

கண்டுபிடிப்புகள்

கொலம்பஸ் : கிறிஸ்தபர் கொலம்பஸ் என்பவர் ஓர் இத்தாலிய நாட்டு மாலுமி. 'அவர் இந்தியாவுக்குக் கடல் வழி ஒன்றைக் காண விரும்பினார். ஸ்பெயின் நாட்டு அரசர் **பெர்டினான்ட்** அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார். பூமி உருண்டை வடிவானது என்பதை அறிந்த கொலம்பஸ், மேற்கு நோக்கிச் சென்றால் கிழக்கே உள்ள இந்தியாவை அடையலாம் என்று நினைத்தார். அட்லான்டிக் பெருங்கடலைக் கடந்து கி. பி. 1492-ல் **பஹாமாத் தீவுகளை** அடைந்தார். அதுவே இந்தியா எனக் கருதி, அங்குள்ள மக்களைச் **செவ்விந்தியர்** என அழைத்தார். கொலம்பஸின் விருப்பம் நிறைவேறவில்லை, என்றாலும் புதிய இடத்தைக் கண்டுபிடித்த பெருமையை அவர் பெற்றார். அவர் கண்டுபிடித்த தீவுகள் **மேற்கிந்தியத் தீவுகள்** என்றழைக்கப்படுகின்றன.

அமெரிக்கோ வெஸ்புகி : கொலம்பசுக்குப் பின், **அமெரிக்கோ வெஸ்புகி** என்ற இத்தாலிய மாலுமி அம் முயற்சியைத் தொடர்ந்தார். கொலம்பஸ் சென்ற வழியே சென்று அவர் புதியதொரு பரந்த நிலப் பகுதியைக் கண்டுபிடித்தார். கொலம்பஸ் கண்டது



படம் 19. நிலவியல் கண்டுபிடிப்புகள்

இந்தியா அல்ல என்றும், அது ஒரு புதிய பெரிய கண்டமே என்றும் அறிவித்தார். எனவே, கொலம்பஸ் புதிய உலகத்தைக் கண்டுபிடித்தார். அதற்கு அமெரிக்கோ வெஸ்புகியின் நினைவாக **அமெரிக்கா** என்ற பெயரிடப் பட்டது.

வாஸ்கோட காமா : போர்ச்சுகல் மன்னர்களான **ஹென்றியும் ஜானும்** புதிய கடல் வழிகளைக் காண்பதில் ஆர்வம் காட்டினர்; மாலுமிகளுக்கு உதவிகள் செய்து ஊக்கமூட்டினர். **பார்த்தலோமியோ டயஸ்** என்ற போர்ச்சு கீசிய மாலுமி கி. பி. 1489-ல் ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரை வழியாகத் தென்கோடி வரை சென்றார். அங்கு புயல் வீசியதால், அவ்விடத்திற்குப் **புயல் முனை** என்ற பெயரிட்டுத் திரும்பிவிட்டார். பின்னர் அதுவே **நன்னம்பிக்கை முனை** என்றழைக்கப்பட்டது. கி. பி. 1498-ல் **வாஸ்கோட காமா** என்னும் போர்ச்சுகீசிய மாலுமி அம்முனையைச் சுற்றி இந்தியப் பெருங்கடலைக் கடந்தார். பின்னர் இந்தியாவில் உள்ள **கள்ளிக்கோட்டை** அல்லது **கோழிக் கோடு** என்னும் இடத்தில் இறங்கினார். இந்தியாவிற்குப் புதிய கடல் வழியைக் கண்டுபிடித்த பெருமையை வாஸ்கோட காமா பெற்றார்.

மெகல்லன் : மெகல்லன் என்பவர் ஒரு போர்ச்சுகீசிய மாலுமி. இவர் ஸ்பெயின் மன்னரான **ஐந்தாம் சார்லஸ்** உதவியுடன் உலகம் சுற்றும் தம் கடற்பயணத்தை ஆரம் பித்தார். ஐந்து கப்பல்களுடன் அட்லாண்டிக் பெருங் கடலைக் கடந்தார். தென் அமெரிக்காவின் தென்கோடியி லுள்ள நீர்ப்பிரிவு வழியாக பசிபிக் பெருங்கடலைக் கடந்து,அவர் ஒரு தீவுக் கூட்டத்தை அடைந்தார். அதற்கு ஸ்பெயின் மன்னரின் புதல்வரான **பிலிப்** என்பவர் பெயரால் **பிலிப்பைன்ஸ் தீவுகள்** எனப் பெயரிட்டார். ஆனால், அங்கு நடந்த போரில் மெகல்லன் கொல்லப் பட்டார். எனினும், அவரின் கப்பல் முதன் முதலாக உலகை வலம் வந்து, ஸ்பெயின் நாட்டை அடைந்தது. இது ஓர் அரிய சாதனையாகும்.

கண்டுபிடிப்புகளின் விளைவுகள்

மெகல்லனின் கடற்பயணத்தின் விளைவாக பூமி உருண்டை வடிவமானது என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. இங்கிலாந்து, ஸ்பெயின், போர்ச்சுகல், பிரான்ஸ், ஹாலந்து போன்ற நாடுகள் கடல் வாணிகத்தில் முன்னேற்றம் அடைந்தன. கடல் கடந்து குடியேற்ற நாடுகள் ஏற்பட்டன. ஐரோப்பிய நாடுகளின் வாணிகத் தலங்கள் பல உலகெங்கும் நிறுவப்பட்டன. வங்கி வணிக முறை தோன்றியது. ஐரோப்பாவில் செல்வம் கொழித்தது. உலக நாகரிகத்தின் மையமாக ஐரோப்பா விளங்கிற்று. கிறிஸ்தவ மதம் அயல்நாடுகளில் பரவியது. ஐரோப்பிய நாடுகளிடையே வாணிகத்தில் கடும்போட்டி ஏற்பட்டது. பல போர்கள் மூண்டன. நீக்ரோ அடிமை முறை அமெரிக்காவில் உண்டானது.

தேசிய நாடுகளின் தோற்றம்

ஒரு குறிப்பிட்ட மொழி, சமயம், பண்பாடு, பழக்க வழக்கங்களைக் கொண்ட மக்கள் இணைந்து வாழ விரும்புவது இயற்கையாகும். இதைத் தேசிய உணர்ச்சி என்கிறோம். இத்தகைய உணர்ச்சியுடைய மக்கள் நாட்டின்மீது பற்றும் பெருமையும் கொண்டிருப்பார்கள்.

இடைக்கால இறுதியில் இத்தகைய தேசிய உணர்ச்சி ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகளில் ஏற்படவில்லை. ஆனால், இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற நாடுகளில் தேசிய உணர்ச்சி மிகுந்து காணப்பட்டது. இதற்கு முக்கிய காரணங்கள் பிராந்திய மொழி வளர்ச்சி, சமயச் சீர்திருத்த இயக்கம், நிலமானிய முறை அழிவு ஆகியவையாகும்.

(i) இங்கிலாந்து

டியூடர் மன்னர்கள் இங்கிலாந்தை ஆட்சி செய்த காலத்தில் தேசிய உணர்ச்சி அதிகமாயிற்று. எட்டாம்

ஹென்றி இங்கிலாந்தை வலிமை மிக்க நாடாக மாற்றி னார்; நாட்டின் செல்வாக்கையும் புகழையும் உயர்த்தி னார். அவர் மகள் **எலிசபெத் அரசி** நீண்ட காலம் திறமை யுடனும் பெருமையுடனும் ஆட்சி புரிந்தார். அக்காலத் தில் இங்கிலாந்து 'கடல்களின் இராணி'யாகத் திகழ்ந்தது. கடல் கடந்த குடியேற்ற நாடுகள் ஏற்பட்டன.

(ii) பிரான்ஸ்

பிரான்ஸ் நாட்டின் முன்னேற்றத்திற்குப் **பிலிப் அகஸ்டஸ்** என்பவர் அடிகோலினார். ஆங்கில மன்னர் ஜான் என்பவரைத் தோற்கடித்து அவர் ஆண்டு வந்த பிரெஞ்சுப் பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டார். பின்னர் நூறு ஆண்டுப் போர் நடந்தபோது **ஜோன் ஆஃப் ஆர்க்** என்னும் வீராங்கனை தோன்றினார். அவர் பிரெஞ்சு மக்களிடம் நாட்டுப்பற்றையும் ஒற்றுமை உணர்வையும் வளர்த்தார். நூறு ஆண்டுப் போரின் முடிவில் பிரான்ஸ் வலிமை மிக்க தேசிய நாடாக மாறியது. கி.பி. 15ஆம் நூற்றாண்டில் **பதினோராம் லூயி, எட்டாம் சார்லஸ்** மன்னர்கள் காலத்தில் பிரான்ஸ் மேலும் உயர்ந்து சிறப்படைந்தது.

(iii) ஸ்பெயின்

கி. பி. 15ஆம் நூற்றாண்டில் ஸ்பெயினில் மூன்று இராஜ்ஜியங்கள் இருந்தன. அவற்றுள் இரண்டு கிறிஸ்தவ மன்னர்களாலும், மூன்றாவது முஸ்லிம் மன்னராலும் ஆளப்பட்டு வந்தன. **அரகான்** நாட்டு மன்னரான **பெர்டினாண்டு, காஸ்டைல்** நாட்டு அரசி **இஸபெல்லாவை** மணந்தார். இதனால் இரண்டு கிறிஸ்தவ இராச்சியங்கள் ஒன்றாக இணைந்தன. இவர்கள் **கிரானடாவைக்** கைப்பற்றி, அங்கிருந்த முஸ்லிம் ஆட்சியை அகற்றினர். இவ்வாறாக, ஸ்பெயின் ஒரு தேசிய நாடாக மாறி வலிமையடைந்து முன்னேறியது. கி.பி. 16ஆம் நூற் றாண்டில் **ஐந்தாம் சார்லஸ்** மன்னரும், **இரண்டாம் பிலிப்** மன்னரும் திறமையுடன் ஆட்சி செய்து புகழ் பெற்றனர்.

விளைவுகள்

ஐரோப்பாவில் வலிமை மிக்க தேசிய நாடுகள் தோன்றியதால், இவற்றிடையே கடும் போட்டிகள் ஏற்பட்டன. அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன. இப்போர்கள் கடல் கடந்த குடியேற்ற நாடுகளுக்கும் பரவின. தேசிய நாடுகள் தோன்றுவதற்கு அரசர்கள் காரணமாக இருந்தபடியால் எல்லா நாடுகளிலும் அரசரின் ஆதிக்கம் வளர்ந்தது. 16, 17 ஆம் நூற்றாண்டுகள் ஐரோப்பாவின் வல்லாட்சியாளர் காலம் ஆகும்.

வினாக்கள்

I. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ஐரோப்பாவில் நவீன காலம் ———— ஆம் நூற்றாண்டில் தொடங்கியது.
2. லியனார்டோ-டா-வின்சியின் தலைசிறந்த ஓவியங்களுள் ஒன்று ———— ஆகும்.
3. முதன் முதலில் அச்சுப் பொறியை ஐரோப்பாவில் உருவாக்கியவர் ————.
4. கிறிஸ்தவ மதச் சீர்திருத்தம் தோன்றக் காரணமாக இருந்தவர் ———— என்பவர்.
5. முதன் முதலில் உலகை வலம் வந்தது ———— என்பவரின் கப்பலாம்.

II. பின்வருவனவற்றுள் மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மறுமலர்ச்சி இயக்கம் ஐரோப்பாவில் தோன்றக் காரணம்

   (அ) சிலுவைப் போர்கள் (ஆ) அச்சு எந்திரம் கண்டுபிடிப்பு (இ) பண்டைய கிரேக்க ரோமானிய இலக்கியங்களை அறிஞர்கள் கொண்டு வந்தது (ஈ) தேசிய அரசுகள் தோன்றுதல்.

2. புதிய நாடுகள், கடல் வழிகள் கண்டுபிடிப்புக்கு முக்கிய காரணமாக அமைந்த நிகழ்ச்சி

(அ) மாலுமி திசையறி கருவி கண்டுபிடிப்பு.

(ஆ) கான்ஸ்டான்டிநோபில் துருக்கியர் வசமானது.

(இ) பூமி உருண்டை வடிவமானது என்ற கருத்து.

(ஈ) ஸ்பெயின் மன்னர்களின் ஆதரவு.

III. குறுகிய விடை எழுதுக.

1. நவீன காலத் தொடக்கத்தைக் குறிப்பிடும் நிகழ்ச்சிகள் யாவை?
2. மாக்கியவெல்லியின் புகழுக்குக் காரணம் என்ன?
3. இக்னேஷியஸ் லயோலா என்பவர் செய்த தொண்டு யாது?
4. கொலம்பஸ் எதைக் கண்டுபிடித்தார்?
5. ஐரோப்பாவின் தேசிய நாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக.

IV. விரிவான விடை எழுதுக.

1. ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்பட்டதற்குரிய காரணங்களைக் கூறுக.
2. ஐரோப்பாவில் மதச்சீர்திருத்தம் தோன்றக் காரணங்கள் யாவை?
3. புதிய நாடுகள், கடல் வழிகள் கண்டுபிடிப்பினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?
4. ஸ்பெயின் எவ்வாறு தேசிய நாடாக மாறியது?

பயிற்சி

1. திசையறி கருவியைப் பார்த்து, அதன் அமைப்பினைத் தெரிந்துகொள்.
2. நவீன அச்சகம் ஒன்றுக்குச் சென்று, அதன் பல்வேறு பகுதிகளைப் பார்வையிடு.
3. உலக உருண்டையை வைத்து, கடல் வழிகளைத் தெரிந்துகொள்க.
4. உலகப் படத்தில் கொலம்பஸ், வாஸ்கோடகாமா, மெகல்லன் சென்ற கடல் வழிகளை வெவ்வேறு வண்ணமிட்டுக் காட்டுக.

9. கி.பி. 16, 17ஆம் நூற்றாண்டுகளில் ஆசியா

முன்னுரை

நவீன காலம் ஐரோப்பாவில் 16ஆம் நூற்றாண்டில் தொடங்கிற்று. ஆனால், இந்தியாவில் நவீன காலம் 18 ஆம் நூற்றாண்டில்தான் தொடங்கியது. 16, 17ஆம் நூற்றாண்டுகள் இந்திய வரலாற்றில் இடைக்காலமாகக் கருதப்படுகின்றன. அக்காலத்தில் இந்தியாவில் அமைந்த மொகலாயப் பேரரசு பொலிவுடன் விளங்கியது.

சீனாவிலும் ஜப்பானிலும் 19ஆம் நூற்றாண்டில் தான் நவீன காலம் தொடங்கியது. 16, 17ஆம் நூற்றாண்டுகள் அவைகளின் இடைக்காலமாகும். இக்காலத்தில் அவ்விரு நாடுகளும் மேலை நாடுகளின் தொடர்பு இல்லாமல் தனித்து வாழ்ந்தன.

இந்தியாவில் மொகலாயப் பேரரசு
(கி. பி. 1526–1707)

I. பாபர் *(கி. பி. 1526–1530)*

இந்தியாவில் மொகாலயப் பேரரசுக்கு அடிகோலியவர் **பாபர்** ஆவார். பாபர் முதலில் காபூலை ஆண்டுவந்தார். டில்லியை ஆண்ட இப்ரஹிம் லோடி திறமையற்றவர். எனவே, பாபர் கி.பி. 1526-ல் தௌலத்கான் லோடியின் அழைப்பின் பேரில் இந்தியாவின்மீது படையெடுத்தார். **முதல் பானிப்பட்** போரில் இப்ரஹிம் லோடியை வென்று டெல்லியைக் கைப்பற்றினார். பின்னர் காணுவாப் போரில் இராசபுத்திரர்களை வென்றார். **கோக்ரா நதிப்**போரில் ஆப்கானியப் படையை முறியடித்

தார். முடிவில் வட இந்தியாவில் தம் ஆட்சியை நிலை நாட்டினார். கி. பி. 1530-ல் பாபர் இறந்தார்.

பாபர் ஒரு சிறந்த போர் வீரர். அவர் சிறந்த எழுத்தாளராகவும் விளங்கினார். **பாபர் நாமா** என்ற சுய சரிதையை அவர் துருக்கிய மொழியில் எழுதியுள்ளார்.

II. ஹுமாயூன் (கி. பி. 1530—1556)

பாபருக்குப்பின் ஹுமாயூன் அரசரானார். அவர் திறமையற்றவர். அதனால் ஷேர்கான் என்ற ஆப்கானியர் அரசைக் கைப்பற்றினார். **ஷெர்ஷா** என்னும் பெயருடன் சிறப்பாக அவர் ஐந்து ஆண்டுகள் அரசாண்டார். அவரின் சீர்திருத்தங்கள் சிலவற்றை அக்பர் பின்பற்றினார். ஷெர்ஷா இறந்தபின் கி.பி. 1556-ல் ஹுமாயூன் பாரசீக அரசரின் உதவியுடன் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினார். ஆனால், ஆறு மாதங்களுக்குப்பின் காலமானார்.

III. மகா அக்பர் (கி. பி. 1556-1605)

அக்பரின் வெற்றிகள் : அக்பர் தம் பதின்மூன்றாம் வயதில் அரசரானார். அவரது சார்பில் பைராம்கான் என்ற அவர் தாய் மாமன் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தினார். ஹெமு என்ற இந்துத் தலைவர் டில்லியில் இந்து அரசை ஏற்படுத்த முயன்றார். ஆனால், பைராம்கான் ஹெமுவை பானிப்பட் என்னும் இடத்தில் கி. பி. 1556-ல் தோற்கடித்தார். இதுவே **இரண்டாம் பானிப்பட் போர்** எனப்படும். இதன் விளைவாக மொகலாயர் ஆட்சி இந்தியாவில் நிலைபெற்றது.

அக்பர் தமது 18ஆம் வயதில் தாமே ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். தம் போர்த்திறமையால் பல இராஜ்ஜியங்களை வென்று, தம் அரசை

விரிவாக்கினார். அவர் காலத்தில் மொகலாயப் பேரரசு வடமேற்கில் பலுசிஸ்தானம் முதல் கிழக்கில் வங்காளம் வரை பரவி இருந்தது. வடக்கில் காபூல் முதல் தெற்கே கோதாவரி வரை விரிந்து இருந்தது. அக்பரது பேரரசு 15 சுபாக்களாகப் பிரிக்கப் பட்டுச் சிறந்த முறையில் ஆட்சி செய்யப் பட்டது.

படம் 20. அக்பர்

அக்பரும் இந்துக்களும் : அக்பர் தம்மை ஒரு தேசிய மன்னராகக் கருதினார். அவர் பரந்த நோக்கும் கூரிய அறிவும் பெற்றிருந்தார். இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்குப் பாடுபட்ட முதல் மன்னர் அக்பரேயாவார். இந்துக்களின் ஒத்துழைப்பு இன்றி நாட்டில் அமைதி நிலவாது என்பதை அவர் உணர்ந்தார். இந்துக்களின்மீது விதிக்கப்பட்டிருந்த ஜிஸியா என்ற தலைவரியை அவர் நீக்கினார். இராஜ புத்திரர்களுக்கும் மொகலாயர்களுக்கும் திருமண உறவை ஏற்படுத்தினார். அக்பர் இந்துக்களுக்கு உயர்ந்த பதவிகளைத் தந்தார். **இராஜா தோடர்மால், இராஜா மான்சிங், இராஜா பீர்பால்** போன்ற இந்துக்கள் அக்பரின் அவையை அலங்கரித்து, அவருக்கு உறுதுணையாக இருந்தனர்.

தீன்-இலாஹி : அக்பர் அனைத்து மதங்களிலும் உண்மை உண்டு எனக் கருதினார். தம் அரண்மனையில் பல இந்து, கிறிஸ்தவ மதத் தலைவர்களை ஒன்றுகூட்டி விவாதித்தார். ஒவ்வொரு மதத்திலும் உள்ள சிறந்த கருத்துகளை ஒன்றுசேர்த்தார். அவற்றைத் தொகுத்து

தீன்-இலாஹி (தெய்வீக மதம்) என்ற மதத்தைத் தோற்று வித்தார். ஆனால் அக்பர் மறைவுக்குப் பின் அம்மதமும் மறைந்தது.



படம் 21. அக்பரின் பேரரசு

நிலவரிச் சீர்திருத்தங்கள் : அக்பரின் நிலவரிச் சீர் திருத்தங்கள் குறிப்பிடத்தக்கதாகும். அவர் காலத்தில்

நிலங்கள் அளக்கப்பட்டு, தரம்வாரியாகப் பிரிக்கப்பட்டு, வரிகள் விதிக்கப்பட்டன. வரியைத் தானியமாகவோ பணமாகவோ செலுத்தலாம். உழவரிடமிருந்து வரி நேராகப் பெறப்பட்டது. வெள்ளம் அல்லது பஞ்சம் வந்த போது வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

அக்பரின் பெருமை: கி. பி. 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் சமயச் சண்டைகள் மலிந்திருந்தன. ஆனால், இந்தியாவில் அக்பர் மதச் சகிப்புத்தன்மை யுடன் ஆட்சி புரிந்தார். எனவே, வரலாற்றில் அவர் **மகா அக்பர்** எனப் போற்றப்படுகிறார்.

அக்பரது காலத்தில் இலக்கியமும் கலைகளும் வளர்க்கப்பட்டன. **அபுல்பசல்** என்பவர் **அயினி அக்பரி, அக்பர் நாமா** என்னும் நூல்களை எழுதினார். **தான்சென்** என்னும் இசைமேதை ஆதரிக்கப்பட்டார். **துளசிதாஸ்** இந்தி 'இராமாயணத்தை' எழுதினார். அக்பர் கட்டடக் கலையைப் போற்றி வளர்த்தார். **பதேபூர் சிக்ரி** என்னும் அழகிய நகரத்தை உருவாக்கினார். டில்லியில் எழில் மிக்க ஹுமாயூன் மசூதியைக் கட்டினார்.

ஜஹாங்கீர் *(கி. பி. 1605—1627)*

அக்பர் இறந்தபின் அவர் மகன் ஜஹாங்கீர் அரசரானார். அவர் மனைவி **நூர்ஜஹான்** ஆட்சிப் பொறுப்பை ஏற்றுத் திறம்பட நடத்திவந்தார். ஜஹாங்கீர் காலத்தில் **கேப்டன் ஹாக்கின்ஸ், சர் தாமஸ் ரோ** என்ற இரண்டு ஆங்கிலேயத் தூதுவர்கள் இந்தியாவுக்கு வந்தனர். இந்தியாவுடன் வாணிகம் செய்யும் உரிமையை ஆங்கிலேயர் பெற்றனர்.

ஷாஜஹான் *(கி. பி. 1628–1658)*

ஜஹாங்கீருக்குப்பின் அவர் மைந்தர் **குர்ரம், ஷாஜஹான்** என்ற பெயருடன் ஆட்சிக்கு வந்தார். அவருடைய காலம் **மொகலாயப் பேரரசின் பொற்காலம்**

எனப்படுகிறது. டில்லியிலுள்ள **செங்கோட்டை, ஜும்மா மசூதி** ஆகிய சிறந்த கட்டடங்களை அவர் கட்டினார். அவர் தம் மனைவி மும்தாஜின் நினைவாக, அழகே உருவான **தாஜ்மகாலை** ஆக்ராவில் கட்டினார். அது அனைவரும் வியந்து பாராட்டும் ஓர் அற்புதப் படைப்பாகும். விலை உயர்ந்த கற்கள் பதித்த தங்க **மயிலாசனம்** ஒன்றையும் ஷாஜஹான் செய்தார்.

ஔரங்கசீப் *(கி. பி. 1658-1707)*

ஷாஜஹானின் மூன்றாம் மைந்தரான ஔரங்கசீப், தந்தைக்குப்பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அவர் ஒரு தீவிர முஸ்லிம் ஆவார். இஸ்லாம் மதக் கொள்கையைக் கடைப்பிடித்து அவர் ஆட்சி செய்தார். முஸ்லிம்களுக்குப் பல சலுகைகளை அளித்தார். அவருக்கு மதச்சகிப்புத் தன்மை இல்லை.

ஔரங்கசீப்பின் தீவிர மதக்கொள்கையால் சீக்கியர்களும் இராஜபுத்திரர்களும் அவருக்கு எதிரிகளாயினர். தெற்கில் **சிவாஜியின்** தலைமையில் மராத்தியர்கள் ஒன்றுபட்டு ஔரங்கசீப்பை எதிர்த்தனர். சிவாஜி பிறவியிலேயே வீரத்துடன் பிறந்தார். மராத்தியர்களின் தனிப் பெருந்தலைவராகத் திகழ்ந்தார். எனினும் அவர் பிற மதங்களையும் அரவணைத்துச் சென்றார் திருக்குர் ஆணை மதித்தார். இந்தியர்களிடையே சுயராஜ்ய உணர்ச்சியை ஊக்குவித்தார். பீஜப்பூர், கோல் கொண்டா இராஜ்ஜியங்களை ஔரங்கசீப் கைப் பற்றியதால், தக்காண முஸ்லிம்கள் அவர்மீது பகைமை கொண்டனர்.

ஔரங்கசீப் பிறரை நம்பாமல் தாமே அனைத்து அலுவல்களையும் கவனித்தார். தக்காணப் போர்களில் பல ஆண்டுகள் ஈடுபட்டதால் வடக்கே குழப்பம் ஏற்பட்டது. மொகலாயப் பேரரசு அவர் காலத்தில் காஷ்மீர் முதல் காவிரி வரை பரந்து இருந்தது. எனினும்,

அவரது ஆட்சிக் காலத்திலேயே அது அழியத் தொடங்கியது.



படம் 22. ஔரங்கசீப் பேரரசு

மொகலாயப் பேரரசின் வீழ்ச்சி

ஔரங்கசீப்பிற்குப் பின் மொகலாயப் பேரரசு விரைவாக அழியத் தொடங்கியது. அதற்குரிய காரணங்கள் பின்வருவனவாகும் :

1. ஔரங்கசீப்பின் சந்ததியார் பரந்த பேரரசை ஆளும் திறமையற்று இருந்தனர்.

2. ஔரங்கசீப்பின் மதக்கொள்கையால் பெரும் பான்மையான மக்கள் அவருக்கு விரோதிகளாக மாறினர்.

3. வாரிசுரிமைப் போர்களும் அரண்மனைப் புரட்சி களும் பேரரசைப் பலவீனப்படுத்தின.

4. ஐரோப்பியரின் தலையீடு பேரரசின் அழிவைத் துரிதப்படுத்தியது.

5. பல்லாண்டுகளாக சுகபோக வாழ்க்கையை நடத்தியதால் மொகலாய வீரர்களின் போர்த்திறமை குன்றியது.

*6. பாரசீக மன்னர் **நாதிர்ஷா** கி. பி. 1739-ல் டில்லியின்மீது படையெடுத்து, அதைச் சூறையாடி அழித்தார்.*

இந்தியாவில் மொகலாயப் பேரரசு இரண்டு நூற்றாண்டுகள் நிலைத்துநின்று இணையற்ற ஆட்சி முறையைத் தந்தது.

சீனாவில் மிங், மஞ்சு மரபினர் ஆட்சி

மிங் மரபினர் ஆட்சி *(கி. பி. 1368–1644)*

கி. பி. 13ஆம் நூற்றாண்டில் **செங்கிஸ்கான்** *என்ற மங்கோலிய வீரர் சீனாவைக் கைப்பற்றி மங்கோலியர் ஆட்சியை நிறுவினார். செங்கிஸ்கானுக்குப் பின் அவரது மைந்தர்* **ஆக்டாய் கானும்,** *அவருக்குப் பின், அவரது பேரர்* **குப்ளாய் கானும்** *சீனாவில் ஆட்சி புரிந்தனர். குப்ளாய் கான் காலத்தில் வெனிஸ் நகரப் பயணி* **மார்க்கோ போலோ** *சீனாவில் சில வருடங்கள் தங்கியிருந்*

தார். செங்கிஸ்கான் வம்ச அரசர்கள் **யூவான்** வம்சத்தவர்கள் என அழைக்கப்பட்டனர்.

யூவான் வம்சம் ஓர் **அந்நிய** வம்சமாகும். எனவே, கி. பி. 1368-ல் அம்மரபினரை **மிங்** வம்சத்தினர் வீழ்த்தி விட்டனர். மிங் வம்சம் சீன வம்சமாகும். மிங் வம்சத்தை நிறுவியர் **சூ யுவான் சங்** என்பவர். அவர் சீன அரசரானதும் **ஹ"வாங்குவு** என்ற பெயரைச் சூட்டிக் கொண்டார். இவர் ஒரு சீனத் தொழிலாளியின் மைந்தர். இவர் சீனாவின் தலைநகரை வடக்கிலிருந்த **பீகிங்கிலிருந்து** மத்தியிலிருந்த **நான்கிங்** என்னுமிடத்திற்கு மாற்றினார். மிங் வம்சத்துத் தலைசிறந்த மன்னர் **யுங்லோ** என்பவர் ஆவார். இவர் தலைநகரை மீண்டும் பீகிங்கிற்கு மாற்றினார். அதுமுதற்கொண்டு சீனாவின் தலைநகரம் பீகிங்காகவே இருந்து வருகிறது.

மிங் வம்சத்தவர் ஆட்சி செய்தபோது இந்தோ-சீனா, கொரியா, பர்மா, ஜப்பான் ஆகிய நாடுகள் சீனாவின் ஏகாதிபத்தியத்தை ஏற்றுக்கொண்டன.

சீனாவைச் சுமார் மூன்று நூற்றாண்டுகள் வரை மிங் மரபினர் ஆண்டனர். அக்காலத்தில் சீனாவில் அமைதி நிலவியது; செல்வம் பெருகியது; கலைகளும் கைத் தொழில்களும் வளர்ந்தன. மரம், தந்தம், வெண்கலம் ஆகியவற்றால் அழகிய சிலைகள் செதுக்கப்பட்டன; சீனரது இல்லங்களை அவை அலங்கரித்தன. சீனர் வாழ்வு செழுமையும் மகிழ்ச்சியும் பெற்று விளங்கியது.

மஞ்சு மரபினர் ஆட்சி *(கி. பி. 1644—1911)*

மஞ்சுக்கள் சீனாவிற்கு அந்நியர்கள். அவர்கள் **தார்தாரிய** இனத்தைச் சார்ந்தவர்கள். மஞ்சுக்கள் சீனாவின் வட எல்லைப் பகுதியில் வாழ்ந்து வந்தனர். அதனால் அப்பகுதி **மஞ்சூரியா** என அழைக்கப்படுகிறது.

மஞ்சுக்கள் சிறந்த போர் வீரர்கள். அவர்களுக்குச் சீனாவின் வட எல்லையைக் காக்கும் பொறுப்பை மிங் அரசர்கள் கொடுத்து வந்தனர். இந்த எல்லைக் காப்பாளர்கள் 1644-ல் மிங் அரசரின் பலவீனத்தைப் பயன்படுத்தி, மிங் வம்சத்தை நீக்கினர். பீகிங்கில் மஞ்சு வம்சத்தைச் சீனாவை ஆளும் அரச வம்சமாக்கினர். இவ்வாறு 1644-ல் அரசு பதவியேற்ற மஞ்சு வம்சம், 1911ஆம் வருடம் நடந்த **சீனப் புரட்சி** வரை ஆட்சி புரிந்தது. மஞ்சு வம்சத்தினர் சீன நாகரிகத்தைப் பின் பற்றியதால், மக்கள் அவர்களது ஆட்சியை விரும்பினர்.

மஞ்சு அரசர்களின் ஆட்சியில் சீனா தொடர்ந்து முன்னேற்றம் அடைந்தது. கலைகளும் தொழில்களும் வளர்ந்தன. ஓவியக் கலை உயர்ந்த நிலையை அடைந்தது. விலையுயர்ந்த கற்கள் செதுக்கும் தொழில் வளம் பெற்றது.

மழித்த தலையும், நீண்ட சடையும், தொங்கும் மீசையும் வைத்திருத்தல் தார்தாரிய வழக்கமாகும். அம்முறை சீனாவில் பின்பற்றப்பட்டது.

மஞ்சு ஆட்சியின்போது சீனாவுக்குள் வாணிகம் செய்ய ஐரோப்பியர் விரும்பினர். ஆனால் மஞ்சு அரசர்கள் அவர்களுக்கு அனுமதி அளிக்க மறுத்தனர். எனவே, அவர்கள் கடற்கரைகளில் வாணிகம் செய்தனர். 18, 19ஆம் நூற்றாண்டுகளில், சீன அரசர்களின் வலிமை குன்றியது. அதைப் பயன்படுத்தி ஐரோப்பியர் சீனாவில் புகுந்து வாணிகம் செய்யத் தொடங்கினர். போர்களில் வெற்றியடைந்து, அநேக துறைமுகப்பட்டினங்களையும், ஐரோப்பியர் பெற்றனர். இத்துறைமுகப் பட்டினங்களில் ஐரோப்பிய நாட்டுமக்கள் சுதந்திரமாக வாழ்ந்தனர். சீன நாட்டின் பொருளாதாரம் அவர்கள் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. சீன மக்கள் அந்நியரின் தலையீட்டை வெறுத்து, 1899-ல் கலகம் செய்தனர். அது **பாக்ஸர் கலகம்** எனப்படும். அக்கலகத்தை மஞ்சு அரசர்

அந்நியரின் உதவியைக் கொண்டுதான் அடக்கினார். இதனால் மஞ்சு அரசு, மக்களின் ஆதரவை இழந்தது. 1911ஆம் ஆண்டு டாக்டர் **சன்யாட்சென்** தலைமையில் சீனப்புரட்சி தோன்றி, மஞ்சு வம்சத்தை நீக்கியது.

ஜப்பான் ஒற்றுமையடைதல்

முற்காலத்தில் ஜப்பான் சீனாவின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டு வந்தது. ஜப்பானியர், சீன நாகரிகத்தையே மேற்கொண்டிருந்தனர். கி. பி. 6ஆம் நூற்றாண்டில் ஜப்பானில் புத்த மதம் பரவியது. ஜப்பானின் அரசர் **மிக்காடோ** என அழைக்கப்பட்டார். அவர் தெய்வத் தன்மை பெற்றவர் என்று மக்கள் கருதினார்கள். நாட்டில் உண்மையான அதிகாரம் **சமுராய்** என்ற பிரபுக் களிடத்தில் இருந்தது. **ஷோகன்** என்னும் படைத் தளபதி ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தினார். இந்த ஷோகன்கள் மிக்காடோவை மதிப்பதில்லை, ஒரு சமயம் ஷோகன் ஒரு போலி மிக்காடோவை நியமித்து, போட்டி ஆட்சியைத் தொடங்கினார். இதனால் ஜப்பானில் ஒற்றுமை குலைந்து குழப்பம் மிகுந்திருந்தது.

கி. பி. 16ஆம் நூற்றாண்டின் இறுதியில் **நொபுநாகா** என்ற ஷோகன் ஜப்பானியரை ஒற்றுமைப்படுத்தினார். அவர் நாட்டை வலுப்படுத்தி அமைதியை ஏற்படுத் தினார். இவரது காலத்தில் **பிரான்சிஸ் சேவியர்** ஜப்பானுக்கு வந்து கிறிஸ்தவ மதத்தைப் பரப்பினார்.

நொபுநாகாவுக்குப்பின் **ஹிடோஷி** என்பவர் அதிகாரத்தை ஏற்றார். அவர் திறமையுடன் ஆண்டார். அவர் கொரியாவின்மீது போரிட்டு அதை வென்றார். அவருக்குப் பின் **டொகுகாவா** என்ற ஷோகன் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டார். அவர் உள்நாட்டில் பிரபுக்களின் அதிகாரத்தை ஒடுக்கினார். வெளிநாட்டு விவகாரங்களில் அவர் தலையிடாது ஒதுங்கியிருந்தார்.

1638-ல் டச்சுக்காரர்களைத் தவிர அனைத்து நாட்டவரையும் ஜப்பானிலிருந்து வெளியேற்றினார். ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுக் காலம் ஜப்பான் வெளி உலகத் தொடர்பின்றி இருந்தது. அக்காலத்தில்தான் ஐரோப்பிய நாடுகள் பல துறைகளிலும் விரைவாக முன்னேறின. ஜப்பானில் பலமான மத்திய ஆட்சியை டொகுகாவா வம்சத்து ஷோகன்கள் அமைத்தனர். ஷோகன்களின் அதிகாரம் 1868ஆம் ஆண்டு ஏற்பட்ட மெய்ஜிப் புரட்சி வரை தொடர்ந்து இருந்தது.

வினாக்கள்

I. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. இந்தியாவில் மொகலாய ஆட்சிக்கு அடிகோலியவர் ————.
2. இரண்டாம் பானிப்பட்டுப் போர் கி. பி. ———— ஆண்டில் நடந்தது.
3. அக்பரின் பேரரசு ———— சுபாக்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது.
4. அக்பர் ஏற்படுத்திய புதிய மதம் ———— .
5. 'அயினி அக்பரி' என்ற நூலை ———— எழுதினார்.
6. குப்ளாய் கானைச் சந்தித்த வெனிஸ் நகரப் பயணி ———— என்பவராவார்.
7. மிங் வம்சத்து தலைசிறந்த மன்னர் ————.

II. பின்வரும் உட்பிரிவுகளுள் எது மிகவும் பொருத்தமான விடை?

அக்பரின் புகழுக்குக் காரணம்

(அ) அவர் சிறந்த போர்வீரர். (ஆ) பதேபூர் சிக்ரி என்ற நகரை உருவாக்கினார். (இ) மத சகிப்புத் தன்மையுடன் ஆட்சி புரிந்தார். (ஈ) ஒரு புதிய மதத்தைத் தோற்று வித்தார்.

III. குறுகிய விடை எழுதுக:

1. 'தீன்-இலாஹி' என்றால் என்ன ?
2. 'மஞ்சூரியா' என்னும் பெயர் எவ்வாறு ஏற்பட்டது ?
3. 'பாக்ஸர் கலகம்' என்றால் என்ன ?
4. அக்பரின் நிலவரிச் சீர்திருத்தம் எவ்வாறு சிறப்புடையதாகும் ?
5. ஷாஜஹான் கட்டிய கட்டடங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

IV. விரிவான விடை எழுதுக:

1. மொகலாயப் பேரரசு வீழ்ச்சி அடைந்ததற்குக் காரணங்கள் யாவை ?
2. மிங் மரபினர் ஆட்சி செய்தபோது சீனா எவ்வாறு மேம்பாடு அடைந்திருந்தது ?
3. ஜப்பான் ஒற்றுமை அடைந்த வரலாற்றைச் சுருக்கி எழுதுக.

பயிற்சி

1. ஔரங்கசீப் காலத்திய மொகலாயப் பேரரசின் படத்தை வரைக.
2. மொகலாயர் காலத்தின் கட்டடங்களின் படங்களைச் சேகரித்து படப் புத்தகத்தில் (album) ஒட்டுக.
3. சீன, ஜப்பான் மக்களின் கலை,பண்பாடு, நாகரிகம்—— இவற்றைக் காட்டும் படங்களைச் சேகரிக்க.
4. தாஜ்மகால் பற்றிய விளக்கப்படச் சுருளைப் பார்க்க.

10. கி. பி. 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் நல்லாட்சி புரிந்த வல்லாட்சியாளர்கள்

முன்னுரை

ஐரோப்பாவில் கி. பி. 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் அநேக நாடுகளில் வரம்பிலா முடியாட்சி அமைந்திருந்தது. இங்கிலாந்திலும் ஸ்டூவர்ட் மன்னர்கள் வரம்பிலா முடியாட்சியை ஏற்படுத்த முயற்சி செய்தனர். ஆனால், அவர்கள் முயற்சி வெற்றி பெறவில்லை. 16ஆவது நூற்றாண்டில் ஐரோப்பாவில் முன்னணியில் இருந்த ஸ்பெயின் நாட்டிலும் வரம்பிலா முடியாட்சி இருந்தது. ஆனால், 17ஆம் நூற்றாண்டில் ஸ்பெயினின் ஆதிக்கம் குறையத் தொடங்கியது. 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் பிரான்ஸ், ரஷ்யா, பிரஷ்யா ஆகிய நாடுகள் பலம் பெற்று முன்னணிக்கு வந்தன. அந்நாடுகளை ஆண்ட சில மன்னர்கள் மறுமலர்ச்சிக் கருத்துகளை ஏற்று நல்லாட்சியை நிறுவினர். அவர்களுள் முக்கியமானவர்கள் பிரான்ஸ் நாட்டு **பதினான்காம் லூயி,** *ரஷ்யாவின்* **மகா பீட்டர்,** *பிரஷ்யாவின்* **மகா பிரடரிக்** *ஆவார்கள். இவர்கள் நல்லாட்சி புரிந்த வல்லாட்சியாளர்கள் என அழைக்கப்படுகிறார்கள்.*

பிரான்ஸ் நாட்டு பதினான்காம் லூயி

(கி. பி. 1643–1715)

i. லூயியின் நோக்கங்கள்

வரலாற்றிலேயே நீண்ட காலம்—ஏறக்குறைய எழுபது ஆண்டுகள்—ஆட்சி புரிந்தவர் பதினான்காம் லூயி ஆவார். அவர் தம் ஐந்தாம் வயதில் அரசரானார்.

படம் 23. பதினான்காம் லூயி

அவரது இளமைப் பருவத்தின்போது **கார்டினல் மாசரின்** என்ற அமைச்சர் ஆட்சியை நடத்தினார். மாசரின் இறந்த பின் லூயி தம் 23ஆம் வயதில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். லூயிக்கு இரண்டு முக்கிய நோக்கங்கள் இருந்தன. முதலாவதாக, அரசரிடம் அதிகாரம் குவிந்திருக்க வேண்டும் எனக் கருதினார். 'அரசா! நானே அரசு!' என அவர் கூறிக்கொண்டார். அடுத்ததாக, பிரான்ஸ் நாட்டின் எல்லைகளை விரிவாக்கி, அதை ஐரோப்பாவில் தலைசிறந்த வல்லரசு நாடாக்க விரும்பினார்.

ii. லூயியின் உள்நாட்டுக் கொள்கைகள்

லூயியின் ஆட்சியில் **கோல்பர்ட்** என்னும் நிதி அமைச்சர் திறமை மிக்கவராக இருந்தார். அவர் நாட்டின் பொருளாதார நிலையைப் பெரிதும் உயர்த்தினார். வாணிகம், தொழில், விவசாயம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு ஊக்கம் தந்தார். ஆங்கிலேயருக்கும் டச்சுக்காரருக்கும் போட்டியாக இந்தியாவுடன் வியாபாரம் செய்ய, லூயி **பிரெஞ்சுக் கிழக்கு இந்திய வியாபாரக்** குழுவை 1664-ல் அமைத்தார். அயல் நாட்டுப் பொருள்களுக்கு காப்புவரி விதித்து உள்நாட்டுத் தொழிலை வளர்த்தார். இதன் பயனாக நெசவு, கண்ணாடித் தொழில்கள் முன்னேற்றமடைந்தன. போக்குவரத்தைச் சீர்செய்யப் பாலங்கள், சாலைகள், கால்வாய்கள் ஆகியவற்றை அவர் அமைத்தார். லூயி கப்பற்படை ஒன்றையும் நிறுவினார். நீதித் துறையிலும்

இராணுவத்திலும் லூயி சிறப்பான சீர்திருத்தங்களைச் செய்தார்.

iii. லூயியின் சமயக் கொள்கை

லூயி கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர். அவருக்கு மதச் சகிப்புத் தன்மை இல்லை. பிரான்ஸ் நாட்டில் பிராட்டஸ்டண்ட் சமயத்தைப் பின்பற்றிய **ஹியுஜினாட்டுகள்** என்றழைக்கப்பட்ட ஒரு சமயப் பிரிவினருக்கு வழிபாட்டுச் சுதந்திரம் அளிக்க லூயி விரும்பவில்லை. எனவே, ஹியுஜினாட்டுகள் இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளுக்குச் சென்று குடியேறினர். அவர்கள் தொழில் துறையிலும் வாணிகத் துறையிலும் சிறந்தவர்கள். இதன் விளைவாக பிரான்ஸ் நாட்டிற்கு இழப்பு ஏற்பட்டது.

iv. லூயியின் அயல்நாட்டுக் கொள்கை

அண்டை நாடுகளுடன் போரிட்டு பிரான்ஸ் நாட்டின் எல்லைகளை விரிவுபடுத்த லூயி எண்ணம் கொண்டார். ஆகவே, லூயி போர்களை நடத்தினார். அவற்றில் முக்கியமானது **ஸ்பானிய வாரிசுரிமைப் போர்** ஆகும். இப் போரில் பிரெஞ்சுப்படை **ப்ளென்ஹீம்** என்னுமிடத்தில் ஆங்கில ஆஸ்திரியப் படைகளால் தோற்கடிக்கப்பட்டது. என்றாலும் **உட்ரெக்ட்** உடன்படிக்கையின்படி லூயியின் பேரர் ஸ்பெயின் நாட்டு மன்னரானார். இப்போர்களின் விளைவாக பிரான்ஸ் நாட்டுப் பொருளாதார நிலை சீர் குலைந்தது. பின்னர் ஏற்பட்ட பிரெஞ்சுப் புரட்சிக்கு இது ஒரு காரணமாக அமைந்தது.

v. லூயி ஆட்சியின் சிறப்பு

லூயி ஐரோப்பாவின் தலைசிறந்த அரசராக ஐம்பது ஆண்டுகள் ஆண்டார். அவர் ஆட[illegible]ர வாழ்க்கையை

விரும்பினார். உலகம் புகழும் வெர்சே மாளிகையைக் கட்டினார். அதில் அழகிய பூங்கா, நீர் ஊற்று, கலைக்



படம் 24. பதினான்காம் லூயி காலத்திய பிரான்ஸ்

கூடம், கண்ணாடிக் கூடம் போன்ற வசதிகளை அமைத்தார். அங்கு வாழ்ந்த சீமான்களும் சீமாட்டிகளும்

அலங்கார ஆடை அணிகளைப் பயன்படுத்தினர். பிரெஞ்சு அரசரவையின் வழக்கங்களும் நடைமுறைகளும் பிறநாட்டவரால் பின்பற்றப்பட்டன. லூயி, பிரெஞ்சு மொழிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் ஆதரவு தந்தார். பிரெஞ்சுக் கவிஞர்கள், நாடக ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், தத்துவ ஞானிகள், சிந்தனையாளர்கள் எனப் பலர் அவரது அவையை அலங்கரித்தனர். பிரெஞ்சு மக்கள் லூயியின் ஆட்சியைப் பாராட்டி அவரை 'அரும்பெரும் அரசர்' (Grand Monarch) என அழைத்து மகிழ்ந்தனர்.

ரஷ்ய நாட்டு மகா பீட்டர்

(கி. பி. 1689–1725)

கி. பி. 17ஆம் நூற்றாண்டுவரை ரஷ்ய நாடு பிற்போக்கான ஆசிய நாடாகவே இருந்துவந்தது. கான்ஸ்டான்டிநோபில் துருக்கியர் வசமான பிறகு கருங்கடல் '**துருக்கிய** ஏரி'யாக மாறிவிட்டது. ரஷ்யாவுக்கு ஆண்டு முழுவதும் பயன்படக்கூடிய கடல் துறைமுகம் வேறு எதுவுமில்லை. ரஷ்யப் படை, பயிற்சி பெற்றிருக்கவில்லை. ரஷ்ய மக்கள் மூடப் பழக்கவழக்கங்களில் மூழ்கி இருந்தனர். அவர்கள் வாணிகத்திலும் தொழில் துறையிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தனர்.

1. பீட்டரின் நோக்கங்கள்

பீட்டர் தம் பதினேழாம் வயதில் அரசரானார். அவர் வரம்பிலா முடியாட்சியை அமைத்து, நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபட விரும்பினார். அவர் இரண்டு முக்கிய நோக்கங்களைக் கொண்டிருந்தார். முதலாவதாக, மேற்கு ஐரோப்பாவின் பழக்கவழக்கங்கள் கருத்துகள், கலைகள், தொழில்கள் ஆகியவற்றை

ரஷ்யாவில் புகுத்தி, நாட்டை ஐரோப்பிய மயமாக்க விரும்பினார். அடுத்ததாக, ரஷ்யாவின் ஆதிக்கத்தைத் தெற்கே கருங்கடல் வரையிலும், மேற்கே பால்டிக் கடல் வரையிலும் நீட்டித்து, ரஷ்யாவின் தனிமையைப் போக்கி, வெளி உலகத்துடன் தொடர்பு கொள்ள முடிவு செய்தார்.

படம் 25. மகா பீட்டர்

மேற்குறிப்பிட்ட நோக்கங்களுடன் பீட்டர் இங்கிலாந்து, ஹாலந்து போன்ற நாடுகளுக்குச் சென்றார். அவர்களுடைய வாழ்க்கைமுறை, போர் முறை, தொழில் முன்னேற்றம், பண்பாடு, கப்பல் கட்டும் கலை போன்றவற்றை நேரில் கண்டறிந்தார். தம் நாட்டுக்குத் திரும்பும்போது பல துறைகளில் பயிற்சி பெற்ற அறிஞர்களை ரஷ்யாவுக்கு அழைத்து வந்தார். நாட்டை முன்னேற்றுவதற்கு அவர்களைப் பயன்படுத்தினார்.

ii. பீட்டரின் சீர்திருத்தங்கள்

பீட்டர் சிறந்த கல்வி முறையால்தான் நாடு முன்னேறும் என்பதை நன்கு உணர்ந்தார். ரஷ்யாவில் பள்ளிகள் பலவற்றை ஏற்படுத்தினார். அவற்றில் கணக்கு, அறிவியல் பாடங்களைக் கற்பிக்க ஏற்பாடு செய்தார். மக்கள் ஐரோப்பிய உடையை அணியவேண்டும் என்று கட்டாயப்படுத்தினார். பெண்கள் ஆண்களைப் போன்று உரிமையுடன் வாழவேண்டும் என்று கூறினார். பிரபுக்கள் தாடி வளர்க்கக்கூடாது என்று தடை விதித்தார். அவரது கட்டளைகளை மீறியவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். பீட்டர் நாட்டில் புதிய



படம் 26. மகா பீட்டரின் பேரரசு

அஞ்சல் முறையையும் நாணய முறையையும் புகுத்தினார். மதத் தலைவரின் ஆதிக்கத்தைக் குறைத்து, அப்பொறுப்பை ஒரு குழுவிடம் ஒப்படைத்தார். ஜனவரியுடன் தொடங்கும் காலண்டர் முறையை அவர் ரஷ்யாவில் பின்பற்ற ஏற்பாடுகள் செய்தார்.

iii. பீட்டரின் அயல்நாட்டுக் கொள்கை

நாட்டின் படைபலத்தைப் பெருக்க பீட்டர் தரைப் படையை நன்கு பயிற்றுவித்தார். கப்பற்படை ஒன்றையும் அவர் அமைத்தார். இவற்றைக்கொண்டு துருக்கியரை வென்றார். கருங்கடலில் உள்ள **ஆசோன்** நகரைக் கைப்பற்றினார். அதனால் கருங்கடல் வழியாகப் பிற நாடுகளுடன் தொடர்புகொள்ள முடிந்தது. பின்னர் ஸ்வீடன் நாட்டுடன் போர் தொடுத்து, பால்டிக் கடலோரப் பகுதியைப் பெற்றார். அப்பகுதியில் **செய்ன்ட் பீட்டர்ஸ்பர்க்** என்ற நகரை அமைத்தார். அந்நகரத்தின் வழியாக ரஷ்யா மேலை நாடுகளுடன் தொடர்பு கொள்ள வசதியாக இருந்தது. செயின்ட் பீட்டர்ஸ்பர்க் ரஷ்யாவின் 'மேற்கு ஜன்னலாக' விளங்கியது.

ரஷ்ய நாட்டின் தலைநகரமான மாஸ்கோ உள்நாட்டில் இருந்ததால் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்தது. ஆதலால், பீட்டர் பால்டிக் கடலோரத்தில் அமைக்கப்பட்ட பீட்டர்ஸ்பர்க்குக்குத் தலைநகரை மாற்றினார். அங்கே பதினான்காம் லூயியைப் போல அழகு வாய்ந்த அரண்மனையை அமைத்து ஆடம்பர வாழ்க்கை நடத்தினார்.

பீட்டரின் ஆட்சிக் காலத்தில் ரஷ்யா கருங்கடல் முதல் பால்டிக் கடல் வரை பரந்து விரிந்திருந்தது. பிற்பட்ட நிலையில் இருந்த ரஷ்யாவை முன்னேற்றப் பாடுபட்டதால், பீட்டர் 'நவீன ரஷ்யாவை உருவாக்கியவர்' எனப் போற்றப்படுகிறார். உலக வல்லரசுகளில்

ரஷ்யாவும் ஒன்று எனச் சேர்த்த முதற்பெருமை பீட்டருக்கு உண்டு.

பிரஷ்ய நாட்டு மகா பிரடரிக்
(கி. பி. 1740—1786)

கி. பி. 17 ஆம் நூற்றாண்டில் ஜெர்மனி பல சிறு நாடுகளாகப் பிரிந்திருந்தது. அவற்றுள் ஒன்று **பிரஷ்யா** *வாகும். கி. பி. 1701-ல் அது தனி அரசாக உயர்ந்தது. அதன் அரசர்* **பிரடரிக் - வில்லியம்** *நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைத்தார். நிறைந்த செல்வத்தையும், பயிற்சி பெற்ற ஒரு படையையும் விட்டுச் சென்றார். அவருடைய மைந்தர்தான் புகழ் பெற்ற* **மகா பிரடரிக்** *ஆவார்.*

i. பிரடரிக்கின் நோக்கங்கள்

முதலாவதாகப் பிரடரிக், பதினான்காம் லூயி, மகா பீட்டர் ஆகியவர்களைப் போலவே வல்லாட்சியின் மூலம் நல்லாட்சியை அமைக்க விரும்பினார். இரண்டாவதாக, பிரஷ்ய நாட்டை ஒரு வலிமை மிகுந்த நாடாக்க விரும்பினார்.

ii. பிரடரிக்கின் அயல்நாட்டுக் கொள்கை

இரண்டாம் பிரடரிக் தமது இருபத்தெட்டாம் வயதில் அரசரானார். அவர் சிறந்த தளகர்த்தரும் அரசியல் நிபுணரும் ஆவார். அவருடைய ஆட்சிக் காலத்தில் பிரஷ்யா ஒரு முதல் தரமான இராணுவ நாடாக மாறியது. ஐரோப்பிய நாடுகள் பிரஷ்யாவின் கூட்டுறவைப் பெரிதும் விரும்பின. இந்நிலையால் தம்முடைய இராச்சியத்தை மேலும் பரப்ப பிரடரிக் ஆசை கொண்டார். அவர் தொடர்ச்சியாகப் பல போர்களில் ஈடுபட்டார். அப்போர்களுள் குறிப்பிடத்தக்கவை

ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர், ஏழாண்டுப் போர் என்பனவாகும்.

ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரில், பிரஷ்யா பிரான்ஸ் நாட்டுடன் சேர்ந்து ஆஸ்திரியாவையும் இங்கிலாந்தையும் எதிர்த்தது. அதன் பலனாக வளம் பொருந்திய ஆஸ்திரியப் பகுதியான **சைலீஷியா**வை பிரடரிக் பிரஷ்யாவுடன் இணைத்தார். பின்னர் நடைபெற்ற ஏழாண்டுப் போரில் இங்கிலாந்து நாட்டுடன் நட்புக் கொண்டு பிரான்ஸ் நாட்டை எதிர்த்தார். 1772-ல் பிரஷ்யா, ஆஸ்திரியா, ரஷ்யா ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து போலந்து நாட்டின்மீது படையெடுத்து அதை வென்றன. அதன் பலனாகப் பிரடரிக் போலந்தின் ஒரு பகுதியைப் பெற்றார். இவ்வாறு சைலீஷியா, போலந்தின் ஒரு பகுதி போன்ற பிரதேசங்களை இணைத்துப் பிரஷ்ய நாட்டை விரிவுபடுத்தினார்.

iii. பிரடரிக்கின் சீர்திருத்தங்கள்

பிரடரிக் நாடு சேர்க்கும் ஆசைமிக்கவர். எனவே, இத்துறையில் அவர் உயர்ந்த ஒழுக்கத்தைப் பின்பற்றவில்லை. எனினும், உள்நாட்டு விவகாரங்களில் அவர் நேர்மையுடன் நடந்துகொண்டார். நாட்டின் முன்னேற்றத்திற்காக அவர் கடுமையாக உழைத்தார். விவசாய உற்பத்தியில் பிரடரிக் தனிக் கவனம் செலுத்தினார். போக்குவரத்திற்கு உதவியாகச் சாலைகளையும் கால்வாய்களையும் அவர் அமைத்தார். வாணிகத்தைப் பெருக்க, வங்கிகளையும், கப்பல் போக்குவரத்தையும் நிறுவினார். தொழிற்சாலைகள் பலவற்றை அமைத்து தொழில்துறையை ஊக்குவித்தார். வல்லாட்சியை நிறுவி நாட்டில் அமைதியை உண்டாக்கினார். மத விஷயத்தில் சகிப்புத்தன்மையுடன் நடந்துகொண்டார்.

வால்டேர் போன்ற இலக்கிய அறிஞர்களையும் மற்றும் கலைஞர்களையும் பிரடரிக் போற்றி ஆதரவு

தந்தார். ஏழை மக்களின் நலத்திற்காக உழைத்ததால் பிரடரிக் 'மக்களின் தந்தை' எனப் போற்றப்பட்டார். ஆனால், பிரடரிக் தம்மை 'நாட்டின் முதல் ஊழியன்' எனக் கருதினார்.

பிரடரிக் ஆட்சிக் காலத்தில் பிரஷ்யா, ஐரோப்பிய நாடுகளில் தலைசிறந்த ஒன்றாக இருந்தது. அவருடைய ஆட்சி முறை அறிவு, ஆற்றல், அதிகாரம் என்ற மூன்று சொற்களில் அடங்கும்.

வினாக்கள்

I. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. பதினான்காம் லூயியின் தலைசிறந்த அமைச்சர்——— ஆவார்.
2. "நானே அரசு" எனக் கூறிக்கொண்ட மன்னர் ———.
3. பீட்டர் கருங்கடலில் உள்ள ——— நகரைக் கைப்பற்றினார்.
4. ரஷ்யாவின் மேற்கு வாயில் எனப்படுவது ——— நகரமாகும்.

II. கொடுக்கப்பட்டுள்ள விடைகளுல் மிகவும் சரியானதைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பதினான்காம் லூயியின் கொள்கைகளில் சிறந்த பலன் தந்தது.

(அ) சமயக் கொள்கை (ஆ) அயல் நாட்டுக் கொள்கை (இ) உள்நாட்டுக் கொள்கை (ஈ) பொருளாதாரக் கொள்கை.

2. மகாபீட்டரின் சாதனைகளில் குறிப்பிடத்தக்கது.

(அ) தாடி வளர்க்கத் தடை விதித்தது.

(ஆ) மூடப் பழக்கவழக்கங்களை ஒழித்தது.

(இ) மேனாட்டு நாகரிகத்தை ரஷ்யாவில் புகுத்தியது.

(ஈ) ரஷ்யாவை வெளி உலகுடன் தொடர்பு கொள்ளச் செய்தது.

III. ஓரிரு வாக்கியங்களில் விடை எழுதுக.

1. பதினான்காம் லூயியின் முக்கிய நோக்கங்கள் யாவை?
2. ஹியூஜிநாட்டுகள் எனப்படுபவர் யார்?
3. பீட்டர் அயல்நாடுகளுக்குச் சென்று வந்த காரணங்கள் யாவை?
4. மகாபிரடரிக் நடத்திய போர்கள் யாவை?

IV. விரிவான விடை தருக.

1. பதினான்காம் லூயியின் உள்நாட்டுச் சீர்திருத்தங்கள் யாவை?
2. லூயியின் ஆட்சிச் சிறப்பைக் கூறுக.
3. மகாபீட்டரின் அயல்நாட்டுக் கொள்கை யாது?
4. பீட்டர் ரஷ்யாவை எவ்வாறு நவீன நாடாக மாற்றினார்.
5. பிரஷ்ய நாட்டை விரிவுபடுத்த பிரடரிக் கையாண்ட முறைகள் யாவை?

பயிற்சி

1. பதினான்காம் லூயி காலத்திய பிரான்சின் படத்தை வரைக.
2. பீட்டரின் பேரரசைக் குறிக்கும் படம் ஒன்று வரைக.
3. மகாபிரடரிக் இராச்சியத்தை ஐரோப்பா படத்தில் குறிப்பிடுக.

11. புரட்சியுகம்
(கி. பி. 18ஆம் நூற்றாண்டு)

முன்னுரை

கி.பி. 18ஆம் நூற்றாண்டு முடியும் தறுவாயில் இருபெரும் புரட்சிகள் ஏற்பட்டன. அவை மனித இன வரலாற்றையே மாற்றி அமைத்தன. அவற்றுள் ஒன்று **அமெரிக்கப் புரட்சியாகும்.** இது அமெரிக்கச் சுதந்திரப் போர் எனவும் வழங்கப்படுகிறது. மற்றொன்று **பிரெஞ்சுப் புரட்சியாகும்.** இவ்விரு புரட்சிகளின் விளைவாக உலக மக்களின் சமூக, பொருளியல், அரசியல் அமைப்புகள் பெரிதும் மாற்றம் அடைந்தன.

அமெரிக்கச் சுதந்திரப் போர்
(கி. பி. 1775–1783)

i. போருக்கான காரணங்கள்

17 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டு மக்கள் பலர் வழிபாட்டுச் சுதந்திரம் பெற வட அமெரிக்காவில் குடியேறினர். அவர்கள் அங்கு பதின்மூன்று குடியேற்றங்களை அமைத்துக்கொண்டனர். அக்குடியேற்ற நாடுகளுக்கு வடக்கே உள்ள **கனடா**, பிரெஞ்சுக் குடியேற்றமாக இருந்தது. அதனால் பல இடையூறுகள் ஏற்பட்டன. ஐரோப்பாவில் நடைபெற்ற ஏழாண்டுப் போர் வட அமெரிக்காவில் பரவியது. ஆங்கிலக் குடியேற்ற நாடுகளின் நலனைப் பாதுகாக்கத் தாய்நாடான இங்கிலாந்து அமெரிக்காவிற்குப் படைகளை அனுப்பியது. ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்குமிடையே போர்கள் பல நடந்தன. போரின் முடிவில் கனடா ஆங்கிலேயர் கைக்கு வந்தது.

கனடா பிரெஞ்சு ஆட்சியில் இருந்தவரையில், ஆங்கில அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் பிரெஞ்சுத் தாக்கு தலுக்குப் பயந்து, ஆங்கில ஆட்சிக்குக் கீழ்ப்படிந்து, ஆங்கில அரசாங்கம் விதித்த சட்டதிட்டங்களுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் அடங்கி நடந்தன. ஆனால், கனடாவில் பிரெஞ்சு ஆட்சி ஒழிந்ததும், ஆங்கிலக் குடியேற்ற நாடுகள் ஆங்கில அரசாங்கத்தின் கட்டுப்பாடு களை எதிர்க்கத் தொடங்கின.

ஆங்கிலக் குடியேற்றங்களைச் சிவப்பு இந்தியர் அடிக் கடி தாக்கி வந்தனர். இதைத் தடுக்க இங்கிலாந்து ஒரு நிரந்தரப் படையை வட அமெரிக்காவில் வைத்துப் பாதுகாத்து வந்தது. அந்தச் செலவைச் சமாளிக்கவும், ஏழாண்டுப்போரினால் ஏற்பட்ட செலவின் ஒருபகுதியைச் சமாளிக்கவும், வரி விதிப்பின் மூலம் குடியேற்ற நாடுகளி லிருந்து பெற இங்கிலாந்து விரும்பியது.

இந்நிலையில் 1765-ல் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் **முத்திரைச் சட்டத்தை** இயற்றியது. அதன்படி பத்திரங்கள் அரசாங்க முத்திரை இடப்பட்ட காகிதங் களில் எழுதப்படவேண்டும் என அறிவித்தது. அமெரிக்க நாட்டு மக்களுக்குப் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் பிரதி நிதித்துவம் தரப்படவில்லை. எனவே, **பிரதிநிதித்துவம் இல்லையேல் வரிவிதிப்பும் இல்லை** எனக் கூறி அமெரிக்கர் கள் அச்சட்டத்தை எதிர்த்தனர். இந்த எதிர்ப்பைச் சமாளிக்க ஆங்கில அரசு முத்திரைச் சட்டத்தை நீக்கியது. ஆனால், அதே சமயத்தில் அமெரிக்கர்மீது வரிவிதிப் பதற்குப் பிரிட்டிஷ் பார்லிமெண்டு அதிகாரம் உண்டென ஓர் அறிக்கையை வெளியிட்டது. இதனால் அமெரிக்க மக்கள் மேலும் அதிருப்தி கொண்டனர்.

1770ஆம் ஆண்டு பிரிட்டன் வேறு முறையைக் கை யாண்டது. அமெரிக்காவின் முக்கிய இறக்குமதிப் பொருள்களான தேயிலை, கண்ணாடி, காகிதம் ஆகிய

வற்றின்மீது வரி விதித்தது. இந்த வரிகளையும் அமெரிக்கர்கள் கடுமையாக எதிர்த்தனர். கி.பி. 1773-ல் இந்தியாவிலிருந்து சில தேயிலைக் கப்பல்கள் **பாஸ்டன்** துறைமுகத்திற்கு வந்தடைந்தன. குடியேற்ற நாட்டு மக்களில் சிலர் செவ்விந்தியர்போல வேடமணிந்து கப்பல்களுக்குள் இறங்கி, தேயிலைக் கட்டுகளைக் கடலில் தூக்கி எறிந்தனர். இதனைப் **பாஸ்டன் தேநீர் விருந்து** என அழைக்கின்றனர். இதனால் கோபம்கொண்ட பிரிட்டிஷ் பிரதமர் **நார்த்பிரபு** பாஸ்டன் துறைமுகத்தை மூடும்படி செய்தார். அங்கு படைகளையும் கொண்டுவந்து நிறுத்தி, குடியேற்ற நாட்டு மக்களைத் தண்டிக்க உத்தர விட்டார். அதுவே பெரும் போராக உருவெடுத்தது.

ii. போரின் போக்கு

அமெரிக்க குடியேற்ற நாட்டு மக்களின் பிரதிநிதிகள் **பிலடெல்பியா** என்னுமிடத்தில் கூடினார்கள். தங்களது சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ள போரிட முடிவு செய்தார்கள். 1776, ஜூலை 4ஆம் தேதி அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் அறிவிக்கப்பட்டது. **ஜார்ஜ் வாஷிங்டன்** என்பவரைத் தளபதியாகத் தேர்ந்தெடுத்துத் தங்களது சுதந்திரத்தைக் காக்க முற்பட்டனர். அமெரிக்கர்களுக்குப் படைப் பயிற்சியே இல்லை; போர்க்கருவிகளும் கிடையாது. ஆனால் சுதந்திர உணர்ச்சியும் தியாக மனப்பான்மையும் இருந்தன.



படம் 27. ஜார்ஜ் வாஷிங்டன்

வாஷிங்டன் அவர்களுக்கு ஊக்கம் தந்து போரைத் தொடர்ந்து நடத்தினார். முதலில் தோல்விகள் ஏற்



படம் 28. அமெரிக்க சுதந்திரப் போர்

பட்டாலும் இறுதியில் வெற்றி கிட்டியது. **சரடோகா** என்னுமிடத்தில் பிரிட்டிஷ் படை, அமெரிக்கர்களிடம்

சரணடைந்தது. இதை அறிந்ததும் ஸ்பெயினும் பிரான்சும் அமெரிக்க மக்களுக்கு உதவி செய்ய முன் வந்தன. **காரன்வாலிஸ்** தலைமையில் போரிட்ட பிரிட்டிஷ் படை **யார்க்டவுன்** என்னுமிடத்தில் அமெரிக்கப் படையிடம் சரணடைந்தது. இத்துடன் போர் முடிந்தது. 1783-ல் நடந்த **வெர்செயில்ஸ் உடன்படிக்கை**யின்படி பிரிட்டன், அமெரிக்கக் குடியேற்றங்களின் சுதந்திரத்தை அங்கீகரித்தது. அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றன.

கி. பி. 1787-ல் **அலெக்சாண்டர் ஹாமில்டன்** என்பவர் அமெரிக்க நாடுகளுக்கு ஓர் அரசியல் அமைப்பை உருவாக்கினார். அதன்படி மாநில அரசுகள் உள்நாட்டு ஆட்சியைத் தாமே நடத்திக்கொள்ள உரிமைபெற்றன. அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவான கூட்டாட்சி அமைப்பு ஏற்பட்டது. அது **அமெரிக்க ஐக்கிய நாடுகள்** என அழைக்கப்பட்டது. முதல் குடியரசுத் தலைவராக ஜார்ஜ் வாஷிங்டன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பிரெஞ்சுப் புரட்சி
(கி. பி. 1789—1799)

i. காரணங்கள்

1. பிரான்சில் வரம்பில்லா முடிஆட்சி ஏற்பட்டிருந்தது. இதனால் மக்களுக்கு ஒருவித உரிமையும் இல்லை. பதினான்காம் லூயியின் ஆட்சிக் காலத்தில் ஆடம்பரச் செலவும் பயனற்ற போர்களும் ஏற்பட்டன. இதனால் பிரான்ஸ் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்தது. பதினைந்தாம் லூயி காலத்திலும் அதே நிலை தொடர்ந்தது. பதினாறாம் லூயி நல்ல உள்ளம் படைத்தவர்; என்றாலும் மன உறுதியும் செயல் திறனும் அற்றவராக இருந்தார்.

2. பிரான்ஸ் நாட்டில் சமுதாய ஏற்றத் தாழ்வுகள் அதிகமிருந்தன. பிரபுக்கள், குருமார்கள் என்ற இரு பிரிவினரும் நாட்டின் சொத்துகளில் பெரும்பகுதியை அனுபவித்து வந்தனர். எனினும் உரிமைகள் பலபெற்று, குறைந்த அளவு வரி செலுத்தினர். மூன்றாம் பிரிவினரான பொதுமக்கள் வருவாய் அதிகமின்றி வாடினர். ஆனால், மக்கள் அநேக வரிகளை அரசாங்கத்திற்குச் செலுத்தி வந்தனர். எதிர்த்துக் கேட்ட ஏழைகள் சிறையில் தள்ளப்பட்டுக் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். இராணுவ வீரர்கள் குறைந்த ஊதியமும் உணவும் பெற்றதால் அதிருப்தி அடைந்திருந்தனர். பாதிரிமார் பலர் பதவி உயர்வுக்கு வழியின்றி மன வேதனை அடைந்தனர்.

படம் 29. ரூசோ

3. இச் சமயத்தில் பிரான்சில் புதிய கருத்துகள் பரவத் தொடங்கின. **வால்டேர், ரூசோ** போன்ற எழுத்தாளர்கள் அரசரின் கொடுங்கோலாட்சியைக் கண்டித்தனர். ஆட்சியில் மக்களுக்குச் சமஉரிமை உண்டு என்பதை எடுத்து விளக்கினார்கள். ரூசோவின் **சமுதாய ஒப்பந்தம்** என்ற நூல் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. அரசருக்கும் மக்களுக்குமிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டதாகவும், அரசர் தம் கடமைகளைச் செய்யத் தவறினால் மக்கள் அவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு உரிமை பெற்றவர்கள் என்றும் ரூஸோ தம் நூலில் கூறினார். முடியாட்சியை ஒழித்துக்குடியாட்சியை ஏற்படுத்த வேண்டுமெனப் பிரசாரம் செய்தார். வால்டேர், ரூஸோ பிரசாரம் செய்துவந்த **சுதந்திரம்,**

சமத்துவம், சகோதரத்துவம் என்ற சொற்கள் புரட்சிக்கு வித்தாக அமைந்தன.

4. அமெரிக்கச் சுதந்திரப்போர் பிரெஞ்சு மக்களுக்கு வழிகாட்டியாக அமைந்தது. அமெரிக்கர் சுதந்திர மடைய பிரெஞ்சு அரசு தம் படையை அமெரிக்காவுக்கு அனுப்பியது. அமெரிக்கா சென்று திரும்பிய பிரெஞ்சுப் படைவீரர்கள் உரிமை வேட்கையுடன் தம் நாடு திரும்பி னர். மக்களிடையே உரிமை வேட்கையை அவர்கள் தூண்டினார்கள்.

5. பதினாறாம் லூயியின் மனைவி அரசி **மேரி அண்டாயி** னெட் ஆடம்பர வாழ்வில் ஈடுபட்டார். அவருடைய சொற்களைக் கேட்டு அரசர் ஆட்சியை நடத்தியதால், மக்களின் துன்பங்களைத் தீர்க்க வேறு வழியே இல்லாத நிலை ஏற்பட்டது.

ii. புரட்சியின் போக்கு

இந்நிலையில் அரசரின் செலவுகட்குப் பணம் தேவைப்பட்டது. எனவே, 1789 மே மாதத்தில் **ஸ்டேட்ஸ் ஜெனரல்** என்ற தேசிய சபையை அரசர் கூட்டினார். அச் சபை இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஓர் அரசியல் அமைப்பை உருவாக்க முயன்றது. அரசர் அதைத் தடுக்கத் திட்டமிட்டார். மக்கள் சீற்றம்கொண்டு வன்முறைச் செயலில் இறங்கினார்கள். **பாஸ்டைல்** என்ற சிறையைத் தாக்கி அதைத் தரைமட்டமாக்கினர். புரட்சித் தீ நாடெங்கும் பரவியது. அரசரும் அரசியும், தப்பி ஓடி அண்டை நாட்டு அரசர்களின் உதவியைப் பெறமுயன்றனர். ஆனால் அவர்கள் பிடிக்கப்பட்டு பாரிஸ் நகரில் புரட்சிப்படையின் கண்காணிப்பில் இருந்து வந்தனர். அரசர், புரட்சியை அடக்க முயன்ற தாகக் குற்றம் சாட்டப்பட்டுஅவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. பிரான்சில் முடியாட்சி அகற்றப்பட்டு 1792-ல் குடியரசு அமைக்கப்பட்டது.

பிரெஞ்சுக் குடியரசை முதலில் மிதவாதிகள் நடத்தினர். பின்னர் ஆட்சி அதிகாரம் தீவிரவாதிகளின் கைகளுக்கு மாறியது. அவர்கள் விரோதிகளை அடக்க **பயங்கர ஆட்சியை** நடத்தினர். **ரோபஸ்பியர்** தலைமையில் அது உச்சக் கட்டத்தை அடைந்தது. **கில்லட்டின்** என்ற தலையை வெட்டும் எந்திரம் பயன்படுத்தப் பட்டது. அரசி **மேரிஅண்டாயினெட்டும்** மற்றும் நூற்றுக் கணக்கான பிரபுக்களும் அந்த எந்திரத்தினால் கொல்லப் பட்டனர். ரோபஸ்பியரின் வீழ்ச்சிக்குப் பிறகு 1794-ல் அந்த பயங்கர ஆட்சி முடிவுற்றது.

ரோபஸ்பியருக்குப்பின் ஐந்து பேர் அடங்கிய **டைரக்டரி** என்ற குழு ஆட்சி செய்தது. இக்குழு திறமையாக ஆட்சி செய்யாததால் மக்களின் பேராதரவைப் பெற்ற ஓர் இராணுவ வீரர் ஆட்சிக்கு வந்தார். அவர் தான் **நெப்போலியன்** என்பவர். நெப்போலியன் **கான்சலேட்** என்ற குழுவை அமைத்துத் தாமே **முதல் கான்சல்** ஆனார். பின்னர், தாமே பிரான்சின் பேரரசர் என்று அறிவித்தார். அத்துடன் பிரெஞ்சுப் புரட்சி முடிவடைந்தது.

iii. புரட்சியின் விளைவுகள்

1. பிரெஞ்சுப் புரட்சி உலகிற்கு சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கொள்கைகளைத் தந்தது. இக்கொள்கை பின்னர் அடிமை ஒழிப்பிற்கும், இன, மத, நிற வேறுபாடுகளை அகற்றுவதற்கும் பயன்பட்டது. புரட்சியின் விளைவாக நாட்டுப்பற்று மக்களிடையே ஏற்படத் தொடங்கிற்று. வரம்பிலா முடியாட்சி ஒழிய இப்புரட்சி மிகவும் உதவியது.

இன்றைய இருபதாம் நூற்றாண்டு 'சாதாரண மனிதனின் காலம்' (Age of the Common Man) என்றழைக்கப்படுவதற்கு முக்கியக் காரணமாக விளங்கியது பிரெஞ்சுப் புரட்சியேயாகும்.

2. புரட்சியின் விளைவாகப் பிரான்ஸ் தன்னுடைய ஆதிக்கத்தை ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் மீது சுமத்தியது. அவ்வாதிக்கத்தை ஒழிக்க ஐரோப்பிய மக்கள் முற்பட்டனர். அதன் பயனாக அவர்களிடையே தேசிய ஒற்றுமை உணர்ச்சி உருவாயிற்று.

நெப்போலியன்
(கி. பி. 1769-1821)

i. இளமைப் பருவம்

நெப்போலியன் 1769-ல் பிரான்சின் ஆதிக்கத்தின் கீழிருந்த **கார்சிகா** தீவில் பிறந்தார். பிரான்சில் கல்வி கற்றபின், பிரெஞ்சுப் படையில் ஒரு போர் வீரராகச் சேர்ந்தார். நாளடைவில் தமது உழைப்பினாலும் அறிவாற்றலாலும் தளபதியாக உயர்ந்தார். தமது இருபத்தேழாம் வயதில், நெப்போலியன் பிரெசுஞ்ப் படைக்குத் தலைமை தாங்கி நடத்தினார். ஆஸ்திரியாவின்மீது படையெடுத்து வடஇத்தாலியை வென்றார். பின்பு, எகிப்தின்மீது படையெடுத்து அந்நாட்டையும் வென்றார். நெப்போலியனின் வெற்றிகள் அவருக்கு மேலும் புகழைச் சேர்த்தன. அதைப் பயன்படுத்தி நெப்போலியன் 1799-ல் டைரக்டரிக் குழுவை நீக்கிப் பிரான்சின் முதல் கான்சல் ஆனார். பின்னர் பேரரசர் ஆனார்.

ii. நெப்போலியனின் போர்கள்

பிரான்சில் ஏற்பட்ட புரட்சியைக் கண்டு ஐரோப்பிய நாடுகள் அச்சம் கொண்டன. ரோபஸ்பியர் போன்ற புரட்சித் தலைவர்களின் கொடூரச் செயல்களைக் கண்ட அயல் நாடுகள் அதிர்ச்சியடைந்தன. மேலும், புரட்சியைத் தொடங்கும் நாடுகளுக்கு உதவி செய்ய, பிரான்சின் புரட்சி அரசு முன்வந்தது. அதைத் தடுக்க இங்கிலாந்து, ஆஸ்திரியா, பிரஷ்யா, ரஷ்யா ஆகிய

நாடுகள் ஒன்றுசேர்ந்தன. பிரான்ஸ் நாட்டின்மீது போர் தொடுத்தன. ஆனால் நெப்போலியனின் படைகள் **ஆஸ்டர்லிட்ஸ்** போரில் பிரஷ்ய, ஆஸ்திரியப் படைகளை முறியடித்தன.

ஆஸ்டர்லிட்சுக்கு முன்பு பிரான்சுக்கு எதிராக இங்கிலாந்து கூட்டு முயற்சி செய்ததால், அந்நாட்டின் மீது படையெடுக்க நெப்போலியன் திட்டமிட்டார். ஆனால், **டிரபால்கர்** கடற்போரில் ஆங்கிலத் தளபதி **நெல்சன்** பிரெஞ்சுக் கடற்படையை அழித்துவிட்டதால், நெப்போலியனின் திட்டம் நிறைவேறவில்லை. கடலில் தோற்றபோதிலும் ஆஸ்டர்லிட்ஸ் வெற்றியினால் நெப்போலியனின் ஆதிக்கம் ஐரோப்பாவில் நிறுவப்பட்டது. இதையடுத்து இங்கிலாந்தின் வாணிகத்தை அழிக்க அவர் திட்டமிட்டார். எந்த ஐரோப்பிய நாடும் இங்கிலாந்துடன் வாணிகம் செய்யக்கூடாது என்று ஆணையிட்டார். இதற்குக் **கண்டத் திட்டம்** என்று பெயர். இத்திட்டம் வெற்றி பெறவில்லை. ஸ்பெயின் வாரிசுரிமைப் போரில் தலையிட்டு, தம் சகோதரரை அரசராக நியமித்தார். இதை எதிர்த்து ஸ்பெயின், இங்கிலாந்தின் உதவியுடன் பிரான்சின்மீது போர் தொடுத்தது. ஆங்கிலேயத் தளபதி **ஆர்தர் வெல்லெஸ்லி** பிரெஞ்சுப் படையை முறியடித்தார். ஐரோப்பிய நாடுகள் நெப்போலியனை வெறுக்கத் தொடங்கின.

படம் 30. நெப்போலியன்

பிரான்ஸ் நாட்டுடன் இருந்த நட்பை ரஷ்யா விலக்கிக் கொண்டதால், நெப்போலியன் ஆத்திரம்

கொண்டார். ரஷ்யாவின்மீது போர் தொடுத்து மாஸ்கோவைப் பிடித்தார். ரஷ்யப் படைகள் தலை நகரைத் தீயிட்டு எரித்துவிட்டுப் பின்வாங்கின. உண்ண உணவின்றி 600,000 பிரெஞ்சுப் போர் வீரர்கள் பசியால் வாடினர். இச்சமயத்தில், ரஷ்யாவில் குளிர்காலம்

படம் 31. நெப்போலியன் பேரரசு

தொடங்கியது. பசியாலும் கடுங்குளிராலும் துன்புற்றுத் திரும்பிய பிரெஞ்சுப் படைகளை, ரஷ்யப் படைகள் பல திசைகளிலிருந்து தாக்கின. 3,260 கி.மீ. தூரத்தைக் கடந்து சில ஆயிரம் பிரெஞ்சுப் போர் வீரர்களே தாயகம் திரும்பினர்.

III. நெப்போலியனின் வீழ்ச்சி

இந்நிலையில் ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் சேர்ந்து **லீப்சிக்** என்னுமிடத்தில் நெப்போலியனைத் தோற்கடித்தன. அவர் **எல்பா** தீவிற்கு நாடு கடத்தப் பட்டார். ஆனால், நெப்போலியன் அங்கிருந்து தப்பி மீண்டும் பிரான்சை அடைந்தார். பிரெஞ்சுப் படைகளும் மக்களும் அவரை வரவேற்றுப் பேரரசராக ஏற்றுக் கொண்டனர். இதை அறிந்த ஐரோப்பிய அரசர்கள் மீண்டும் 1815-ல் நெப்போலியனுடன் **வாட்டர்லூ** என்ற இடத்தில் போரிட்டு அவரை முறியடித்தனர். நெப்போலியன் சரணடைந்தார். அவர் **செயின்ட் ஹெலினா** தீவில் சிறைவைக்கப்பட்டு, அங்கேயே 1821-ல் இறந்தார்.

IV. நெப்போலியனின் சிறப்பு

உலக வரலாற்றில் தோன்றியுள்ள இராணுவ தளகர்த்தர்களில் நெப்போலியன் தலைசிறந்தவர். அவர் ஐரோப்பிய நாட்டுப் படைகளைப் பல இடங்களில் தோற்கடித்தார். இலண்டனைத் தவிர எல்லா ஐரோப்பிய தலைநகரங்களையும் கைப்பற்றினார். வேறு காரணங்களால் அவர் கடைசியாகத் தோற்கடிக்கப்பட்டார். அதனால் அவருடைய போர்த்திறமையை நாம் குறை சொல்லக்கூடாது. ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் அவருக்கு எதிராக அணிவகுத்து நின்றபோது, அவர் கடைசியில் தோல்வியடைய நேரிட்டது. அவர் ஒரு சிறந்த மேதை. போர்களில் பலரைப் பலியிட்டாலும், அவர் நாட்டுக்குப் பல நன்மைகளைச் செய்தார். பிரான்சின் தேசியக் கல்வி முறையையும் தல ஆட்சி முறையையும் அவர் சீரமைத்தார். பிரான்ஸ் நாட்டுச் சட்டங்களை ஒழுங்காகத் தொகுத்தார். அவை இன்றும் பிரான்சில் பின்பற்றப்படுகின்றன. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற சொற்களை உலகிற்குப் பரப்பிய

பெருமை அவரைச் சாரும். ஐரோப்பாவில் தேசிய உணர்ச்சி வளர நெப்போலியன் ஒரு காரணமாக அமைந்தார்.

வினாக்கள்

I. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. அமெரிக்கச் சுதந்திரப் பிரகடனம் அறிவிக்கப்பட்ட ஆண்டு———ஆகும்.
2. ——— என்பவர் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் படைக்குத் தலைமை தாங்கினார்.
3. சமுதாய ஒப்பந்தம் என்ற நூலை——— எழுதினார்.
4. பிரெஞ்சுப் புரட்சியின் தொடக்கத்தில் ——— என்ற சிறை மக்களால் தகர்க்கப்பட்டது.
5. நெப்போலியன்——— தீவிற்கு முதலில் நாடு கடத்தப் பட்டார்.

II. **பின்வரும் விடைகளில் எது மிகச் சரியானது?**

1. அமெரிக்கச் சுதந்திரப் போரில் அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் வெற்றியடையக் காரணம்

(அ) பிரான்ஸ் நாட்டின் உதவியாகும். (ஆ) இங்கிலாந்தின் தவறான நடவடிக்கையாகும். (இ) குடியேற்ற நாட்டு மக்களின் சுதந்திர வேட்கையும் தியாக உணர்ச்சியுமாகும். (ஈ) ஜார்ஜ் வாஷிங்டனின் போர்த் திறமையாகும்.

2. பிரெஞ்சுப் புரட்சி ஏற்படக் காரணம்

(அ) வால்டேர், ரூசோ போன்ற எழுத்தாளர்கள் பரப்பிய புதிய கருத்துகள். (ஆ) மேரி அண்டாயினெட்டின் ஆடம்பர வாழ்க்கை. (இ) பிரான்ஸ் நாட்டில் இருந்த சமுதாய ஏற்றத்தாழ்வுகள். (ஈ) அமெரிக்கச் சுதந்திரப் போரில் மக்கள் பெற்ற வெற்றி

III. **குறுகிய விடை எழுதுக.**

1. அமெரிக்கக் குடியேற்ற மக்கள் முத்திரைச் சட்டத்தை ஏன் எதிர்த்தனர்?
2. 'பாஸ்டன் தேநீர் விருந்து' என்றால் என்ன?

3. பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்தாக அமைந்தது எது?
4. 'பயங்கர ஆட்சி' என்றால் என்ன?
5. நெப்போலியனின் ரஷ்யப் படையெடுப்பைக் கூறுக.

IV. **விரிவான விடை எழுதுக.**

1. அமெரிக்கச் சுதந்திரப் போர் ஏற்படக் காரணங்களைத் தொகுத்து எழுதுக.
2. பிரெஞ்சுப் புரட்சிக்கு முக்கிய காரணங்கள் யாவை?
3. பிரெஞ்சுப் புரட்சியின் விளைவுகள் யாவை?
4. நெப்போலியனின் சிறப்பைக் குறிப்பிடுக.

பயிற்சி

1. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கொடியை வரைந்து, அதன் விளக்கத்தைத் தெரிந்துகொள்க
2. சார்லஸ் டிக்கன்ஸ் எழுதிய 'இரு நகரங்களின்' கதையைப் படித்துப் பிரெஞ்சுப் புரட்சியின் போக்கைப் பற்றித் தெரிந்துகொள்க.
3. நெப்போலியனைப்பற்றிய சுவையான செய்திகளைச் சேகரித்து வைக்கவும்.
4. அமெரிக்கச் சுதந்திரப் போரை விளக்கும் படம் ஒன்று வரைக.
5. நெப்போலியப் பேரரசின் படம் வரைக.

12. ஐரோப்பிய நாடுகளில் தேசிய இயக்கம்

(கி. பி. 19ஆம் நூற்றாண்டு)

முன்னுரை

பிரெஞ்சுப் போர்களை நடத்திய நெப்போலியன் *1815*-ல் தோற்கடிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டார். பின்னர் ஐரோப்பிய நாடுகள் வியன்னாவில் ஒன்று கூடின. வியன்னா காங்கிரஸ் வகுத்த அமைதித் திட்டம் நீண்ட நாள்கள் நிலைக்கவில்லை. பிரெஞ்சுப் புரட்சியின் கருத்துகள் எங்கும் பரவத் தொடங்கின. தேசிய உணர்ச்சி மேலோங்கியது. மக்கள் சுதந்திரமாகவும் ஒற்றுமையுடனும் வாழ விரும்பினர். அந்நிலையை ஏற்படுத்த முன்வந்த அரசுக்கு அவர்கள் ஆதரவு தந்தனர். இவ்வாறு ஒற்றுமைப்பட்ட நாடுகள் இத்தாலியும் ஜெர்மனியும் ஆகும்.

(அ) இத்தாலி ஐக்கியமடைதல்

*1815*ஆம் ஆண்டு நடந்த வியன்னா காங்கிரசின் முடிவுப்படி இத்தாலி பல இராச்சியங்களாகப் பிரிக்கப்பட்டது. வடக்கு இத்தாலியில் உள்ள **லம்பார்டியும் வெனிஷியா**வும் ஆஸ்திரியாவின் ஆட்சிக்கு உட்பட்டன. மத்திய இத்தாலியில் சில இராச்சியங்கள் **ஆஸ்திரியக் கோமான்**களின் ஆட்சியில் இருந்தன. மற்றும் சில இராச்சியங்கள் ரோமாபுரிப் **போப் ஆண்டவரிடம்** இருந்தன. தெற்கு இத்தாலியில் உள்ள **நேப்பிள்ஸ்** மற்றும் **சிசிலி** ஸ்பானிய இளவரசரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தன. வடஇத்தாலியில் உள்ள **பீட்மாண்டும் சார்டினியாத்** தீவும் இத்தாலிய இளவரசருக்கு அளிக்கப்பட்டன. இந்த ஆட்சி

யாளர்கள் தங்கள் விருப்பம்போல் ஆண்டுவந்தனர். பீட்மாண்ட் அரசரும் போப் ஆண்டவரும் தவிர மற்ற வர்கள் அந்நியர்கள்.

19ஆம் நூற்றாண்டின் நடுவில் இத்தாலிய மக்களிடம் ஒற்றுமை உணர்வு ஏற்பட்டது. அவர்கள் ஒரே ஆட்சியின்கீழ் வர விரும்பினர். அவ்விருப்பத்தை நிறைவேற்றிய பெருமை நால்வரைச் சாரும். **மாஜினி** என்ற அரசியல் அறிஞர், **இரண்டாம் விக்டர் இம்மானுவல்** என்ற பீட்மாண்ட்-சார்டினிய அரசர், **காவூர்** என்ற அவரது அமைச்சர், **கரிபால்டி** என்ற வீரர் ஆகியோரே அந்நால்வர்.



படம் 32. கரிபால்டி

மாஜினி என்பவர் **இளம் இத்தாலி** என்ற இயக்கத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் நாட்டின் ஒற்றுமைக்கு வழிவகுத்தார். இந்த இயக்கத்தைச் சார்ந்தவர் கரிபால்டி என்ற வீரர். அவர் நாடு கடத்தப் பட்டுத் தென்அமெரிக்காவில் வாழ்ந்து வந்தார். அங்கு கொரில்லாப் போர்முறையில் பயிற்சி பெற்று, தம் முடைய வீரர்களுக்கும் அப்பயிற்சியை அளித்தார். அவ் வீரர்கள் **செஞ்சட்டையினர்** என்றழைக்கப்பட்டனர்.

இரண்டாம் விக்டர் இம்மானுவல் ஓர் இத்தாலிய அரசர்; திறமை மிக்கவர். ஆதலால், மக்கள் இவரை ஆதரித்தனர். காவூர் என்ற அமைச்சர் ஒரு சிறந்த இராஜதந்திரி. இருவரும் இத்தாலியை ஒன்றாக்கத் திட்டமிட்டனர்.

முதலில் காவூர் பிரான்சுடன் நட்புக் கொண்டு ஆஸ்திரியாவைத் தாக்கினார். இதன் பயனாக லம்பார்டி

போன்ற ஆஸ்திரியப் பகுதிகள் பீட்மாண்டுடன் இணைக்கப்பட்டன,

1860-ல் சிசிலி மக்கள் நேபிள்ஸ் அரசரை எதிர்த்துக் கலகம் செய்தனர். அச்சமயத்தில் கரிபால்டி தம் படையுடன் விரைந்து, சிசிலியையும் நேப்பிள்ஸையும் கைப்பற்றினார். தாம் வென்ற பகுதிகளை விக்டர் இம்மானுவலிடம் ஒப்படைத்துவிட்டார். அவரது தியாகம் போற்றுதற்கு உரியதாகும்.

படம் 33. காவூர்

இதற்கிடையில் மத்திய இத்தாலியில் போப்புக்குச் சொந்தமான பகுதிகளை இம்மானுவல் வென்றார். பீட்மாண்டுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் வாக்கெடுப்பு நடைபெற்றது. பெரும்பான்மையோர் விக்டர் இம்மானுவலை அரசராக ஏற்றுக்கொண்டனர். அப்பகுதிகள் இணைக்கப்பட்டு **ஐக்கிய இத்தாலி** உருவாக்கப்பட்டது. அதில் சேராத பகுதிகள் வெனிஷியாவும் ரோம் நகரமும் மட்டுமேயாகும்.

1866-ல் ஆஸ்திரிய—பிரஷ்யப் போரில் பிஸ்மார்க்குக்கு இத்தாலி உதவி செய்தது. அதன் பயனாக இத்தாலிக்கு வெனிஷியா கிடைத்தது. *1870—1871*-ல் பிரான்சுக்கும் பிரஷ்யாவுக்கும் போர் நடைபெற்றது. அச்சமயத்தில் பிரான்சின் அரசர் ரோமில் இருந்த பிரெஞ்சுப் படையைத் திரும்ப அழைத்துக் கொண்டார். அதைப் பயன்படுத்தி, விக்டர் இம்மானுவல் ரோம் நகரைக் கைப்பற்றினார். ரோம் இத்தாலியின் தலை

நகரமாயிற்று. இதனால் போப் ஆண்டவருக்கு மனக் கசப்பு ஏற்பட்டது. 58 வருடங்களுக்குப் பின்னர்



படம் 34. இத்தாலி ஐக்கியமடைதல்

இத்தாலிக்கும் போப் ஆண்டவருக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி **வாட்டிகன்** மாளிகையும் அதைச் சுற்றியிருந்த பகுதியும் போப் ஆண்டவர் ஆளுவதற்குத்

தரப்பட்டது. உலகிலேயே வாட்டிகன்தான் மிகச் சிறிய இராச்சியமாகும்.

இவ்வாறாக 1871-ல் இத்தாலியின் ஐக்கியம் முழுமை அடைந்தது.

(ஆ) ஜெர்மனி ஐக்கியமடைதல்

(கி. பி. 19ஆம் நூற்றாண்டு)

வியன்னா காங்கிரசின் முடிவுப்படி ஜெர்மனி பல சிறிய நாடுகளாக அமைக்கப்பட்டது. அவை தனித் தனி அரசாகச் செயல்பட்டாலும், ஆஸ்திரியாவின் தலைமையில் ஒரு கூட்டரசாக இயங்கின. ஜெர்மனியின் ஐக்கியத்திற்கு ஆஸ்திரியா எப்போதும் தடைக்கல்லாக இருந்துவந்தது. அத்தடையைப் பிரஷ்யாவின் அரசர் **முதலாம் வில்லியம்** என்பவரும், அவரது முதலமைச்சர் **ஆட்டோவான் பிஸ்மார்க்கும்** அகற்றினார்கள்.



படம் 35. பிஸ்மார்க்

பிஸ்மார்க் ஜெர்மானிய மக்களிடத்தில் இயற்கையாக இருந்த தேசிய உணர்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டார். ஐக்கியத்தைப் பெற அவர் மேற்கொண்ட முறை **இரத்தமும் இரும்பும்** ஆகும். படை பலத்தைப் பெருக்கிப் போரின் மூலம் வெற்றி கொள்ளுதல் என்பது அதன் பொருளாகும்.

பிஸ்மார்க் பிரஷ்யப் படைக்குச் சிறந்த பயிற்சி அளித்தார். ஐரோப்பாவி

லேயே அப்படைதான் திறமையானதாக இருந்தது. பிஸ்மார்க் ஆஸ்திரியாவுடன் நட்புக்கொண்டு, டென் மார்க்மீது போர் தொடுத்தார். **ஷெல்ஸ்விக், ஹால்ஸ்டீன்** என்ற மாநிலங்களை அவர் வென்றார். அப்பகுதியை அவர் பிரஷ்யாவுடன் சேர்த்தார். அதைக் கண்டு ஆஸ்திரியா பொறாமை கொண்டது. பிரஷ்யாவின்மீது போரையும் தொடங்கியது. ஆனால், இப்போர் ஏழு வாரங்களில் முடிவுற்றது. ஆஸ்திரியா படுதோல்வி அடைந்தது. இப்போரின் விளைவாக ஆஸ்திரியா ஜெர்மன் கூட்டமைப்பிலிருந்து விலக்கப்பட்டது. வடக்கு ஜெர்மன் நாடுகள் பிரஷ்யாவின் தலைமையை ஏற்று வடக்கு ஜெர்மானியக் கூட்டமைப்பை நிறுவின.

பிரஷ்யாவின் வளர்ச்சியைக் கண்டு, பிரான்ஸ் மன்னர் **மூன்றாம் நெப்போலியன்** பொறாமைப் பட்டார். 1870-ல் பிரான்ஸ் பிரஷ்யாவின்மீது போர் தொடுத்தது. இந்த அரிய வாய்ப்பை பிஸ்மார்க் நன்கு பயன்படுத்திக் கொண்டார். பொது எதிரியான பிரான்சைத் தோற்கடிக்கும் பொருட்டு வடக்கு, தெற்கு ஜெர்மன் அரசுகளை அவர் ஒன்றாக இணைத்தார். ஜெர்மன் படைகளிடம் மூன்றாம் நெப்போலியன் தோற்றுச் சரணடைந்தார். பிரான்சின் வளமிக்க **அல்சேஸ்–லோரைன்** பகுதிகளை அவர் பிரஷ்யாவுக்குத் தரவேண்டியதாயிற்று. தெற்கு ஜெர்மன் நாடுகள் வட ஜெர்மானியக் கூட்டமைப்பில் சேர்ந்தன. ஜெர்மனியின் ஐக்கியம் இவ்வாறாக 1871-ல் முடிவுற்றது.

பிரான்ஸ் நாட்டு வெர்சே மாளிகையில், பிரஷ்ய அரசர் முதலாம் வில்லியம் ஜெர்மன் பேரரசராகப் பிரகடனம் செய்யப்பட்டார். இவ்வாறு சிதறிக் கிடந்த ஜெர்மன் நாடுகளை ஒன்றுபடுத்திப் பிரஷ்ய மன்னரின் கீழ்க் கொண்டுவந்தது பிஸ்மார்க்கின் அரிய பெரிய சாதனையாகும்.

வினாக்கள்

I. **கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. மாஜினி——————என்ற சங்கத்தை ஏற்படுத்தினார்.
2. கரிபால்டியின் வீரர்கள் ——— என்றழைக்கப்பட்டனர்.
3. ——— தான் உலகிலேயே மிகச்சிறிய இராச்சியமாகும்.
4. பிஸ்மார்க்கின் கொள்கை ————— என்றழைக்கப் படுகிறது.

II. **பின்வரும் வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள விடைகளில் மிகப் பொருத்தமானதைக் குறிப்பிடுக:**

1. இத்தாலியின் ஐக்கியத்திற்கு மிகவும் உதவியாக இருந்தது

(அ) மாஜினியின் அரசியல் அறிவு. (ஆ) காவூரின் இராஜ தந்திரம். (இ) இம்மானுவலின் படைபலம். (ஈ) கரிபால்டி யின் வீரம்.

2. ஜெர்மானிய ஐக்கியத்திற்கு மிகவும் உதவியாக இருந்தது

(அ) ஆஸ்திரிய—பிரஷ்யப் போரின் முடிவு. (ஆ) பிரான்ஸ்—பிரஷ்யப் போரின் முடிவு. (இ) பிரஷ்ய—டென்மார்க் போரின் முடிவு. (ஈ) பிஸ்மார்க்கின் 'இரத்தமும் இரும்பும்' என்னும் கொள்கை.

III. **குறுகிய விடை எழுதுக:**

1. கரிபால்டி இத்தாலியின் ஐக்கியத்திற்கு எவ்வாறு உதவினார்?
2. ஐக்கியத்திற்கு முன் இத்தாலியில் இருந்த இராச்சியங் கள் யாவை?
3. வடக்கு ஜெர்மானிய கூட்டமைப்பு எவ்வாறு ஏற்பட்டது?
4. பிரெஞ்சு—பிரஷ்யப் போரின் முடிவு என்ன?

IV **விரிவான விடை எழுதுக:**

1. இத்தாலியின் ஐக்கியத்திற்குக் காவூர் செய்த செயல் களைக் குறிப்பிடுக.
2. ஜெர்மனியின் ஐக்கியத்திற்குப் பிஸ்மார்க் மேற்கொண்ட பணிகள் யாவை?

பயிற்சி

1. இத்தாலி, ஜெர்மனி ஐக்கியமடைந்ததை விளக்கும் படங்களை வரைக.
2. கரிபால்டி,மாஜினி இவர்களது வாழ்க்கை வரலாற்றைப் படித்துத் தெரிந்துகொள்க.

13. 18, 19ஆம் நூற்றாண்டுகளில் நடைபெற்ற தொழிற்புரட்சியும் விவசாயப் புரட்சியும்

(அ) தொழிற்புரட்சி

முன்னுரை

கி. பி. 17ஆம் நூற்றாண்டு வரை மக்களின் சமூக, பொருளியல் அமைப்பு முறை விவசாயத்தையே அடிப் படையாகக் கொண்டிருந்தது. கி. பி. 18, 19ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட அறிவியல் முன்னேற்றத் தினால், தொழில் துறையில் பெரிய மாறுதல்கள் உண்டாயின. பல புதிய கண்டுபிடிப்புகளின் பயனாகப் பொருள் உற்பத்தி பெருகியது; போக்குவரத்துச் சாதனங் கள் விரைவாக்கப்பட்டன; பொருளாதாரம் விரிவடைந் தது. பல நாடுகளில் புதிய தொழிற்சாலைகள் தொடங் கப்பட்டன. இம்மாறுதலையே **தொழிற் புரட்சி** *என்கிறோம்.*

கி. பி. 18ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில்தான் இத்தொழிற்புரட்சி முதன் முதலில் ஏற்பட்டது. பின்னர் ஐரோப்பிய நாடுகளில் பரவியது. 20 ஆம் நூற்றாண்டில் உலகின் பல பகுதிகளில் தொழிற் புரட்சி ஏற்பட்டது.

I. தொழிற்புரட்சி இங்கிலாந்தில் முதலில் தோன்றக் காரணங்கள்

1. இங்கிலாந்தில் பல நூற்றாண்டுகளாக அமைதி நிலவியது; நிலையான அரசாங்கம் அமைந்திருந்தது. இச் சூழ்நிலை தொழில் வளர்ச்சிக்கு உதவியது.

2. நிலக்கரியும் இரும்பும் ஏராளமான அளவில் அருகருகே கிடைத்தன. தொழில் வளர்ச்சிக்கு இம் மூலப் பொருள்கள் ஆக்கம் தந்தன.

3. இங்கிலாந்து வாணிகர்கள் கடல் வாணிகத்தில் பெரும் பொருள் ஈட்டியதால், தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய மூலதனம் உள்நாட்டிலேயே கிடைத்தது.

4. அமெரிக்க நாடுகளுக்கும், யூரேஷிய நாடுகளுக்கும் இடையே இங்கிலாந்து உள்ளது. இதனால் அனைத்து நாடுகளுடன் தொடர்புகொண்டு, தொழில் மற்றும் வாணிகத்தைப் பெருக்க முடிந்தது.

5. இங்கிலாந்தின் குடியேற்றம் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற உலகின் பல பகுதிகளில் பெருகியது. இந்தியாவில் அதன் பேரரசு இருந்தது. இதனால் உற்பத்திப் பொருளுக்குச் சந்தைகள் கிடைத்தன. மூலப் பொருள்களை ஏராளமாகவும் மலிவாகவும் வாங்க வசதி ஏற்பட்டது.

6. இங்கிலாந்தில் இயற்கைத் துறைமுகங்கள் பல இருக்கின்றன. கப்பல்கட்டும் தொழில் வளர்ச்சி அடைந்ததால், அது கடல் வாணிகத்திற்கு உதவியாக இருந்தது.

7. இங்கிலாந்தின் தட்பவெப்ப நிலை பருத்தி நெசவு போன்ற தொழில்களுக்குப் பெரிதும் உறுதுணையாக அமைந்திருக்கிறது.

8. மக்கள் தொகைப் பெருக்கத்தால், பொருள்களின் தேவையும் கூடுதலாயிற்று. அவற்றைப் பெரும் அளவில் செய்ய இயந்திரங்கள் தேவைப்பட்டன. அச்சாதனங்களைக் கண்டுபிடிக்கவும் தொழில் நுட்பத் திறனோடு செயலாற்றவும் இங்கிலாந்து மக்கள் அறிவைப் பெற்றிருந்தனர்.

II. தொழிற்புரட்சிக்கு உதவிய முக்கிய கண்டுபிடிப்புகள்

i நெசவுத் தொழில் இயந்திரங்கள்

மக்கள் தொகைப் பெருக்கத்தின் விளைவாகப் பருத்தித் துணிகளின் தேவை பன்மடங்கு பெருகியதால், பருத்தி நெசவுத் தொழில் வளர்ச்சிக்குதவும் இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. 1733-ல் **ஜான்கே** என்பவர் **பறக்கும் பாவோட்டியைக்** கண்டுபிடித்தார். 1764-ல் **ஜேம்ஸ் ஹார்க்ரீவ்ஸ்** என்பவர் **நூற்கும் ஜென்னி (Spinning Jenny)**யைக் கண்டுபிடித்தார். இக்கருவி ஒரே சமயத்தில் பதினாறு கதிர்களைச் சுழல வைத்தது. பின்னர் **ஆர்க்ரைட்** என்பவர் **நீர்ச்சட்டம் (Water Frame)** என்ற ஒரு கருவியைக் கண்டுபிடித்தார். அவர் இக்கருவியை நீர் விசையால் இயக்கினார். இக்கருவி உறுதியான நூல் தயாரிக்க உதவியது. **சாமுவேல் கிராம்டன்** என்பவர் நூற்கும் ஜென்னியையும் நீர்ச்சட்டத்தையும் ஒன்றாக இணைத்து **மியூல் (Mule)** என்ற கருவியை உருவாக்கினார். இக்கருவியால் நூற்றுக்கு மேற்பட்ட கதிர்களை ஒரே சமயத்தில் இயக்க முடிந்தது. இதனைத் தொடர்ந்து **எட்மண்ட் கார்ட்ரைட்** என்பவர் 1785-ல் நீர் (அல்லது) நீராவியால் இயங்கும் **விசைத்தறி**யைக் கண்டு பிடித்தார். பருத்தியிலிருந்து விதைகளை அகற்ற **ஜின் (Gin)** என்ற கருவியும் பின்னர்க் கண்டுபிடிக்கப் பட்டது. இத்தகைய புதிய இயந்திரங்களால் நூற்புத் தொழிலும் நெசவுத் தொழிலும் வேகமாக வளர்ந்தன.

1846-ல் **தையல் இயந்திரம் (Sewing Machine)** கண்டுபிடிக்கப்பட்டது. பருத்தித் துணிகளைக்கொண்டு பலவித அழகிய ஆடைகள் அந்த இயந்திரத்தால் தைக்கப் பட்டன. இங்கிலாந்து ஆடை நெசவு மற்றும் ஆடை தயாரிப்புத் தொழிலில் உன்னத நிலையை அடைந்தது.

ii. இரும்பு–நிலக்கரி தொழில் இயந்திரங்கள்

முற்காலத்தில் இரும்புத் தாதுப் பொருளை மரக் கரியைக்கொண்டு காய்ச்சி இரும்பைப் பிரித்தெடுத் தனர். 1750-ல் **ஆபிரஹாம் டர்பி** என்ற ஆங்கிலேயர் மரக்கரிக்குப் பதில் நிலக்கரியைப் பயன்படுத்தும் முறையைக் கண்டுபிடித்தார். இரும்புச் சுரங்கங்களுக்கு அருகில் நிலக்கரிச் சுரங்கங்கள் காணப்பட்டமையால், இரும்பு எஃகுத் தொழில் வளர வாய்ப்பு ஏற்பட்டது.

சுரங்கங்களில் தோன்றிய நீர் ஊற்றுகள் தாதுப் பொருள்களை வெட்டியெடுக்கத் தடையாக நின்றன. **ஜேம்ஸ் வாட்** என்பவர் கண்டுபிடித்த **நீராவிக் குழாய்** மற்றும் **நீராவி இயந்திரம்** இத்தடையை அகற்றியது. அக் காலத்தில் இருண்ட சுரங்கத்தில் வேலை செய்யும்போது கைவிளக்குகளைப் பயன்படுத்தினர். அவ்விளக்குகள் சுரங்கத்தில் உள்ள வாயுக்களினால் வெடித்துத் தீப்பிடித்து ஆபத்துகளை விளைவித்தன. இவற்றைத் தடுக்க **சர் ஹம்பிரி டேவி** என்பவர் **காப்பு விளக்கு (Safety Lamp)** ஒன்றைக் கண்டுபிடித்தார். இரும்புத் தொழில் வளர்ச்சி அடைய இத்தகைய கண்டுபிடிப்புகள் மிக உதவியாக விளங்கின. 19ஆம் நூற்றாண்டில் எஃகு செய்யும் விதம் கண்டுபிடிக்கப்பட்டது. நீராவியின் சக்தி யால் எஃகைக் கொண்டு நுண்ணிய இயந்திரக் கருவிகள் உற்பத்தி செய்யப்பட்டன.

iii. போக்குவரத்துச் செய்திக்கான இயந்திரங்கள்

தொழிற்புரட்சியின் விளைவாகப் பொருள் உற்பத்தி அதிகரித்தது; வாணிகம் பெருகலாயிற்று. இப்பொருள் களை வாங்கும் சந்தைகள் உலகெங்கும் பரவி இருந்தன. அங்கு இவற்றை அனுப்பப் போக்குவரத்துச் சாத னங்களை விரிவுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

நிலத்தில் புதிய பொதுச்சாலைகளை அமைப்பதில் பொறியியல் வல்லுநர்கள் முன்னேற்றம் கண்டனர்.

ஜான் மெக்காடம் என்பவர் உறுதியான மேற்பரப்புடைய சாலையை அமைத்தார். அதன்மீது பலவித வண்டிகள் செல்ல வசதியாக இருந்தது.

கனமான பொருள்களைச் சாலைகளின் வழியாக எடுத்துச் செல்வது கடினமாக இருந்தது. அவற்றை நீர் வழியாகக் கொண்டுசெல்வது எளிது • **பிரிட்ஜ் வாட்டர் கோமகனும், பிரின்ட்லி** என்ற பொறியியல் வல்லுநரும் கால்வாய்ப் போக்குவரத்துத் துறையை அமைப்பதில் பேருதவி புரிந்தனர். இவர்கள் முதன் முதலில் **ஓர்ஸிலியிலிருந்து மான்செஸ்டர்** வரை ஒரு கால்வாயை அமைத்தனர். இவர்களைப் பின்பற்றி அநேகர் கால்வாய் கள் வெட்டினர். நாட்டில் **கால்வாய்க் கிறுக்கு (Canal mania)** ஏற்பட்டது. இந்தக் கால்வாய்கள் உள்நாட்டு வாணிகத்திற்குப் பெரிதும் உதவின.

கப்பல்களிலும் படகுகளிலும் நீராவி இயந்திரங்கள் பொருத்தப்பட்டு, அவை கால்வாய்களிலும் ஆறுகளிலும் வேகமாகச் செல்ல வழிவகுக்கப்பட்டது.

ஜார்ஜ் ஸ்டீவன்சன் என்பவர் நீராவி இயந்திரம் ஒன்றை அமைத்தார். இது இரயில்பாதை தொடங்க உதவியாக இருந்தது. 1825-ல் அவர் தமது இரயில் வண்டியை மணிக்கு 19 கி. மீ. வேகத்தில் ஓட்டிக் காண் பித்தார். பின்னர் **ராக்கெட்** என்ற இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். அது மணிக்கு 56 கி.மீ. வேகத்தில் சென்றது. 1830-ல் மான்செஸ்டர் நகரிலிருந்து லிவர்பூல் நகர் வரை இரயில்பாதை அமைக்கப்பட்டது. முன்பு கால்வாய்க் கிறுக்கு ஏற்பட்டதுபோல் இப்பொழுது **இரயில் பாதைக் கிறுக்கு (Railway mania)** ஏற்பட்டது. இங்கிலாந்தில் பல இரயில் போக்குவரத்து நிறுவனங்கள் தோன்றின. அவை அநேக இரயில் பாதைகளை அமைத்தன.

இரப்பரைக்கொண்டு சக்கரங்களை உருவாக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டதால், சாலைப் போக்குவரத்

தில் பெரிய புரட்சி ஏற்பட்டது. இதனையடுத்துச் செய்திப் போக்குவரத்திலும் ஒரு பெரிய மாறுதல் உண்டாயிற்று. **ரௌலண்ட் ஹில்** என்பவர் இங்கிலாந்தில் தபால் முறையை ஏற்படுத்தினார். இவரே 'நவீன தபால் முறையின் தந்தையாவார்'. ஒரு பென்னி தபால் தலை ஒட்டப்பட்ட கடிதம் இங்கிலாந்தில் எந்த இடத்திற்கும் போய்ச் சேர்ந்தது. மின்சக்தி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு தந்தி, தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி போன்ற விந்தையான கருவிகள் அமைக்கப்பட்டன. இவை வாழ்க்கை வசதிகளை மேலும் அதிகரித்தன.

III. பிறநாடுகளில் தொழிற் புரட்சி பரவுதல்

இங்கிலாந்தில் முதலில் தோன்றிய தொழிற்புரட்சி பின்னர் ஐரோப்பிய நாடுகளில் பரவிற்று. பிரான்ஸ் நாட்டில் அல்சேஸ் லொரைன் பகுதியில் இரும்புத்தாது கிடைத்தது. எனவே, அதைச் சுற்றிப் பல தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. பிராங்கோ **ஜெர்மானியப் போரின்** விளைவாக அப்பகுதி ஜெர்மனியின் வசமாயிற்று. இதனால் ஜெர்மனி தொழில் துறையில் துரிதமாக முன்னேற்றம் அடைந்தது. **ஹென்றி பெஸ்ஸமர்** என்ற ஜெர்மானியர் ஒரு புதிய எஃகு செய்யும் முறையைக் கண்டுபிடித்தபின், ஜெர்மானிய அரசு தொழில் மற்றும் விவசாய முன்னேற்றத்திற்குப் பேராதரவு தந்தது. தொழிற்புரட்சியில் ஜெர்மனி முன்னணியில் இருந்தது.

காலப்போக்கில் **அமெரிக்கா**, **ஜப்பான்** போன்ற நாடுகளில் தொழிற் புரட்சி ஏற்பட்டது. **இந்தியாவிலும் கல்கத்தா**, **ஜாம்ஷெட்பூர்** போன்ற பகுதிகளில் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன.

IV. தொழிற்புரட்சியின் விளைவுகள்

i. நன்மைகள்

1. தொழிற்புரட்சி ஏற்பட்டதால், பெரிய ஆலைகள் அமைக்கப்பட்டுப் பொருள் உற்பத்தி பெருகிற்று.

தேவையான பொருள்களை இயந்திரங்கள் விரைவாகவும், ஏராளமாகவும், மலிவாகவும் தயாரித்தன.

2. நெசவு, இரும்பு எஃகு, கப்பல் கட்டுதல் ஆகிய ஆலைகள் பேரளவில் வளர்ந்தன. இங்கிலாந்து உலகின் தொழிற்சாலை ஆயிற்று. கடல் வாணிகம் பெருகியதால் இங்கிலாந்தின் செல்வம் பெருகலாயிற்று.

3. இயந்திரங்கள் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்பட்டதால், தொடக்கத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது. ஆனால் நாளடைவில் தேவை அதிகமாகி, உற்பத்தி பெருகியது. நாட்டில் வேலை வாய்ப்பு நிறைய ஏற்பட்டது.

4. தொழிற்சாலைகள் அமைந்த இடங்களில் தொழிலாளர்கள் குடியேறினர். அவ்விடங்கள் நாளடைவில் நகரங்களாக மாறின. **மான்செஸ்டர், பர்மிங்ஹாம், ஷெப்பீல்டு, நியூகாசில்** போன்ற தொழில் நகரங்கள் இங்கிலாந்தில் ஏற்பட்டன.

5. பொருள்கள் உள்நாட்டின் தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டமையால், வெளிநாடுகளில் விற்க சந்தைகள் தேவைப்பட்டன. இதன் விளைவாக உலகெங்கும் வாணிக நிலையங்களும் குடியேற்றங்களும் தோன்றலாயின.

6. ஒவ்வொரு நாடும் தங்கள் தொழில்களைப் பிற நாடுகளின் போட்டிகளிலிருந்து காத்துக்கொள்ளும் பொருட்டுக் **காப்பு வரிகள்** (**Protective Tariffs**) விதிக்கத் தலைப்பட்டன.

7. போக்குவரத்து, செய்தி, மருத்துவம் ஆகிய துறைகளில் நன்மை தரும் மாறுதல்கள் பல ஏற்பட்டன.

ii. தீமைகள்

1. தொழிற்புரட்சியால் தொழிற்சாலைகள் பெருகின. மக்கள் கிராமங்களை விட்டு, வேலை தேடி நகரங்

களுக்குச் சென்று குடியேறினர். கிராமங்களில் விவசாயம் குன்றியது. உணவுப்பொருள் உற்பத்தி குறைந்ததால், இங்கிலாந்து போன்ற நாடுகள் உணவுக்கு வெளி நாடுகளை நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

2. தொழிற்சாலை முறை ஏற்பட்டதால், சிற்றூர் களில் நடைபெற்ற குடிசைத் தொழில்கள் நலிந்தன. தொழிற்சாலையில் செய்யப்பட்ட பொருள்கள் விலை மலிவாக விற்கப்பட்டமையால், அவற்றோடு குடிசைத் தொழில் பொருள்கள் போட்டியிட முடியவில்லை.

3. தொழிற்சாலைகள் உள்ள நகரங்களில் மக்கள் பெருக்கம் அதிகமாயிற்று. நகரங்கள் சுகாதார முறைப் படி அமையவில்லை. தொழிற்சாலைகளிலிருந்து வெளிப் பட்ட புகையும், கழிவு நீரும் சுகாதாரத்திற்குக் கேடு விளைவித்தன. ஆரவாரமிக்க நகர வாழ்க்கையில் அமைதி கிட்டவில்லை.

4. தொழிற்சாலைகளில் சில வேலைகளைச் செய்யச் சிறுவர்கள் பயன்படுத்தப்பட்டனர். சிறியோரும் பெரியோரும் . பெண்களும் குறைந்த கூலிக்கு அதிகநேரம் வேலை செய்யவேண்டியிருந்தது. இக் கொடுமையைத் தடுக்க அரசு சட்டமியற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

5. புதிய நகரங்களில் வாழ்ந்த மக்களுக்குப் பாராளு மன்றத்தில் பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. அதனால் கிளர்ச்சிகள் தோன்றின.

6. தொழிற்சாலை முறையால் முதலாளி, தொழி லாளி என்ற வர்க்கப் பிரிவுகள் தோன்றின. நாளடைவில் இவர்களிடையே மனக்கசப்பு ஏற்பட்டது. முதலாளிகள் இலாப நோக்குடன் குறைந்த கூலி தந்து அதிக வேலை வாங்கினர். தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களை அமைத்து, குறைந்த நேர வேலை, அதிகக் கூலி, தொழிற் சாலையில் வசதி இவற்றிற்காகப் போராடினர். தொழிற்

சங்கங்கள் நாளடைவில் பலமும் அதிகாரமும் பெற்றன. தொழிலாளி, முதலாளி வர்க்கப் போராட்டம் தொடங்கியது.

(ஆ) விவசாயப் புரட்சி

முன்னுரை

தொழிற்புரட்சியின் விளைவாக ஏராளமான தொழிற்சாலைகள் ஏற்பட்டன. கிராமத்தில் வாழ்ந்த மக்கள் வேலை தேடித் தொழில் நகரங்களுக்குக் குடியேறினர். இதனால் விவசாயம் குன்றியது. உணவுப் பொருள்களின் தேவை அதிகமாயிற்று. மேலும் பருத்தி, உரோமம், பிளாக்ஸ் போன்ற மூலப் பொருள்கள் ஆலைகளுக்குப் பெருமளவில் தேவைப்பட்டன. இந்தத் தேவைகளை நிறைவு செய்யப் புதிய விவசாய முறைகளும் கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

i. புதிய விவசாய முறைகளும் கருவிகளும்

விளைநிலங்களை வளமாக்க, **டவுன்ஷெண்ட் பிரபு பயிர் சுழற்சி (Rotation of Crops)** முறையைக் கண்டுபிடித்தார். ஒரே நிலத்தில் ஆண்டுதோறும் ஒரே வகையான பயிர் செய்வதற்குப் பதிலாகக் கோதுமை, பார்லி, டர்னிப் பயிர்கள் மாற்றி மாற்றிப் பயிரிடப்பட்டன. இதனால் மண்ணின் வளம் பாதுகாக்கப்பட்டது. இப்புது முறை விவசாயத்தால் உணவு உற்பத்தி பெருகியது.

ஜெத்ரோடல் என்பவர் **டிரில் (Drill)** என்னும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். இதன் உதவியால் விதைகளை வரிசையாகவும் சிக்கனமாகவும் விதைக்கமுடிந்தது. **பேக்வெல்** என்பவர் செம்மறி ஆடுகள் வளர்ப்பில் புதிய முறைகளைக் கண்டுபிடித்தார். **காலிங்** என்பவர் மாடுகள் வளர்ப்பில் நவீன முறையைப் புகுத்தினார். இதனால் மாடுகள் கொழுத்து வளர்ந்தன. பசுக்கள் நிறையப் பால் தந்தன.

ii. விளைவுகள்

விவசாயப் புரட்சியால் பெரிய நிலக்கிழார்கள் பெரும் பயன் பெற்றனர். அவர்களிடம் மூலதனம் அதிகமிருந்ததால், புதிய முறையைப் பின்பற்றி, புதிய கருவிகளைப் பயன்படுத்தி அதிக உற்பத்தி செய்தனர். தங்களது பயிர்களைக் கால்நடைகள் அழிக்காமல் இருக்கவும், பிறர் திருடாமல் இருக்கவும் தமது நிலங்களுக்கு வேலிகள் அமைத்தனர். ஏழைக் குடியானவர்களால் புதிய முறையைக் கையாள முடியவில்லை. சிறிய விவசாயிகள் தங்கள் வசமிருந்த துண்டு நிலங்களைப் பெரிய நிலக்கிழார்களுக்கு விற்றுவிட்டனர். அவர்கள் கிராமத்தை விட்டு நகரங்களுக்குச் சென்று தொழிற்சாலைகளில் கூலி வேலை செய்து பிழைத்தனர்.

விவசாயப் புரட்சியால் உணவுப் பயிர்களும் கால்நடைகளும் அதிகமாக உற்பத்தியான போதிலும், இங்கிலாந்தில் குடியானவர் சமூகம் சிதைந்து போயிற்று.

வினாக்கள்

I. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. தொழிற்புரட்சி கி.பி. ———— ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஏற்பட்டது.
2. நூற்கும் ஜென்னியை ——— என்பவர் கண்டுபிடித்தார்.
3. எட்மண்ட் கார்ட்ரைட் ———— என்னும் கருவியைக் கண்டுபிடித்தார்.
4. சாலைகள் அமைப்பில் புதிய முறையைக் கையாண்டவர்———— என்பவராவார்.
5. சுரங்கத்தில் எரி வாயுவினால் ஏற்படும் விபத்தைத் தடுக்க———— கண்டுபிடிக்கப்பட்டது.

II. பின்வரும் உட்பிரிவுகளுள் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. தொழிற்புரட்சி இங்கிலாந்தில் முதன் முதலில் ஏற்படக் காரணம்

(அ) நீண்ட கால அமைதி. (ஆ) இயற்கைத் துறைமுகங்கள்.
(இ) நிலக்கரியும் இரும்பும் அருகருகே கிடைத்தன.
(ஈ) சந்தைகள் அதிகம் இருந்தன.

III. குறுகிய விடை எழுதுக

1. தொழிற்புரட்சி என்றால் என்ன?
2. நெசவுத் தொழில் வளர்ச்சிக்கு உதவிய இயந்திரங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
3. இங்கிலாந்தில் கால்வாய்ப் போக்குவரத்து முறைக்கு வழி வகுத்தவர்கள் யாவர்?
4. இங்கிலாந்தில் உள்ள தொழில் நகரங்களில் ஏதாவது நான்கினைக் குறிப்பிடுக.
5. 'பயிர்ச் சுழற்சி' முறை என்றால் என்ன?

IV. விரிவான விடை எழுதுக.

1. தொழிற்புரட்சி முதன்முதலில் இங்கிலாந்தில் தோன்றக் காரணங்கள் சிலவற்றைக் கூறுக.
2. தொழிற்புரட்சியால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?
3. விவசாயப் புரட்சிக்கு உதவியவர்கள் யாவர்? அவர்கள் கண்டுபிடித்த சாதனங்கள் எவை? அவற்றினால் ஏற்பட்ட பயன்கள் யாவை?

பயிற்சி

1. உங்கள் ஊருக்கு அருகிலுள்ள பெரிய தொழிற்சாலைகளுக்குச் சென்று பார்வையிடுக.
2. விவசாயப் பண்ணை ஒன்றைப் பார்வையிடுக. அங்கு பயன்படுத்தப்படும் இயந்திரங்களைக் கவனித்துத் தெரிந்துகொள்க.
3. பல்வேறு தொழிற்சாலைகளின் படங்களைச் சேகரித்துப் படப் புத்தகத்தில் ஒட்டி வைக்கவும்.

14. 20ஆம் நூற்றாண்டின் உலகம்

(அ) ஜப்பானின் எழுச்சி

முன்னுரை

உறங்கிக்கொண்டிருந்த ஜப்பான் திடீரென்று விழித்து எழுந்தது வியக்கத்தக்க ஒன்றாகும். ஜப்பான் உலக நாடுகளிலிருந்து ஒரேயடியாகப் பிரிக்கப்பட்டிருந்த காலம் அது. **ஷோகன்** *என்ற படைத் தலைவரின் தலைமையில் அவர்கள் தங்கள் விருப்பப்படி தனித் தன்மையான ஆட்சியை நடத்தி வந்தனர்.* **மிகாடோ** *என்றழைக்கப்பட்ட மன்னர் பெயரளவில் ஜப்பானிய அரசராக இருந்தார். பின்தங்கிய, தனித்தியங்கிய ஜப்பான் 19வது நூற்றாண்டின் இறுதியில் மேல்நாட்டு நாகரிகத்தைப் பின்பற்றி உலக வல்லரசுகளுள் ஒன்று ஆயிற்று. இந்த வியக்கத்தக்க மாறுதலைப்பற்றிப் படிப்போம்.*

I. மெய்ஜிப் புரட்சி *(கி. பி. 1868)*

கி. பி. 1853ஆம் ஆண்டு **கப்மாடர் பெர்ரி** *என்னும் அமெரிக்கக் கப்பற் படைத் தலைவன் ஜப்பானுக்கு வந்து ஜப்பானியத் துறைமுகங்கள் மூலம் ஜப்பானுடன் அமெரிக்கா வாணிகம் நடத்த அனுமதி கேட்டான். அப்பொழுது ஆட்சி புரிந்த ஷோகன் அனுமதியளித்தார். அமெரிக்காவைப் பின்பற்றிப் பிரிட்டனும் அனுமதி பெற்றது. ஷோகன் அனுமதி வழங்கியதை ஜப்பானியர்கள் விரும்பவில்லை. எனவே, அவர்கள் ஷோகன் ஆட்சியை நீக்கி மன்னருக்கு முழு அதிகாரம் வழங்கினர். ஷோகன் ஆட்சி நீங்கி மன்னர் ஆட்சி ஏற்பட்ட நிகழ்ச்சி* **மெய்ஜிப் புரட்சி** *எனப்படுகிறது. முழு அதிகாரம் அளிக்கப்பட்ட மன்னர்* **முட்சி ஹூடோ** *என்பவர். இவர் ஜப்பானில்*

மேனாட்டுக் கல்வியையும் தொழில் திறனையும் கொணர இடைவிடா முயற்சி செய்தார். புதிய தொழில்களை ஏற்படுத்தினார். அரசியலில் மக்கள் பங்கினைப் புகுத்தச் சபைகளை நிறுவினார். பழங்காலச் சட்டங்களை ஒழித்துப் புதிய கருத்துகளுக்குரிய சட்டங்களைக் கொண்டு வந்தார். இராணுவப் படையையும் கப்பற்படையையும் நவீனமாக்கினார். இவ்வாறு புதிய ஜப்பானுக்கு அடிகோலிய முட்சி ஹூடோவை ஜப்பானியர்கள் **ஜப்பானின் தந்தை** என்றழைத்தனர். ஜப்பான் மிக விரைவில் முன்னேற்றமடைந்தது. மிக வலிமை வாய்ந்த நாடாக மாறிற்று. தனதுபலத்தை உணர்ந்த ஜப்பான் ஐரோப்பிய நாடுகளைப்போல பேரரசு ஒன்றை நிறுவ விரும்பியது.

II. சீனா–ஜப்பான் போர் (கி. பி. 1894–1895)

ஜப்பானுக்கு அருகில் சீனாவில் உள்ள கொரியா தீபகற்பத்தை வென்று ஜப்பானுடன் இணைக்க மிகாடோ விரும்பினார். வேறு எந்த மேற்கத்திய நாடுகளினாலாவது அது வெல்லப்படுமேயானால் ஜப்பானுக்கு ஆபத்து நேரிடும். எனவே, கி.பி. 1894-ல் சீனாவுக்கு எதிராகக் கொரியாவில் ஏற்பட்ட கலகத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஜப்பான் அந்நாட்டின்மீது படையெடுத்துச் சென்றது. **யாலு** ஆற்றில் சீனக் கப்பற்படை முறியடிக்கப்பட்டது. **லியோடுங்** தீபகற்பத்திலும் **மஞ்சூரியா**விலும் ஜப்பானியப் படைகள் குவிந்தன. **போர்ட் ஆர்தரும்** வேறு சில துறைமுகங்களும் ஜப்பானின் வசமாயின. 1895-ல் **ஷிமோனாஸெகி** என்னுமிடத்தில் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் நடைபெற்ற உடன்படிக்கையில் சீனா, கொரியாவுக்கு உரிமை அளித்து **பார்மோஸா** தீவையும் **லியோடுங்** தீபகற்பத்தையும் **போர்ட் ஆர்தரை**யும் ஜப்பானுக்குக் கொடுத்தது. சீனாவுடன் வாணிபம் நடத்தவும் ஜப்பானுக்கு வசதி அளிக்கப்பட்டது.

சீனா-ஜப்பான் போர் சீனாவின் பலவீனத்தை உலக மக்களுக்குத் தெரிவித்தது. அதே சமயத்தில் ஜப்பான்

ஒரு வல்லரசாக விளங்கக்கூடும் என்பதையும் காண்பித்தது. ஜெர்மானியப் பேரரசராகிய **இரண்டாம் வில்லியம்** ஜப்பானின் எழுச்சியை **மஞ்சள் பயம்** என்று குறிப்பிட்டார்.

III. ரஷ்யா–ஜப்பான் போர் *(கி. பி. 1904-1905)*

i. காரணம்

ஜப்பானின் சீன வெற்றியால் ரஷ்யா சினமடைந்தது. மஞ்சூரியாவில் ரஷ்யா முன்னேறுவதற்கு ஜப்பான் தடையாக இருந்ததே இதற்குக் காரணம். பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளும் ஜப்பானின் வெற்றியைக் கண்டு அஞ்சியதால் ஜப்பானை வற்புறுத்தி லியோடுங் தீபகற்பம், போர்ட் ஆர்தர் ஆகியவற்றைச் சீனாவுக்குத் திரும்ப அளிக்கச் செய்தன. இங்கிலாந்து ரஷ்யாவுடன் சேராமல் தனியாக ஜப்பானுடன் நேச உடன்பாடு செய்துகொண்டது. ஒரே சமயத்தில் இரு எதிரிகளால் தாக்கப்பட்டால் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்டது.

நாளடைவில் ரஷ்யா சீனாவிடமிருந்து போர்ட் ஆர்தரைப் பெற்றதுமன்றி, மஞ்சூரியா வழியாகப் போர்ட் ஆர்தருக்கும் விளாடிவாஸ்டாக்குக்கும் இருப்புப் பாதை அமைக்கவும் ஒப்புதல் பெற்றது. மஞ்சூரியாவை ரஷ்யா தம் மாநிலங்களுள் ஒன்றாகக் கருதியது. கொரியாவுக்குள் ரஷ்யத் துருப்புகள் நுழைந்தன. ஜப்பான் இதை எதிர்த்துக் கொரியாவில் ஜப்பானின் உரிமைகளை ஒப்புக்கொள்ளவேண்டுமென்று கூறியது. இதை ரஷ்யா ஏற்காமல் கி. பி. 1904-ல் ஜப்பானுடன் போர் தொடுத்தது.

ii. போரின் போக்கு

உலக நாடுகள் வியப்புற ஜப்பான் **யாலு** ஆற்றில் ரஷ்யப் படைகளை முறியடித்தது. பின்பு **முக்டெனிலும்**

வேறு சில இடங்களிலும் ஜப்பான் ரஷ்யாமீது வெற்றி பெற்று நீண்ட முற்றுகைக்குப் பிறகு போர்ட் ஆர்தரை யும் கைப்பற்றியது. பால்டிக் கடலிலிருந்து ஜப்பான் கடலுக்கு வந்த ரஷ்யக் கப்பற்படையை **தீஸிஷியா** நீரிணைப்பில் தளபதி டோகோ தலைமையிலிருந்த ஜப்பானியக்கப்பற்படை முற்றிலும் முறியடித்தது. இதன் பின்பு அமெரிக்க ஜனாதிபதி **தியோடர் ரூஸ்வெல்ட்** தலை யிட்டு இரு நாடுகளையும் சமாதானம் செய்துகொள்ளச் செய்தார். ஜப்பானுக்கு **லியோடுங் தீபகற்பம், போர்ட் ஆர்தர்** ஆகியவையும், **ஸ்கேலின் தீவின்** தென்பகுதியும் அளிக்கப்பட்டன. கொரியாவில் ஜப்பானின் உரிமைகளை ஒத்துக்கொண்டதுமன்றி மஞ்சூரியாவைச் சீனாவின் பகுதியாகவும் ரஷ்யா ஒப்புக்கொண்டது. எனினும், ஜப்பானுக்குப் போர் நஷ்ட ஈடு கிடைக்காததால் ஜப்பான் அதிருப்தி கொண்டது.

iii. விளைவுகள்

இப்போருக்குப் பின் ரஷ்யா கிழக்கில் தன் ஆதிக் கத்தைப் பெருக்க முடியாதது கண்டு பால்கன் தீபகற்பத் தில் அதிகக் கவனம் செலுத்தத் தொடங்கிற்று. ஜப்பான் உலக வல்லரசுகளுள் ஒன்றாகக் கருதப்பட்டது. ஜப்பா னின் எழுச்சி சீனாவிலும் ரஷ்யாவிலும் புரட்சிகளைத் தோற்றுவித்தது. சீனா, ஜப்பானைப்போல் வலிமை பெற ஆசை கொண்டது. ஜப்பானின் எழுச்சி இந்திய தேசிய இயக்கத்தை வலுப்படுத்தியது.

IV. இரண்டாம் உலகப் போர்— ஜப்பானின் ஆக்கிரமிப்பு, வீழ்ச்சி

ஜப்பானின் பேரரசு சிறிது காலம்தான் இருந்தது. இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பான் ஜெர்ம னுடன் இணைந்துகொண்டது. அது மிகக் குறுகிய காலத்தில் பெரும்பான்மை ஆசியாவைக் கைப்பற்றியது. இறுதியில் அமெரிக்க அணுகுண்டுகள் ஜப்பானில் போடப்

பட்டு, ஜப்பான் சரணடைந்தது; தனது பரந்த பேரரசை இழந்தது. இன்று அது ஓர் அமைதியான நாடாகவும், பலம் பொருந்திய தொழிற்சாலைகள் உள்ள நாடாகவும் விளங்குகின்றது. அது தன் போர் ஆவலை இழந்தது. ஒரு தலைசிறந்த பொருளாதார வளர்ச்சி மிக்க நாடாக விளங்குகின்றது.

(ஆ) சீனப் புரட்சி *(கி. பி. 1911)*

முன்னுரை

ஜப்பானில் நடந்த மெய்ஜிப் புரட்சி கத்தியின்றி, இரத்தமின்றி அமைதியாக ஏற்பட்ட புரட்சியாகும். ஆனால் சீனாவில் நடந்த புரட்சி பிரெஞ்சுப் புரட்சியைப் போல பல நிலைகளை அடைந்து, பல உயிர்களைப் பலி யாக்கி, இறுதியில் வெற்றியடைந்தது. இப்புரட்சியை இங்கு படிப்போம்.

i. காரணம்

சீனா ஒரு மிகப்பெரிய நாடு. அது பல நூற்றாண்டு கள் நின்று நிலவிய பழம்பெரும் பண்பாட்டை உடையது. ஆனால், அது ஜப்பானைப் போலவே உலக நாடுகளி லிருந்து பிரிந்து தனித்து இருந்தது. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண்ட **மஞ்சு** அரசர்கள் திறமையற்றவர் களாக இருந்தனர். இதைப் பயன்படுத்தி ஐரோப்பியர் சீனாவின் கடற்கரையோரத்தில் வணிகத் தலங்கள் அமைத்துக்கொண்டு சலுகைகள் பெற்றனர். இந்த கடற்கரையோர வாணிக ஸ்தலங்களில் மேலை நாட்டினர் தங்கு தடையின்றி வாணிபஞ்செய்து வந்தனர். அவர்கள் சீன சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படாமல் சுதந்திர மாக வாழ்ந்தனர். அவர்களை மஞ்சு அரசாங்கம் அடக்க வில்லை. இதைக் கண்ட சீன மக்கள் 1899-ல் கலகம் செய் தனர். இதற்கு **பாக்ஸர் கலகம்** என்று பெயர். இதில்

அநேக மேனாட்டவர்கள் கொல்லப்பட்டனர். இக் கலகத்தை மஞ்சு அரசாங்கம் மேனாட்டினர் உதவி கொண்டு அடக்கியது. அதனால் மஞ்சு அரசாங்கத்தை மக்கள் அதிகமாக வெறுத்தனர். *1904*-லிருந்து *1905* வரை நடந்த ரஷ்ய ஜப்பானியப் போரில் ஜப்பானின் அமோக வெற்றி சீன மக்களிடம் ஒரு புதிய உணர்ச்சியை ஏற்படுத்தியது. அச்சமயத்தில் **டாக்டர் சன்யாட் சென்** என்ற சீனப் பெரியார் தோன்றினார். இவர் *1911*-ல் இரு புரட்சியை நடத்தினார். மஞ்சு அரசை நீக்கிச் சீனாவை ஒரு குடியரசு ஆக்கினார். அவருடைய கொள்கைகள் **தேசியம், ஜனநாயகம், சமதர்மம்** என்பனவாகும்.

படம் 36. டாக்டர் சன்யாட் சென்

ii. புரட்சியின் போக்கு

சீனப் புரட்சி நடந்தபோது டாக்டர் சென்னுக்குப் போட்டியாக **யுவான் ஷிகாய்** என்ற தலைவர் தோன்றினார். நாட்டின் ஒற்றுமையைக் காக்க டாக்டர் சென் யுவானுக்கு விட்டுக்கொடுத்து யுவானைச் சீனக் குடியரசுத் தலைவராக்கினார். யுவான் பிற்போக்குவாதி. அவர் சீனாவின் சர்வாதிகாரியானார். நாட்டில் ஜப்பானுக்கும் மேலை நாடுகளுக்கும் பல சலுகைகள் வழங்கினார். அவர் இறந்தபின் பல தலைவர்கள் தோன்றிச் சீனா பல பகுதிகளாகப் பிரிந்தது. டாக்டர் சென் **கோமிண்டாங் தேசியக் கட்சியை** உருவாக்கிச் சீனாவை ஒற்றுமைப்படுத்த முயன்றார். அவர் ருஷ்ய உதவி பெற்றார். அதனால் கோமிண்டாங் கட்சியில் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு வளர்ந்தது. *1925*-ல் டாக்டர் சென் மறைந்தார். அவருக்

குப்பின் **சியாங்கேஷேக்**, கோமிண்டாங் கட்சியின் தலைவரானார். அவர் கம்யூனிஸ்டுகளை வெறுத்தார். அப்பொழுது சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர்களாக **மா-சே-துங்கும் சூ-என்-லாயும்** இருந்தனர். அவர்கள் தென்பகுதியில் வலிமை வாய்ந்தவர்களாக இருந்தனர். சியாங் அவர்களைச் சுற்றி வளையமிட்டு நசுக்க விரும்பினார். ஆனால் மாசேதுங்கும் சூ–என்–லாயும் தப்பியோடி 100,000 கம்யூனிஸ்டுகளுடன் 6000 மைலுக்கு அப்பால் வடசீனாவில் உள்நாட்டுக்குச் சென்றார்கள். இதனை **நீண்ட பயணம்** என்று கூறுவர். வடசீனாவில் ஓர் அரசு அமைத்துக் கம்யூனிஸ்டு கொள்கைகளைப் பரப்பி வலுப்பெற்றனர்.

இரண்டாம் உலகப் போரில் சியாங்கேஷேக்கும், மாசேதுங்கும் சீனாவை ஆக்கிரமித்த ஜப்பானுடன் போரிட்டனர். இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஜப்பான் தோற்கடிக்கப்பட்டுச் சீனாவை விட்டு விரட்டப்பட்டது. இனி, சீனாவின் சியாங்கே ஷேக்குக்கும் கம்யூனிஸ்டு கட்சிக்கும் போட்டி நடந்தது. உள்நாட்டுப் போர் மூண்டது. அமெரிக்கா கம்யூனிஸ்டுகளை ஒழிக்க சியாங்கிற்கு உதவியது. ஆனால் சியாங் படை தோற்கடிக்கப்பட்டது. சியாங் சீன நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டு **பார்மோஸா தீவில்** தேசிய அரசை நிறுவினார். கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களான மா-சே-துங்கும், சூ–என்–லாயும் சீனா முழுவதும் தங்கள் கட்சியின் ஆதிக்கத்தை நிறுவினர். 1949ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முதல் தேதி பீகிங்கில் கம்யூனிஸ்டு அரசு பதவி ஏற்றது. 1976-ல் மாசேதுங் இறந்தார். அவருக்குப் பின் கம்யூனிஸ்டு அரசியல் தலைவர்கள் கூட்டாகஆட்சிசெய்து வருகின்றனர். **பார்மோஸா** அல்லது **தைவான்** தீவில் சியாங் ஷேக்கின் மைந்தர் சர்வாதிகாரியாக ஆட்சி செய்து வருகிறார்.

இன்று கம்யூனிஸ்டு சீனா ஒரு வல்லரசு ஆக விளங்குகின்றது. அது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் ஓர்

உறுப்பினர் நாடாக இருப்பதுமல்லாமல், பாதுகாப்புச் சபையின் ஒரு நிரந்தர உறுப்பினராகவும் செயலாற்றி வருகின்றது.

(இ) ரஷ்யப் புரட்சி *(கி. பி. 1917)*

முன்னுரை

சோஷலிசக் கொள்கைகளை நிலைநிறுத்தியவர்கள் பிரெஞ்சுத் தத்துவ மேதைகள் ஆவர். அவர்கள் சொத்துரிமைகள் தனி மனிதனின் தேவைக்குப் பயன்படுவதை விடச் சமுதாயத்திற்குப் பயன்படுவதே சாலச் சிறந்தது எனக் கருதினர். கி. பி. 1848ஆம் ஆண்டு **காரல் மார்க்ஸ்** என்ற ஜெர்மானியரும் அவருடைய தோழர் **எங்கெல்ஸும் கம்யூனிசக் கொள்கை அறிக்கையை** வெளியிட்டனர்: "முதலாளித்துவத்தை ஒழித்துப் பொதுவுடைமைக் கொள்கையை நிலைநாட்ட விழையும் கம்யூனிஸ்டு புரட்சியைக் கண்டு ஆட்சியாளர்கள் நடுங்க வேண்டும் என்றும், தொழிலாளர்கள் தங்கள் அடிமைத் தளையைத் தளர்ப்பதற்குப் புரட்சியைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்றும், புரட்சி உலகத்தையே வெல்லும், எல்லா நாட்டின் தொழிலாளர்களும் ஒன்றுபடுக" என அறைகூவினர். இக்கருத்துகள் ரஷ்யாவில் ஆழமாக வேரூன்றி ஒரு பேரியக்கமாக 1917-ல் உருவெடுத்தது.

i. புரட்சியின் காரணங்கள்

ஐரோப்பாவின் பெரும்பகுதியில் பொருளாதாரம், அரசியல் முதலியவற்றில் முன்னேறி வந்த காலத்தில் ரஷ்யா மிகவும் பின்தங்கி இருந்தது. **சார்** மன்னரின் சர்வாதிகார ஆட்சியில் உழவர்கள் மிகவும் துன்பப்பட்டனர். நில உரிமையாளர்களின் கொடுமை குடியானவர்களால் பொறுக்க முடியாததாக இருந்தது. தொழிற்புரட்சி ரஷ்யாவில் மிக மெதுவாகவே உருவானது. அது தொடங்கிய காலத்தில் பல தொழிற்சாலைகள் அயல்

நாடுகளின் கையில் இருந்தன. தொழிற்சாலைகள் ரஷ்யா வின் முதலாளிகள் கையில் இருந்தாலும், அயல்நாட்டு முதலாளிகள் கையில் இருந்தாலும் தொழில் சூழல் கடினமாகவும் கேவலமாகவும் இருந்தது. ரஷ்யத் தொழி லாளர்களுக்குத் தங்கள் அடிமைத் தளைகளை இழப்பதை விட வேறொன்றும் இழப்பதற்கில்லை என்ற காரல் மார்க்ஸின் சொல் மிகவும் பொருத்தமாகவே அமைந்தது.

மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகிய கம்யூனிஸ்டு தலைவர் களுக்குப் பிறகு **லெனின்** ஒரு சிறந்த கம்யூனிஸ்டு தலை வராக முன்வந்தார். ரஷ்யப் புரட்சிக்கு முக்கிய காரணமாக இருந்தவர் லெனின் ஆவார். இவர் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். சட்டப் படிப்பு முடித்து வழக் கறிஞராகப் பணி யாற்றினார். அவர் புரட்சி மனப்பான்மை உடையவர். அரசியலில் புகுந்து நாட்டின் முன்னேற்றத்தில் முழுக் கவனத்தையும் செலுத்தி வந்தார். அவர் காரல் மார்க்ஸின் புரட்சிக் கொள்கைகளைக் கடைப்பிடித்துச் செயலாற்றின படியால் அவர் நாடு கடத்தப்பட்டு சுவிட்ஜர்லாந்தில் தங்கியிருந்தார்.



படம் 37. லெனின்

முதல் உலகப் போரில் ரஷ்யா படுதோல்வி அடைந் தது. அதற்குக் காரணம் சார் அரசாங்கத்தின் திறமை யின்மை என்று மக்கள் உணர்ந்து, அந்த அரசை ஒழிக்க முற்பட்டனர். இதைப் பயன்படுத்தி லெனின் சுவிட்ஜர் லாந்திலிருந்து ரஷ்யாவுக்கு வந்து புரட்சியை நடத்தி னார். இவ்வாறு லெனின் 1917ஆம் ஆண்டு ரஷ்யப் புரட்சியின் தலைவரானார்.

ii. புரட்சியின் போக்கு

புரட்சியினர் 1917ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் தேதி சார் மன்னரை எதிர்த்தனர். **பெட்ரோகார்டில்** மாபெரும் வேலை நிறுத்தத்தைச் செய்தனர். மன்னர், அந்த போராட்டத்தைத் தம்மால் அடக்கமுடியாது எனக் கண்டு கொண்டதால் தம் பதவியை விட்டு விலகினார். **கெரன்ஸ்கி** என்பவர் தலைமையில் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டது. ஆனால், கெரன்ஸ்கியால் சிறிய பிரச்சினைகளைக்கூடத் தீர்க்க முடியவில்லை. தொழிலாளர்கள் வேலை செய்ய மறுத்தனர். போர் வீரர்கள் போர் செய்ய மறுத்தனர். இத்தகைய குழப்பச் சூழ்நிலையில் நாட்டைச் செவ்வனே நடத்த ஒரு வலிமையான தலைவர் தேவைப்பட்டார். அவரே லெனின். அவர் கெரன்ஸ்கி அரசை நீக்கினார்; தாமே அரசின் தலைவர் ஆனார். போரை நிறுத்திப் போராட்டத்தைச் சுரண்டல் காரர்களுக்கு எதிராகத் திருப்ப விரும்பினார். 1917 நவம்பரில் லெனின் ரஷ்யாவின் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

அவருடைய ஆட்சிக்குச் சில பிரபுக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். சில பிரபுக்கள் மீண்டும் முடியாட்சியை நிறுவ முயன்றபோது லெனின் பிரெஞ்சுப் புரட்சிக்காரர் களைப் போல அரச குடும்பத்தினரையும் சில பிரபுக் களையும் சிறையிலடைத்துச் சிரச்சேதம் செய்தார். தம் முடைய அரசுக்கு எதிராகத் தோன்றிய எதிர்ப்புச் சக்தி களை முறியடித்து நாட்டில் அமைதியை நிறுவினார். பல சீர்திருத்தங்களைச் செய்தார். தனிச் சொத்துரிமையை ஒழித்தார். இரயில் விமானப் போக்குவரத்துகளையும், தொழிற்சாலைகளையும் தேசியமயமாக்கிப் பெருக்கு வதற்காகத் திட்டங்களை வகுத்தார். ஆனால் தமது திட்டங்கள் வெற்றியடையுமுன் 1924-ல் காலமானார்.

லெனினின் மறைவுக்குப் பிறகு **ஸ்டாலின்** சோவியத் ரஷ்யாவுக்குத் தலைவரானார். ஸ்டாலினின் சிறந்த

சேவை என்னவெனில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங் களின் மூலம் சோவியத் ரஷ்யாவைச் சிறந்த தொழில் வள நாடாக மாற்றியதே. அடுத்தது, இரண்டாம் உலகப் போரில் அவர் துணிவுடன் எதிர்த்து ஹிட்லரைத் தோற்கடித்ததே. 1953ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் அவர் இறந்தார். அவருக்குப் பின் **மாலங்கோவ், புல்கானின்,** **குருஷ்சேவ்,** ஆகியோர் ரஷ்யத் தலைமை அமைச்சர்களாக இருந்தனர். இப்பொழுது ரஷ்யா **பிரஷ்னேவின்** தலைமையில் முன்னேறி வருகிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் ரஷ்யா மிகவும் பலம் வாய்ந்த ஒரு நாடாக விளங்குவதோடு அதன் அறிவியல் வளர்ச்சி, விண்ணியல் சாதனைகள் உலகப் புகழ் பெற்றவையாக அமைந்தன.

(ஈ) இந்திய தேசிய இயக்கம்

முன்னுரை

1857-ல் நடந்த பெரிய கலகமே பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்து நடந்த **முதல் சுதந்திரப் போராக** அமைந்தது. அது தோல்வியடைந்தபோதும் அதன் நினைவு இந்திய மக்களின் மனதில் பசுமையாக இருந்தது. பின்னால் நடந்த பல போராட்டங்களுக்கு அதுவே முன்னோடியாய் அமைந்தது.

ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியா முழுவதும் ஓர் ஆட்சியின் கீழ் வந்ததும், போக்குவரவுச் சாதனங்களின் வளர்ச்சியும், ஆங்கிலம் பொது மொழியானதும் இந்திய மக்களின் ஒருமைப்பாட்டிற்கும் தேசிய விழிப்புணர்ச்சிக் கும் காரணங்களாக அமைந்தன. மக்கள் பண்பாட்டின் மேன்மையையும் இன்றைய அவல நிலையையும் அறியவும் இவைகள் உதவின. பிறகு சமய,சமுதாய சீர்திருத்தவாதி களான **ராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, வித்யாசாகர், விவேகானந்தர்** ஆகியோரின் ஆக்கச் செயல் களும் பேச்சுகளும் நாட்டு மக்களைத் தட்டி எழுப்பின.

i. இந்திய தேசிய காங்கிரஸ்-ஆரம்ப வளர்ச்சி

கி. பி. 1885ஆம் ஆண்டு **ஏ.ஓ.ஹியூம்** இந்திய தேசியக் காங்கிரசுக்கு வித்திட்டார். அது மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் ஓர் உறவுப் பாலமாக அமையும் வகையில் அமைக்கப்பட்டது. மிக விரைவில் காங்கிரஸ் வளர்ச்சியடைந்ததோடு, மக்கள் அரசாங்கத்தில் கண்ட குறைகளை வெளிப்படுத்த உதவும் மேடையாகவும் அமைந்தது.

முதலில் இது பிரிட்டிஷ் ஆட்சியிடமிருந்து சில உரிமைகளைப் பெற விழையும் அமைப்பாக மட்டுமே இயங்கி வந்தது. **உறவின் மூலம் உரிமை பெறுதல்** என்ற காங்கிரசின் அடிப்படைக் கொள்கை 19ஆம் நூற்றாண்டின் இறுதிவரை தொடர்ந்தது.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காங்கிரஸ் **தீவிரவாதிகள், மிதவாதிகள்** என்ற இரு பிரிவினரின் தலைமையில் செயல்பட்டது. மிதவாதிகள் **கோபால கிருஷ்ண கோகலே**யின் தலைமையிலும், தீவிர வாதிகள் **பால கங்காதர திலகர்** தலைமையிலும் இயங்கினர். மித வாதிகள் 'பணிந்து கேள் பலன் கிட்டும்' என்ற வழியில் இயங்கினர். தீவிர வாதிகளோ 'விரைவில் செயல்படு விடுதலை கிட்டும்' என்றனர். 'இறைஞ்சுதல் முறை கொஞ்சமும் பயன் தராது' என்று முழங்கினர். 'சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை' என்று குரல் கொடுத்தனர்.

கர்ஸனின் வங்கப் பிரிவினை தேசிய இயக்கத்திற்கு வலுவூட்டியது. இந்திய தேசிய சபை அரசாங்கத்தை எதிர்க்கும் சபையாக மாறியது. இச்சபை அந்நிய பொருட்களை மக்கள் வாங்காதிருக்கும் பொருட்டு **சுதேசி இயக்கத்தைத்** தொடங்கியது. தீவிர வாதிகளான **திலகர், வ.உ.சி.,** முதலியோரை பிரிட்டிஷ் அரசாங்கம் சிறையிலடைத்தது. அதே சமயத்தில் மிதவாதிகளை தன்

பக்கத்தில் இழுக்க 1909-ல் **மின்டோ மார்லி சீர்த்திருத் தங்களைக்** கொண்டு வந்தது.

சிறையிலிருந்து விடுதலையடைந்த திலகர், **டாக்டர் அன்னிபெசன்ட்** 1915-ல் தோற்றுவித்த **ஹோம் ரூல் இயக்கத்திற்கு** ஆதரவு கொடுத்தார். பெசன்ட் அம்மை யாரின் முயற்சியால் தீவிரவாதிகளும் மிதவாதிகளும் ஒன்றுபட்டனர். ஆனால் 1920-ல் திலகர் மறைந்தார். அவருக்குப் பின் **மகாத்மா காந்தி** இந்திய தேசிய சபையில் முக்கிய பங்கு எடுத்துக் கொண்டார். காந்தியடிகளின் வருகை தேசிய இயக்கத்தின் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

ii. அஹிம்சைப் போராட்டம் மகாத்மா காந்தி

படம் 38. மகாத்மா காந்தி

இதுவரை நாம் பல நாடுகளில் நடந்த பலவித புரட்சிகளைப் பற்றி படித்து வந்தோம். நம் நாட்டில் விடுதலை பெற வும் சமுதாய சீர்திருத்தங் கள் ஏற்படவும் வியக்கத் தக்க, ஆனால் பலனுள்ள ஒரு புதிய புரட்சி முறை **மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி** தலைமையில் நடந் தது. தென் ஆப்பிரிக்கா வில் அவருக்கு ஏற்பட்ட அனுபவங்கள் அவருக்கு ஒரு புது வழியைக் காண் பித்தது. மனித உரிமை களை வன்முறைப் போராட்டங்களின் மூலம் இந்தியா பெற முடியாது என அவர் கூறினார். சமுதாய, அரசியல் சீர்திருத்தம் ஏற்படவேண்டுமெனில் அவை சத்தியாக்கிரகத்தினால்

(ஆன்மீக சக்தியால்) மட்டுமே ஏற்படும். புத்தர், இயேசு, ஆகியோர்களைப்போல் காந்தியடிகளும் மனிதன் தன் எதிரிகளையும் நேசிக்கக் கற்கவேண்டும்; அத்துடன் வன் முறைகளையும், ஒழுங்கின்மையையும் விடுத்து அமைதி யான முறையில் அவர்களை வெல்ல முயலவேண்டும் எனக் கூறினார்.

முதல் உலகப் போரின்போது காந்தியடிகள் தம் முடைய முழு ஒத்துழைப்பையும் பிரிட்டிஷ் அரசுக்கு கொடுத்து உதவினார். அதன் மூலம் இந்திய சுதந்திரத்தை நன்றிக் கடனாகப் பெற்றுவிடும் நோக்கத்துடன் இவ் வுதவியை அளிக்க முன்வந்தார். போர் முடிந்ததும் பிரிட்டிஷ் அரசாங்கம் படிப்படியாக இந்தியர்களுக்கு பொறுப்பாட்சி வழங்கும் நோக்கத்துடன் **மான்ட் போர்ட்** சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தது. அச்சீர்திருத்தங் களை தேசிய சபை ஏற்றுக் கொள்ளவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து எந்தவித மாறுதலும் காணப் படாததைக் கண்டு காந்தியடிகள் சுதந்திரப் போராட் டத்தை நடத்த முயற்சி எடுத்துக் கொண்டார். அவருடைய கொள்கைகள் 1919ஆம் ஆண்டு நடைபெற்ற பஞ்சாப் நிகழ்ச்சிகளின் விளைவாக வலிமையாக்கப் பட்டன.

அமிர்தசரசில் குறிப்பிடத்தக்க வருந்தத்தக்க நிகழ்ச்சி ஒன்று நடந்தது. **ஜாலியன் வாலாபாக்** என்ற பூங்காவில் சொற்பொழிவைக் கேட்கக் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான ஆயுதமற்ற மக்களின்மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. **டயர்** என்ற ராணுவ அதிகாரியின் ஆணையின் பேரில் ஆயிரக்கணக்கான மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பிரிட்டிஷார்மீது காந்தி கொண்டிருந்த நம்பிக்கை முழுவதையும் இழந் தார். விடுதலைப் போரைத்தொடங்கினார். அதன் முதல் நிலை 1920–ல் தொடங்கப்பட்ட **ஒத்துழையாமை இயக்கமாகும்**. இவ்வியக்கத்தின்படி காங்கிரஸ்காரர்கள் தங்கள் அரசு பதவிகளை ராஜினாமா செய்தனர். தம்

விருதுகளைக் கைவிட்டனர். அரசு விழாக்கள் அனைத்தினையும் ஒதுக்கினர். தங்கள் குழந்தைகளை பள்ளிகளிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் வெளியேற்றினர். நீதி மன்றத்திற்குச் செல்வதை நிறுத்தினர். மாண்ட்போர்ட் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சட்டசபைகளை பகிஷ்கரித்தனர்.

ஒத்துழையாமையை மேற்கொள்ளும் போதும் **அஹிம்சை** முறையைப் பின்பற்ற வேண்டும் என காந்திஜி வலியுறுத்தினார். ஆயினும் எல்லாவிடங்களிலும் இக் கொள்கை கடைப்பிடிக்கப்படவில்லை. **சௌரி சௌரா** என்றவிடத்தில் மக்களின் வன்முறை போராட்டத்தால் ஒரு காவல் நிலையம் கொளுத்தப்பட்டு சில காவலர்களும் மடிந்தனர். இதனால் மனம் நொந்த காந்தியடிகள் போராட்டத்தை உடனடியாக நிறுத்தினார். இந்தியா விடுதலை பெற இன்னும் பக்குவம் பெறவில்லை என நினைத்தார். ஆனால் இரக்கமற்ற பிரிட்டிஷார் காந்தியை சிறைப் படுத்தினர்.

படம் 39. ஜவஹர்லால் நேரு

ஒத்துழையாமை இயக்கத்திற்குப் பிறகு சில ஆண்டுகள் வரை விடுதலை இயக்கம் சற்று ஓய்ந்திருந்தது. பின்னர் **பண்டித ஜவஹர்லால் நேரு** தலைமையில் 1929-ல் நடந்த லாகூர் காங்கிரஸ் பூரண சுதந்திரமே தங்கள் உயிர் மூச்சு என்று தீர்மானித்தது. அதனை அடைவதற்

காக காந்தியடிகள் 1930-ல் **சட்ட மறுப்பு இயக்கத்தை** ஆரம்பித்தார். இதுவே காந்தியடிகளின் அறப்போரின் இரண்டாவது நிலையாகும்.

1930ஆம் ஆண்டு காந்தியடிகள் தம் புகழ்பெற்ற **உப்பு சத்தியாகிரகத்தைத்** தொடங்கினார். எல்லா உண விற்கும் அடிப்படைத் தேவையான உப்பின்மீது மிகுந்த வரி விதிக்கப்பட்டது. அனைவரையும் பாதிக்கும் இவ் வரியை எதிர்ப்பதன் மூலம் நாட்டு மக்களை விழித்தெழ வைக்க உப்புச் சத்தியாகிரகத்தைத் தொடங்கினார். சட்டத்தை மீறி **தண்டி** என்ற இடத்திற்கு தொண்டர் களுடன் உப்பு தயாரிப்பதற்காக கால்நடையாகச் சென் றார். இது **தண்டியாத்திரை** என அழைக்கப்பட்டது. இந்த புதிய முறை போராட்டம் நாட்டின் பல பகுதி மக்களாலும் வரவேற்கப்பட்டு நாடு முழுவதும் பரவியது. ஆயிரக்கணக்கான மக்கள் சிறைப்படுத்தப் பட்டனர்.

நாடு முழுவதும் நடந்த இப்போராட்டத்தின் வலிமையைக் கண்ட **இர்வின் பிரபு** காந்தியடிகளுடன் சமாதானத்தை வேண்டி ஓர் ஒப்பந்தம் செய்து கொண் டார். இதுவே **காந்தி இர்வின் ஒப்பந்தம்** எனப்படும். இந்த ஒப்பந்தத்தின் பயனாக உப்புச் சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டு காந்தியடிகள் இரண்டாம் வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்ள லண்டன் சென்றார். அதன் விளைவாக சில அரசியல் உரிமைகள் அளிக்கப் பட்டன. காங்கிரஸ் எட்டு மாநிலங்களில் ஆட்சியை அமைத்தது.

1939ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போர் துவங்கி யது. இந்தியத் தலைவர்களை கலந்தாலோசிக்காமலேயே இந்தியாவைப் போரில் ஆங்கிலேயர்கள் ஈடுபடுத்தினர். அதனால் காங்கிரஸ் மந்திரிசபைகள் பதவியிலிருந்து விலகின. உலகப் போரின் நெருக்கடி காலத்தில்

1942-ல் **வெள்ளையனே வெளியேறு** *என்ற இயக்கத்தை காந்தியடிகள் துவக்கி வைத்தார். இதுவே காந்தியடிகளின் அறப்போரின் மூன்றாம் நிலையாகும். காந்தியடிகளும் மற்ற அரசியல் தலைவர்களும் சிறை செய்யப்பட்டனர். நாடு முழுவதும் குழப்பங்கள் ஏற்பட்டன. பிறகு, அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். இதற்குள்* **சுபாஸ் சந்திர போஸா**ல் *அமைக்கப்பட்ட இந்திய தேசிய ராணுவப் படை இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் படையெடுத்தது. ஆனால் அப்படை வெற்றி பெறவில்லை. இரண்டாம் உலகப் போர் பிரிட்டனுக்கு வெற்றியை அளித்தது. பிரிட்டிஷ் தலைமை அமைச்சர்* **அட்லி** *ஆணையின் பேரில் ஒரு குழு இந்தியத் தலைவர்களுடன் இந்திய மக்களின் விடுதலை பற்றி ஆலோசனை நடத்த வந்தது. ஆனால் முஸ்லிம்கள் தனிநாடு வேண்டுமென அறிக்கை விடுத்தனர். உள்நாட்டுப் போர் மூண்டது. இதனைக் கண்ட இராஜப் பிரதிநிதி* **மௌண்ட் பேட்டன் பிரபு** *இந்தியாவை இருபெரும் கூறுகளாகப் பிரிக்க முடிவெடுத்தார். இந்தியா* **இந்திய யூனியன், பாகிஸ்தான்** *என்ற இரு சுதந்திர நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ஆம் தேதி நமது நாடு சுதந்திரமடைந்தது. அஹிம்சைப போராட்டத்தின் மூலம் நமக்கு விடுதலை வாங்கித் தந்த மகாத்மா காந்தியடிகளை அனைவரும் ஒருமுகமாக* **நம் நாட்டின் தந்தை** *என அழைக்கிறோம்.*

(உ) உலக சமாதானத்திற்கு முயற்சி

I. சர்வதேச சங்கம்

முதல் உலகப் போரின் விளைவாக ஐரோப்பிய மக்கள் மிகவும் துன்புற்றமையால் அவர்கள் அமைதியை விரும்பியதோடு எக்காலத்தும் போரைத் தவிர்க்கக் கூடியத் திட்டம் ஒன்றையும் தயாரிக்க ஆவல் கொண்டனர். 1919–ல் நடந்த **வேர்செய்ல்ஸ்** *மாநாட்டில் அமெரிக்க*

படம் 40. உட்ரோ வில்ஸன்

ஜனாதிபதி **உட்ரோ வில்ஸனின்** முயற்சியினால் சர்வதேச சங்கம் உருவாக்கப்பட்டது. ஆனால் அமெரிக்க செனட் இச்சங்கத்தில் சேருவதற்கு ஒப்புதல் தர மறுத்ததால் அமெரிக்க ஐக்கிய நாடு இதில் சேரவில்லை. இந்தச் சங்கத்தில் தோற்ற நாடுகளும், கம்யூனிஸ்ட் ரஷ்யாவும் உறுப்பினர்களாகவில்லை.

இந்த சங்கத்தின் உறுப்பினர்கள் நாடுகளுக்கிடையே ஏற்படும் குழப்பங்களைத் தவிர்க்கவும், இரு நாடுகளுக்கிடையே நல்ல உறவு முறையை ஏற்படுத்திக் கொள்ளவும் போரை விழைவதில்லை என ஒத்துக் கொண்டனர். ஏதாவது ஓர் உறுப்பினர் நாடு சங்கத்தின் மற்ற உறுப்பினர்களுக்கு எதிராக போரை நிகழ்த்துமேயானால் சங்கத்தின் மற்ற உறுப்பினர்கள் அவ்விதிமுறையை மீறிய நாட்டோடு வாணிக, நிதி போன்ற மற்ற உறவுகளைத் துண்டித்துக் கொள்ளவேண்டும். சிற்சில சமயங்களில் உலக அமைதிக்காக கூட்டுப் போர் தொடுத்தும் அந்நாட்டினை நேர் வழிக்குக் கொணர வேண்டும்.

இச்சங்கம் **பொதுச் சபை, செயற்குழு, தலைமை அலுவலகம்** என்ற மூன்று அங்கங்களைக் கொண்டிருந்தது. இந்தச் சங்கத்தின் தலைமைச் செயலகம் **ஜெனிவா**வில் அமைந்திருந்தது. அதன் தலைவர் **செகரட்டரி ஜெனரல்** என அழைக்கப்பட்டார்.

இந்தச் சங்கம் பல பயனுள்ள செயல்களைத் தன் காலத்தில் செய்தது. இந்தச் சங்கம் நிலையான **சர்வதேச**

நீதிமன்றத்தை ஹாலந்தின் தலைநகரான **திஹெக்** என்னுமிடத்தில் அமைத்தது. மேலும் **சர்வேதேச தொழில் நிறுவனத்தின்** மூலம் தொழிலாளிகளின் நிலையை இச் சங்கம் உயர்த்தியது.

அதன் உறுப்பினர்களிடம் ஒற்றுமையில்லாத காரணத்தால் இந்த சர்வதேச சங்கத்தின் வலிமை குறைந்தது. பின்னர் அது மறைந்தது. அதன் மறைவிற்குக் காரணங்கள்:

1. அமெரிக்கா இதில் கலந்து கொள்ளாதது ஒரு பெரிய குறையாகும்.
2. வலிமை வாய்ந்த நாடுகளான பிரான்சும், இங்கிலாந்தும், தங்கள் சொந்த கொள்கைகளைக் கடைப்பிடிக்க முயன்றன.
3. ஜப்பான், இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகள் முறையே மஞ்சூரியா, ஆஸ்திரியா, அபிசீனியா ஆகிய நாடுகளைக் கைப்பற்றிய போது சர்வதேச சங்கம் கடும் நடவடிக்கை எடுக்கவில்லை.
4. பல நாடுகள் உறுப்பினர்களாக இல்லாமையால் அது உண்மையான சர்வதேச சங்கமாக இல்லை.

II. ஐக்கிய நாடுகள் நிறுவனம்

முன்னுரை

உலகத்தில் அமைதி நிலவுவதற்கு சர்வதேச சங்கம் மூலம் எடுத்த முதல் முயற்சி தோல்வியடைந்தது என்பது நாம் அறிந்ததே. இரண்டாம் உலகப் போரின் இறுதியில் உலக அமைதியை நிறுவ அமெரிக்க ஜனாதிபதி **ரூஸ்வெல்ட்**, பிரிட்டிஷ் பிரதமர் **சர்ச்சில்**, ரஷ்யத் தலைவர் **ஸ்டாலின்** முதலிய உலகத் தலைவர்களின் முயற்சியினால் ஐக்கிய நாடுகள் நிறுவனம் அமைக்கப் பட்டது.

i. ஐ. நா. வின் நோக்கங்கள்

சுமார் 50 தலைவர்கள் உலகின் பல பகுதிகளிலிருந்தும் வந்து சான்பிரான்ஸிஸ்கோவில் சாசனம் ஒன்றை



படம் 41. ஐ. நா. ஸ்தாபனக் கட்டடம்

தயாரித்தனர். அவர்கள் தீட்டிய குறிப்பேட்டில் இவ்வமைப்பின் முக்கிய நோக்கங்கள் கீழ்க்கண்டவையாகும் என்று குறிப்பிடப்பட்டது.

1. உலக அமைதி, பாதுகாப்பு ஆகியவற்றை பராமரித்தல்.
2. கூட்டுறவை நாடுகளுக்கிடையே வளர்த்தல்.
3. பொருளாதார, கலாசார, சமூக பிரச்சினை களைத் தீர்க்க எல்லா நாடுகளின் ஒத்துழைப்பை யும் நாடுதல்.
4. மனித உரிமைகளை காப்பதற்கும், விடுதலை உணர்வை வடிப்பதற்கும் ஆக்கமளித்தல்.

ii. ஐ. நா. அமைப்பு

மேலே கூறிய கொள்கைகளை நிலைநாட்ட ஐ. நா. கீழ்காணும் அமைப்புக்களை உருவாக்கியது. அவை யாவன (1) பொதுச் சபை (2) பாதுகாப்பு கவுன்சில் (3) பொருளாதார சமுதாயக் கவுன்சில் (4) உலக நீதி மன்றம் (5) அலுவலகம்.

1. பொதுச் சபை

ஐ. நா. வில் அங்கம் வகிக்கும் நாடுகள் அனைத்தும் இதில் இடம் பெறும். இன்று 157 நாடுகள் இதில் அங்கம் வகிக்கின்றன. இந்த சபை ஆண்டுக்கு ஒரு முறை கூடு கிறது. பெரும்பாலான நாடுகளின் விருப்பப்படியும், பாது காப்புக் கவுன்சிலின் விருப்பப்படியும் சிறப்புக் கூட்டங் கள் கூட்ட இடமளிக்கப்பட்டிருக்கிறது. ஆய்வு செய்ய வேண்டிய செய்திகளை ஒவ்வொரு நாடும் இக்கூட்டத் தில் கொண்டுவரலாம். 'ஒவ்வோர் நாட்டுக்கும் ஒவ்வோர் ஓட்டு' என்ற கொள்கையின் அடிப்படையில்தான் இக் கூட்டம் நடைபெற்று வருகிறது. உலக அமைதிக்கு ஊறு விளைவிக்கும் எனக் கருதப்படும் எந்தச் செய்தி யையும் பொதுச் சபை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும். உலகநாடுகளிடையே நல்லுறவை வளர்க்க வும், மனித சமுதாயத்தின் பொதுநலத்திற்கான செயல் களை ஆராயவும் பொதுச் சபை அதிகாரம் பெற் றுள்ளது.

2. பாதுகாப்பு கவுன்சில்

இக் குழு 15 உறுப்பினர்களைக் கொண்டது. ஐந்து உறுப்பினர்கள் நிலையான இடம் பெற்றுள்ளனர். மற்றவர்கள் பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். **பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரான்ஸ், ரஷ்யா, சீனா** ஆகிய வல்லரசுகள், நிலையான இடம் பெற்றுள்ளன. தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் இரண்டு ஆண்டு காலத்திற்கு உறுப்பினராக இருப்பர்.

பாதுகாப்புக் கவுன்சிலே ஐ.நா. நிறுவனத்தின் உயிர் நாடி. உலகிலுள்ள நாடுகளிடையே நல்லுறவை வளர்ப்பதும், பிணக்கு ஏற்பட்டால் அதைத் தீர்த்து வைப்பதும், உலக அமைதியைப் பாதுகாப்பதும் இக்கவுன்சிலின் வேலையாகும். ஐந்து வல்லரசுகளும் ஒரு மனப்பட்டு செய்யும் முடிவுகளே நடைமுறைக்கு வரும். நிரந்தர உறுப்பினர்களுக்கு **வீடோ** (தள்ளுரிமை) அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே நிரந்தர உறுப்பினர்களுள் ஒரு நாடு தள்ளுரிமை அதிகாரத்தை உபயோகித்தால் ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியாது.

3. பொருளாதார சமுதாயக் கவுன்சில்

பொருளாதார நிலையே உலகச் சமாதானத்திற்கு அடிப்படையானது. உணவு, உடை, இருக்க இடம், கல்வி சுகாதார வசதிகள் ஆகியவை ஒவ்வொரு நாட்டுக்கும் கிடைக்கச் செய்தால் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். எனவே மக்களின் தேவைகளை நிறைவேற்ற ஒவ்வோர் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் அடிப்படை உரிமைகள் வழங்க ஐக்கிய நாட்டு சபை உதவவேண்டும். இந்த வேலைகளைச் செய்வதற்கு பொருளாதார சமுதாயக் கவுன்சில் அமைக்கப்பட்டது.

இதன் கீழ் பல தனிச் சிறப்பு செயலான்மை நிலையங்கள் உள்ளன. அவற்றுள் **உணவு, விவசாய நிறுவனம், அகில உலக நிதி, உலக பாங்கு, கல்வி, விஞ்ஞானம், பண்**

பாட்டு நிறுவனம், உலக சுகாதார நிறுவனம், சர்வதேசத் தொழிலாளர் நிறுவனம் முதலியன முக்கியமானவை யாகும்.

அகில உலக நிதி நிறுவனத்தின் பணிகள் நாடுகளுக் கிடையே வாணிகம் தடையின்றி நடைபெற உதவி செய் வதும், உலக பாங்குகளுக்கு பணம் கொடுத்து உதவுவதும் ஆகும். ஐக்கிய நாட்டுக் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு நிறுவனம் உலக மக்கள் அறிவு வளர்ச்சி பெறுவதற்கான திட்டங்களை வகுக்கும். உலகத்திலுள்ள அரிய நூல்கள், கலைச்சின்னங்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பதும் இந்த நிறுவனத்தின் நோக்கமாகும். உலக சுகாதார நிறுவனம் உலக மக்களின் சுகாதாரத் தைப் பேணுகிறது.

4. உலக நீதி மன்றம்

நாடுகளுக்கிடையே ஏற்படும் சச்சரவுகளைத் தீர்க்க உலக நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் 15 நீதிபதிகள் உள்ளனர். அவர்கள் அனைவரும் சிறந்த சட்ட வல்லுநர்கள். அவர்கள் ஒன்பது ஆண்டுக்காலம் பதவியில் இருப்பார்கள். இம்மன்றம் ஹாலந்து நாட்டில் உள்ள **திஹேக்** என்னுமிடத்தில் உள்ளது.

5. அலுவலகம்

ஐ. நா. வின் நோக்கங்கள் செவ்வனே நடைபெற ஒரு சீரிய அலுவலகம் **நியூயார்க்** நகருக்கருகாமையில் நிறுவப் பட்டுள்ளது. இதன் தலைமை அலுவலர் **பொதுச் செய லாளர்** (செகரட்டரி ஜெனரல்) எனப்படுவார். இப் போதைய பொதுச் செயலாளர் **ஜாவியர் –பீரிஸ்–டி–கியூலார்** ஆவார்.

iii. ஐ. நா. வின் சாதனைகள்

1. இந்தோனேஷியாவில் போரை நிறுத்தி, டச்சுப் படைகளை வெளியேறச் செய்து அந் நாட்டை சுதந்திர நாடாக்கியது.

2. வட கொரியா, தென் கொரியா ஆகியவற்றிற்கிடையே நடந்த போரை நிறுத்தியது.

3. இந்தோ—சீனா போரை நிறுத்தியது.

4. பிரிட்டனும், பிரான்சும் 1956–ல் சூயஸ்கால்வாயில் ஆக்கிரமித்தபோது அதை நிறுத்தியது.

5. காங்கோ, சைப்ரஸ், ஆகிய நாடுகளில் உள்நாட்டுக் குழப்பங்கள் நடந்தபோது, ஐ. நா. நிறுவனம் படைகளை அனுப்பி அமைதியை நிலைநாட்டியது.

6. சமீபத்தில் இஸ்ரேல், அரபு நாடுகளின் போரை ஐ. நா. நிறுத்தியுள்ளது.

7. பொருளாதாரம், சமூகம் ஆகிய துறைகளில் பல அரிய செயல்களை தனிச் சிறப்பு செயலாண்மை நிறுவனங்கள் வாயிலாக ஐ. நா. செய்து வருகிறது.

(ஊ) இரண்டாம் உலகப் போருக்குப் பின் தோன்றிய ஆசிய, ஆப்பிரிக்க சுதந்திர நாடுகள்

முன்னுரை

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பியர் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் தங்கள் பேரரசுகளை நிறுவினர். அப்பேரரசில் இருந்த அந்நாட்டு மக்கள் ஐரோப்பிய ஆதிக்கத்தின் கீழ் சுதந்திரமின்றி வாழ்ந்தனர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆசிய ஆப்பிரிக்க மக்களிடையே தேசிய ஒருமைப்பாடு வளர்ந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஐரோப்பிய நாடுகள் வலிமையிழந்தன. அவர்களுடைய மேற்பார்வையில் இந்நாடுகளை அவர்களால் நிர்வகிக்க முடியவில்லை. பெரும்பான்மையான ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் கடந்த ஐம்பதாண்டுகளாக விடுதலை பெற்று விளங்குகின்றன.

(அ) ஆசிய நாடுகள்

i. இந்தியா

இரண்டாம் உலகப் போருக்குப்பின் ஆகஸ்டு 15, 1947-ல் நம்நாடு காந்தியடிகளின் முயற்சியினால் சுதந்திர மடைந்தது எனக் கண்டோம். விடுதலை பெற்றதும் நம் நாட்டுக்கு ஒரு அரசியல் சட்டத்தை நாமே வகுத்துக் கொண்டோம். 1950ஆம் வருஷம், ஜனவரி மாதம், 26ஆம் தேதி இந்த அரசியல் சட்டம் அமுலுக்கு வந்தது. ஒவ்வொரு வருஷமும் அந்த நாளைக் **குடியரசு தினமாக** கொண்டாடுகிறோம். சுதந்திர இந்தியாவுக்கு முதலில் **மௌண்ட்பேட்டன்** பிரபு கவர்னர் ஜெனரலாக இருந்தார். பின்னர், **இராசகோபாலாச்சாரியார்** கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். 1950 ஜனவரி மாதம் 26ஆம் தேதியி லிருந்து இந்தியா குடியரசு நாடாயிற்று. இந்தியக் குடியரசின் முதல் தலைவர் **டாக்டர் இராசேந்திர பிரசாத்** ஆவார். அவருக்குப் பின் **டாக்டர் இராதாகிருஷ்ணனும், டாக்டர் ஜாகிர் ஹுசேனும், பக்ருதின் அலி அகமதுவும், வி. வி. கிரியும்** குடியரசுத் தலைவர்களாக பணியாற்றி னார்கள். தற்போது திரு **நீலம் சஞ்சீவிரெட்டி** குடியரசுத் தலைவராக விளங்குகிறார்.

நமது நாடு விடுதலை அடைந்ததிலிருந்து 17 ஆண்டு காலம் **ஜவகர்லால் நேரு** பிரதம மந்திரியாக இருந்து நாட்டுக்குச் சிறந்த பணிகள் செய்துள்ளார். அவருக்குப் பின் **லால்பகதூர் சாஸ்திரி** ஒரு ஆண்டுக்கு மேல் பிரதம மந்திரியாக இருந்தார். பிறகு திருமதி **இந்திராகாந்தி** பிரதம மந்திரியாக பணியாற்றினார். அவருக்குப்பின் **மொரார்ஜி தேசாயும், சரண்சிங்கும்** பிரதமர்களாகப் பணி யாற்றினர். பின்னர் மீண்டும் இந்திராகாந்தி பிரதம ரானார்.

விடுதலை அடைந்ததிலிருந்து நமது நாடு பல துறை களிலும் முன்னேற்றம் கண்டிருக்கிறது. நமது நாட்டுக்கு

இந்திய அரசியல் நிர்ணய சபை ஒரு சிறந்த அரசியல் திட்டத்தை வகுத்துள்ளது. நமது நாடு ஒரு முழு நிறை வான ஜனநாயகக் குடியரசு நாடாகும். இது சமய சார்பற்றது. சுதந்திரம் அடைந்தவுடன் இந்தியாவின் **இரும்பு மனிதர், இந்திய பிஸ்மார்க்**, என்ற சிறப்புப் பெயர்களைக் கொண்ட **சர்தார் படேல்** இந்திய சிற்றரசர் கள் ஆளுகைக்கு உட்பட்ட இராச்சியங்கள் பலவற்றை இந்தியக் குடியரசுடன் இணைத்தார். பின்னர் இந்தியா வில் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டன.

இந்தியாவின் அயல்நாட்டு இயல்முறை போற்றத் தக்கது. இந்தியா ஐ. நா. வின் ஓர் உறுப்பு நாடாகும். ஐ. நா. வின் நோக்கங்கள் வெற்றி பெற சிறந்த முறை யில் பணியாற்றி வருகிறது. உலக வல்லரசுப் போட்டி களில் தலையிடாமல், நடுநிலைமை வகித்து வருகிறது.

ii. பாகிஸ்தான்–பங்களாதேஷ்

இந்தியாவிலிருந்து மௌண்ட்பேட்டன் திட்டத்தின் கீழ் பிரிக்கப்பட்ட பகுதிதான் **பாகிஸ்தான்** ஆகும். அதில் கிழக்கு வங்காளம், மேற்கு பஞ்சாப் வடமேற்கு எல்லைப்புற மாகாணம், சிந்து, பலுசிஸ்தானம் ஆகிய மாநிலங்கள் அடங்கியிருந்தன. பாகிஸ்தானின் முதல் கவர்னர் ஜெனரல் **முகம்மது அலி ஜின்னா** ஆவார். பிறகு பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு ஆயிற்று. முகம்மது அலி ஜின்னாவுக்குப் பின் பாகிஸ்தானில் அரசியல் வாதி களிடையே பூசல்கள் ஏற்பட்டதால் இராணுவ ஆட்சி அமைக்கப்பட்டது. பாகிஸ்தான் குடியரசின் தலைவராக **யாகியாகானும்**, கிழக்கு வங்காளத்தில் **முஜ்பூர் ரஹ்மானும்** தலைமை வகித்தனர். முஜ்பூர் ரஹ்மான் தலைமையி லிருந்த கட்சி வலுத்தது. அதை அடக்க யாகியாகான் இராணுவத்தை அனுப்பினார். போர் மூண்டது. போரில் முஜ்பூர் ரஹ்மானுக்கு இந்தியா உதவியது. பாகிஸ்தான் தோல்வியடைந்தது, கிழக்கு வங்காளம், **பங்களாதேஷ்** என்ற பெயரில் சுதந்திர நாடாயிற்று.

முஜ்பூர் ரஹ்மானே அதன் தலைவராக விளங்கினார் இப்பொழுது பாகிஸ்தான் நாட்டில் மேற்கு பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புறமாகாணம், சிந்து,பலுசிஸ்தானம் ஆகியவை மட்டுமே அடங்கியுள்ளன.

பங்களாதேஷின் தந்தையாக முஜ்பூர் ரஹ்மான் விளங்கினார். பங்களாதேஷில் ஏற்பட்ட புரட்சியின் காரணமாக முஜ்பூர் ரஹ்மான் கொல்லப்பட்டார் இராணுவ ஆட்சி நடைபெற்றது. **ஜியாஉர் ரஹ்மான்** என்பவர் புரட்சி செய்து இதன் தலைவரானார். ஆனால் அவரும் பின்னர் கொல்லப்பட்டார்.

iii. பர்மா

இந்தியாவின் கிழக்கே அமைந்துள்ள பர்மா 1937 வரை பிரிட்டிஷ் இந்தியாவின் ஒரு மாகாணமாக இருந்தது. 1937ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டது. ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து வந்தது. இருபதாம் நூற்றாண்டில் பர்மியர்களும் சுதந்திரம் வேண்டுமென தேசியப் போராட்டத்தைத் துவக்கினர். அவர்கள் இந்திய தேசியப் போராட்டத்துடன் கலக்கவில்லை. ஏனெனில் அவர்கள் தனி சுதந்திர நாட்டை விரும்பினர்.

ஜப்பானியர்கள் இரண்டாம் உலகப் போரின்போது பர்மாவைக் கைப்பற்றினர். சுமார் மூன்று ஆண்டுக் காலம் பர்மா மிகவும் துன்புற்றது. இந்தப் போரின்போது பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையே நடந்த போரின் போர்த்தளமாக இது விளங்கியது. பல நகரங்கள் குண்டு வீச்சினால் அழிக்கப்பட்டன. வியாபாரம் பரிபூரணமாக நாசமாக்கப்பட்டது.

ஜப்பானியர்களின் தோல்விக்குப் பிறகு பிரிட்டிஷார் மறுபடியும் பர்மாவை 1945ஆம் ஆண்டு கைப்பற்றினர். ஆனால் பர்மியர் முழுமையாக எந்த அயல்நாட்டினர் தலைமையிலும் வாழ விரும்பவில்லை. பிரிட்டிஷார் இனி

வெகுகாலம் பர்மாவைத் தன் கைப்பிடியில் வைத்திருக்க இயலாது என்று உணர்ந்து 1948ஆம் ஆண்டு அதற்கு விடுதலை அளித்தனர். பர்மாவும் ஒரு சுதந்திர நாடானது.

iv. ஸ்ரீலங்கா

இரண்டாம் உலகப் போருக்குப் பின் இந்தியாவைப் போலவே ஸ்ரீலங்கா சுதந்திரமடைந்தது. இலங்கைத் தீவில் பல தேர்தல்கள் நடந்து, சமீபத்தில் **ஜயவர்த்தனே** தலைமையில் உள்ள கட்சி வெற்றியடைந்தது. அவரே ஸ்ரீலங்கா குடியரசுத் தலைவராக விளங்குகிறார். நம் நாட்டு அரசியல் முறை பார்லிமெண்ட் அல்லது காபினெட் முறையாகும். பிரதம மந்திரிக்குத்தான் அதிகாரம் அதிகம். குடியரசுத் தலைவர் பிரதம மந்திரி யின் ஆலோசனையின்படி செயல்படவேண்டும். ஆனால் இலங்கையில் குடியரசுத் தலைவருக்குத்தான் அதிகாரம் அதிகம். அங்கு ஜனாதிபதி முறை ஜனநாயகம் செயல் பட்டு வருகிறது.

v. இந்தோனேஷியா

ஆசியாவின் தென்கிழக்கே அமைந்துள்ள தீவுகளுள் இந்தோனேஷியாவும் ஒன்று. இத்தீவுகள் **கிழக்கு இந்தியத் தீவுகள்** என அழைக்கப்படுகின்றன, டச்சுக் காரர்கள் 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் இத் தீவுகளைக்கைப்பற்றி இருந்தனர். முதல் உலகப் போருக்குப் பின் அவர்களுக்கு அயல் நாட்டினர் கீழ் வாழ திருப்தியற்ற தன்மை மேலோங்கியது. அதன் விளைவே தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஏது வாக அமைந்தது. ஜப்பானியர்கள் நேச நாடுகளை 1942ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போரில் வென்ற போது, இந்தோனேசியாவிலும் டச்சுக்காரர்கள் ஆதிக்கம் ஒரு முடிவுக்கு வந்தது. ஜப்பானியர்கள் 'ஆசியா ஆசிய மக்களுக்கே' என்ற கோஷம் எழுப்பி, மக்கள்

மனதில் சுதந்திர உணர்ச்சியை வித்திட்டனர். ஜப்பானி யர்களின் உதவியால் இந்தோனேசியா ஒரு தேசிய அரசாங்கத்தை அமைத்தது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் டச்சு அரசு மறுபடியும் இந்தோனேஷியாவைக் கைப்பற்ற எண்ணி யது. இந்தோனேஷியர்கள் டாக்டர் **சுகர்னோ** என்பவர் தலைமையில் விடுதலைப் போராட்டத்தைத் துவக்கினர். டச்சுக்காரர்கள் எளிதில் அவர்களுக்கு சுதந்திரம் அளிக்க முன்வரவில்லை. மிகுந்த போராட்டத்திற்குப் பிறகு 1949-ல் டச்சு, இந்தோனேஷியா சுதந்திர நாடு என ஏற்றுக் கொள்ளமுன்வந்தது. இந்த போராட்டத்திற்கு தலைமை வகித்த டாக்டர் சுகர்னோ சுதந்திர இந்தோ னேஷியாவிற்கு அதிபரானார். பின்னர் சுகர்னோ பதவி யிலிருந்து விலக்கப்பட்டு **சுகர்தா** என்பவரின் கீழ் இராணுவ ஆட்சி நடந்து வருகிறது.

vi. இந்தோ-சீனா

மஞ்சுப் பேரரசிடமிருந்து 19ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ் இந்தோ சீனாவைப் பெற்றது. இரண்டாம் உலகப் போரின் முடிவில் பிரான்ஸிடமிருந்து இந்தோ சீனா விடுதலையடைந்தது. **லாவோஸ், கம்போடியா,** அல்லது **கம்பூச்சியா, வியட்நாம்** ஆகிய பகுதிகள் இந்தோ சீனாவில் அடங்கியுள்ளன. வியட்நாம் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 17° அட்சரேகைக்கு வடக்கே வட வியட் நாமும், தெற்கே தென் வியட்நாமும் அமைக்கப்பட்டன. வட வியட்நாமில் கம்யூனிஸ்ட் அரசாங்கம் இருந்தது. தென் வியட்நாமில் அமெரிக்கா நாட்டின் நல்லுறவு கொண்ட ஆட்சி நடந்தது. தென் வியட்நாமுக்கு எதிராக **வியட்காங்** என்ற கட்சி தோன்றி, அரசாங்கத்தைக் கைப் பற்ற முயன்றது. இதற்கு கம்யூனிஸ்ட் வடவியட்நாம் அரசாங்கம் உதவியது. இதனால் அமெரிக்கா தென் வியட் நாமுக்கு விமானப்படை அனுப்பி உதவி செய்தது.

அமெரிக்கப் படையின் குண்டு வீச்சுகள் **வியட்நாமை** நாசமாக்கின. ஆனால் வியட்நாம் போர் நிற்கவில்லை. அமெரிக்க ஜனாதிபதி **நிக்ஸன்** உலக நாடுகளின் விருப்பத்திற்கு இணங்கி, தமது படைகளைத் திருப்பி அழைத்துக் கொண்டார். அமெரிக்கப் படை வாபஸானதும் வியட்காங் படை தென் வியட்நாமைக் கைப்பற்றியது. பின்னர் இரண்டு வியட்நாம்களும் இணைந்தன. ஒன்றுபட்ட வியட்நாமின் தலைநகர் **ஹோசிமின்** நகர் ஆகும். ஒன்றுபட்ட வியட்நாம் வலிமைமிகுந்த கம்யூனிஸ்ட் நாடாக தென்கிழக்கு ஆசியாவில் விளங்குகிறது.

vii. பிலிப்பைன் தீவுகள்

1934ஆம் ஆண்டு அமெரிக்கா பிலிப்பைன் தீவுகளுக்கு சுதந்திரம் வழங்க ஒரு திட்டம் வகுத்தது. இரண்டாம் உலகப் போரின் காரணமாக அத்திட்டம் தடைப்பட்டது. உலகப் போரில் ஜப்பான் அத்தீவுகளைக் கைப்பற்றியது. ஆனால் அமெரிக்க தளகர்த்தர் **மக்கார்தர்** பிலிப்பைன் தீவுகளை வென்றார். 1946-ல் அமெரிக்கா, பிலிப்பைன் தீவுகளுக்குச் சுதந்திரம் வழங்கியது. பிலிப்பைன்ஸ் குடியரசு நாடாக விளங்குகிறது.

viii. கொரியா

1894-1895ல் நடந்த சீனா-ஜப்பான் போரின் இறுதியில் சுதந்திரம் அடைந்த கொரியா, 1904-1905ல் நடந்த ரஷ்ய-ஜப்பான் போரின் முடிவில் ஜப்பானியப் பேரரசுடன் இணைக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் கொரியா சுதந்திர நாடாயிற்று. அந்நாட்டில் 38° அட்சரேகைக்கு வடக்கில் கம்யூனிஸ்டு அரசாங்கமும் தெற்கில் அமெரிக்க ஆதரவுள்ள அரசாங்கமும் முறையே ஏற்பட்டன. இரண்டு அரசுகளும் அடிக்கடி சண்டையிட்டு வந்தன. 1951ஆம் ஆண்டில் வடகொரியப் படைகள் தென் கொரியாவைத் தாக்கின. அப்போர் உலகப் போராக மாறாதபடி ஐ. நா. தடுத்தது. இன்றும் கொரியா இரு

பகுதிகளாகவே விளங்குகின்றது. வடகொரியாவின் தலைநகர் **பியாங்யாங்கு.** தென் கொரியாவின் தலைநகர் **சியோல்.**

ix. இஸ்ரேல்

முதல் உலகப் போரின் முடிவில் பாலஸ்தீனம் துருக்கி பேரரசிலிருந்து விடுவிக்கப்பட்டு பிரிட்டிஷ் மாண்டேட் நாடாயிற்று. பல பகுதிகளிலிருந்தும் யூதர்கள் இங்கு வந்து குடியேறினர். இரண்டாம் உலகப் போர் முடிந்ததும் அமெரிக்கா, பிரிட்டன் இவற்றின் ஆதரவுடன் பாலஸ்தினம், **இஸ்ரேல், ஜோர்தான்,** என்ற இரு சுதந்திர நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. இஸ்ரேல் யூதக் குடியரசு நாடு, ஜோர்தான் அராபியக் குடியரசு நாடு.

யூதரின் குடியேற்றத்தால் நாடிழந்த பாலஸ்தீனர் குமுறினர். எனவே அரேபிய நாடுகள் இஸ்ரேலை ஏற்றுக் கொள்ளவில்லை. அடிக்கடி அவற்றிற்கும் இஸ்ரேலுக்கும் போர்கள் நடந்தன. 1967ல் நடந்த போரில் ஆறே நாட்களில் இஸ்ரேல் படை அரேபியப் படைகளை முறியடித்து அநேக அரேபியப் பகுதிகளை வென்றது. மறுபடியும் 1973ஆம் ஆண்டு இரண்டு வாரங்கள் போர் ஏற்பட்டது. ஐ.நா.வின் முயற்சியால் இப்போர் நிறுத்தப்பட்டது. இப்பொழுது எகிப்திற்கும், இஸ்ரேலுக்கும் சமாதானப் பேச்சுக்கள் நடந்து வருகின்றன. ஆனால் மற்ற அரேபிய நாடுகள் இஸ்ரேலை ஒழிக்க முயலுகின்றன.

x. மலேசியா–சிங்கப்பூர்

மலேயாவும், சிங்கப்பூரும் முன்பு பிரிட்டிஷ் பேரரசில் இருந்தன. இரண்டாம் உலகப் போருக்குப் பின் பிரிட்டன் அவற்றிற்கு சுதந்திரம் அளித்தது. மலேயா ஒரு முடியாட்சி நாடாயிற்று. அங்கு பரம்பரை சுல்தான்கள் வம்சத்தில் வந்த ஒருவர் பெயரளவில் மன்னராக இருக்கிறார். உண்மையான அதிகாரம் பிரதமரிடம் உள்ளது.

மலேயாவின் புதிய பெயர் **மலேசியா**. ஏனெனில் இதில் **மலேயா, சாரவாக், சாபா** ஆகிய பகுதிகள் அடங்கியுள்ளன.

சிங்கப்பூர் மலேயாவிலிருந்து பிரிந்து தனித்து இயங்கும் ஒரு நகரக் குடியரசு. இது இந்துப் பெருங்கடலையும், பசிபிக் பெருங்கடலையும், இணைக்கும் துறைமுகமாக இருப்பதால் செல்வம் மிகுந்த நகரமாக பிரகாசிக்கிறது.

(ஆ) ஆப்பிரிக்க நாடுகள்

இரண்டாம் உலகப் போர் ஆப்பிரிக்க தேசியப் போராட்டத்திற்கு ஊக்கமளித்தது. வட ஆப்பிரிக்க நாடுகள் போரின்போது போர்த்தளங்களாக உதவின. ஐரோப்பியர்கள் எளிதில் வெல்லத்தக்கவர்களே என்பதை ஆப்பிரிக்கர் கண்டனர். ஐரோப்பியர்களிடம் ஆப்பிரிக்கர் கொண்டிருந்த அச்சம் முழுவதும் அகன்றது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் சுதந்திரமடைந்த நாடுகளான இந்தியா, பர்மா, ஸ்ரீலங்கா ஆகியவற்றைக் கண்டு ஆப்பிரிக்க நாடுகள் விழிப்புணர்ச்சி பெற்றன.

ஆப்பிரிக்காவின் பல நாடுகளும் பரவலாக உலகப் போருக்குப் பின் அமைதியற்றனவாகக் காணப்பட்டன. பரவலாக அதிருப்தியும் சுதந்திரத்தை முன்னிட்டு போராட்டங்களும் ஆப்பிரிக்காவின் பல இடங்களிலும் நடைபெற்றன. ஐரோப்பிய நாடுகள் இவற்றை தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக் கொள்ள பயனற்ற பல முயற்சிகளைச் செய்தன. இதனால் குழப்பங்களும், கலகங்களும் இரத்தம் சிந்துதலும் ஏற்பட்டன. கடைசியாக எல்லா நாடுகளும் விடுதலை அடைந்தன. ஆப்பிரிக்காவில் தற்போது ஏறத்தாழ 50 சுதந்திர நாடுகள் உள்ளன. **எகிப்து, சூடான், கானா, மொராக்கோ, அல்ஜீரியா, காங்கோ அல்லது ஜெயர், தான்சேனியா, நைஜீரியா, கென்யா, உகாந்தா, சோமிலியா** ஆகியவை சில குறிப்பிடத்தக்க ஆப்பிரிக்க நாடுகளாகும்.

பிரிட்டனே முதன் முதலில் இருண்ட ஆப்பிரிக்கா வில் இருந்த நாடுகளுக்கு விடுதலை அளிக்க முன் வந்தது. கி. பி. 1957ல் **கானாவிற்கு** விடுதலை அளித்தது. கானா ஒரு முன்னேற்றமடைந்த நீக்ரோ நாடு. கி. பி. 1957ல் கானா மற்ற ஐரோப்பிய நாடுகளுடன் சமவுரிமையை வேண்டி ஐ.நா. நிறுவனத்தின் ஓர் அங்கமானபோது முழு ஆப்பிரிக்காவுமே மகிழ்ச்சி அடைந்தது. 1960ல் **நைஜீரியா** சுதந்திரமடைந்தது. இதுவும் ஐ.நா.வின் ஓர் அங்கமாக மாறியது. கி. பி. 1963-64ல் **தான்சேனியாவும், கென்யாவும், ஸாம்பியாவும்** விடுதலையடைந்தன.

பிரிட்டிஷ் டொமினியனான **தென் ஆப்பிரிக்கா** யூனியன் இனவெறிக் கொள்கை கொண்டு வெள்ளையருக்கு மட்டும் உரிமைகளை அளித்து நீக்ரோக்களை இரண்டாம்தர குடிமக்களாக நடத்தி வருகிறது. இதனை பிரிட்டனும், ஐ.நா.வும் ஒத்துக் கொள்ளாததால் தென் ஆப்பிரிக்கா யூனியன் பிரிட்டிஷ் காமன் வெல்த்திலிருந்து பிரிந்துதான் சுதந்திர நாடு என அறிவித்தது.

பிரிட்டனைப் பின்பற்றி பிரான்சும் தன் ஆதிக்கத்திலிருந்து ஆப்பிரிக்க நாடுகளை விடுவிக்க முன்வந்தது. **பிரெஞ்சு காங்கோ குடியரசு, பிரெஞ்சு மேற்கு ஆப்பிரிக்கா, நைகர், செனிகல்**, மடகாஸ்கர் (தற்போது வழங்கப்படும் பெயர் **மலகாசி**) ஆகியவை சுதந்திரமடைந்தன.

வடஆப்பிரிக்காவில் உள்ள அல்ஜீரியா பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. **ஜெனரல் டிகால் பிரான்ஸின்** பிரதமரானபோது அல்ஜீரியாவுக்கு 1962-ல் விடுதலை அளித்தார்.

பெல்ஜியத்தின் ஆதிக்கத்தில் இருந்த காங்கோ 1960ல் விடுதலை அடைந்து ஐ.நா.வின் ஓர் அங்கமாக இணைந்தது. ஆனால் விடுதலை அடைந்த காங்கோவில் உள்நாட்டுப் போர் நடந்தது. அமைதியை நிலைநிறுத்த ஐ. நா. நிறுவனம் ஒரு படையை அனுப்பியது. இப்பொழுது காங்கோ குடியரசு நல்ல முறையில் இயங்கி வருகிறது.

இனவெறி அடிப்படையில் இயங்கி வந்த **ரோடீஷியா** நாட்டில் பிரிட்டனின் முயற்சியினால், தேர்தல்கள் நடத்தப்பட்டன. ஆப்பிரிக்கர்கள் தேர்தலில் வெற்றி யடையவே நாட்டின் ஆட்சி உரிமை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இன்று ரோடீஷியா, **ஸிம்பாப்வே** என்னும் பெயரில் சுதந்திர நாடாக ஆப்பிரிக்கத் தலைவர்கள் தலைமையில் இயங்கி வருகிறது.

இனவெறி, வறுமை, கல்வியின்மை போன்ற சிக்கல் களில் சிக்கித் தவிக்கும் ஆப்பிரிக்கநாடுகள் பெரும் பாலும் இராணுவ ஆட்சியின் கீழேயே செயல்பட்டு வருகின்றன.

வினாக்கள்

I. **கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. இந்திய தேசியக் காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு————
2. காங்கிரசில் தோன்றிய பிளவினால் ஏற்பட்ட இரு பிரிவுகள்——,——.அவற்றின் தலைவர்கள் முறையே ——,——
3. காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கிய ஆண்டு————
4. காந்தியடிகள் உப்புச் சத்தியாக்கிரத்தை மேற்கொண்ட இடம்————
5. "வெள்ளையனே வெளியேறு" இயக்கம் நடைபெற்ற ஆண்டு————
6. சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல்——
7. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர்————
8. நம் நாடு——ஆம் ஆண்டு———மாதம்———ஆம் தேதி குடியரசு நாடாகியது.
9. இந்தியாவின் "இரும்பு மனிதர்" எனப்பட்டவர்——
10. சர்வதேச சங்கம்——என்பவர் முயற்சியால் தோற்று விக்கப்பட்டது.
11. இரண்டாம் உலகப் போரின் முடிவில் உலக அமைதியை நிலைநாட்டத் தோற்றுவிக்கப்பட்ட ஸ்தாபனம்———

12. ஐ. நாவில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளும் இடம் பெறும் சபை————
13. உலக உயர்நீதி மன்றம் கூடும் இடம்————
14. ஸ்ரீலங்காவின் தற்போதைய ஜனாதிபதி————
15. இந்தோசீனாவில் அடங்கிய பகுதிகள்————

II. குறுகிய விடைகள் எழுதுக.

1. "ஜப்பானின் தந்தை" எனப்பட்டவர் யார்?
2. "மஞ்சள் பயம்" என்றால் என்ன?
3. ரஷ்யக் கடற்படையை ஜப்பான் எங்கு முறியடித்தது?
4. சன்யாட் சென்னின் கொள்கைகள் யாவை?
5. லெனினின் கொள்கைகள் யாருடைய கருத்துகளை அடிப்படையாகக் கொண்டவை?
6. காந்தியடிகள் துவக்கிய இயக்கத்தை விளக்குக.
7. சர்வதேச சங்கம் எங்கு, யாரால் அமைக்கப்பட்டது?
8. ஐ. நா. நிறுவனத்தின் அடிப்படைக் கொள்கை என்ன?
9. 'வீடோ' என்றால் என்ன?
10. இரண்டாம் உலகப் போருக்குப் பின் தோன்றிய ஆசிய சுதந்திர நாடுகள் எவை? ஆப்பிரிக்க சுதந்திர நாடுகள் எவை?

III. விரிவாக விடைகள் எழுதுக.

1. 'மெய்ஜிப் புரட்சி'யை விளக்குக.
2. ரஷ்யப் புரட்சியில் லெனினின் பங்கை விவரி.
3. சர்வதேச சங்கம் ஏன் தோல்வியுற்றது?
4. இந்திய விடுதலை இயக்கத்தைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.
5. ஐ. நா. ஸ்தாபனத்தின் நோக்கங்களையும் அது செய்திருக்கும் பணிகளையும் விளக்குக.

பயிற்சி

1. இரண்டாம் உலகப் போருக்குப் பின் தோன்றிய ஆசிய ஆப்பிரிக்க நாடுகளைத் தனித்தனி வண்ணங்களிட்டுக் காட்டவும்.
2. தற்கால ஆசிய ஆப்பிரிக்கத் தலைவர்களின் பெயர்ப் பட்டியலையும், படங்களையும் சேகரிக்கவும்.

வரலாற்றுக் கால அட்டவணை

கி. மு. 2000	இந்தியாவில் ஆரியர் குடியேற்றம்
கி. பி. 570	முகம்மது நபியின் பிறப்பு
கி. பி. 622	ஹிஜ்ரத்
கி. பி. 11-16 ஆவது நூற்றாண்டு	இடைக்காலம்
கி. பி. 7 ஆவது நூற்றாண்டு	காஞ்சியில் பல்லவர் ஆட்சி
கி. பி. 9-12 ஆவது நூற்றாண்டு	தஞ்சாவூரில் சோழப் பேரரசர்கள்
கி. பி. 1347	பாமினி இராஜ்யம் தோன்றுதல்
கி. பி. 1336	விஜயநகரம் அமைக்கப்படுதல்
கி. பி. 1565	தலைக்கோட்டைப்போர்
கி. பி. 16 ஆவது நூற்றாண்டு	மதச்சீர்திருத்த இயக்கம்
கி. பி. 1526-1707	இந்தியாவில் மொகலாயப் பேரரசு
கி. பி. 1368-1644	சீனாவில் மிங் வம்சம்
கி. பி. 1644-1911	சீனாவில் மஞ்சு வம்சம்
கி. பி. 1643-1715	பதினான்காம் லூயி
கி. பி. 1689-1725	மகா பீட்டர்
கி. பி. 1740-1786	மகா பிரடரிக்
கி. பி. 1775-1783	அமெரிக்க சுதந்திரப் போர்
கி. பி. 1789	பிரெஞ்சுப் புரட்சி.
கி. பி. 1769-1821	நெப்போலியன்
கி. பி. 1871	ஜெர்மனி ஐக்கியமடைதல்
கி. பி. 18-19 ஆவது நூற்றாண்டு	தொழில், விவசாயப் புரட்சிகள்

கி. பி. 1868 மெய்ஜிப் புரட்சி

கி பி 1911 சீனப் புரட்சி

கி. பி. 1939-1945 இரண்டாம் உலகப் போர்

கி. பி. அக். 24, 1955 ஐ. நா. ஸ்தாபனம் நிறுவப்படுதல்

கி.பி. ஆக. 15, 1947 இந்தியா சுதந்திரமடைதல்

Wrapper Printed in Offset by Rathna Offset Printers, Madras-14.